FADE-IN

1. EXT - PLATFORM - DAY

கருணை வடிவான ஒரு பெண்ணின் முகம் திரை முழுவதும்.. Camera மெதுவாக மேலெழும்ப..

அந்தப் பெண் Platform-ல் கிடக்க..

அவள் பின்னந்தலையிலிருந்து சிவப்பு ரத்தம் Platform-ல் படர..

CUT TO

1A. EXT - ROAD - DAY

ஒரு ஆட்டோவில் இருந்து ஒரு ஆட்டோக்காரர் ஓடி வர..

மறுமுனையிலிருந்து ஒரு கர்பிணி பதற.. அவளின் கணவன் ஓடி வர..

அவன் பின்னாலிருந்து வேறொரு உருவம் ஓடி வந்து.. (Out of Focus)

Focus-ல் வர..

அவன் சித்தார்த்தன்..

அந்தப் பெண் Platform-ல் கிடக்க.. சில அடி தூரத்தில் ஒரு Scooty கிடக்க.. ஒரு ஓரத்தில் ஒரு ஆட்டோ நிற்க..

மூன்று பேர் கீழே கிடப்பவளிடம் ஏதோ பேச..

கணவன் ஓடி சென்று பார்க்க..

சித்தார்த் ஓடி பக்கத்தில் பார்க்க..

அந்தப்பெண் கண்களால் யாரையோ தேடுகிறாள்..

சித்தார்த் பதறி..

சித்தார்த்
என்ன ஆச்சு..

ஆட்டோக்காரன்
ஒரு தேவிடியாப்பையன் இடிச்சிட்டு போயிட்டான் சார்..

சித்தார்த் அவனை பார்க்க..

சித்தார்த்
நம்பர் நோட் பண்ணுனீங்களா..?

ஆட்டோக்காரன்
தூரத்தில தெரியல சார்..

அந்தப் பெண் முனங்க..

HUSBAND
God.. she is bleeding heavily

ரத்தம் வேகமாக வர..

சித்தார்த்
தூக்குங்க.. தூக்குங்க..

அந்தப் பெண்ணின் தலையை பிடித்து தூக்க..

ஆட்டோக்காரன் ஓடி காலை பிடித்து தூக்க..

Husband மற்றொரு காலை பிடித்து தூக்க..

ஆட்டோக்காரன்
உள்ள தூக்கு.. தூக்கு..

சித்தார்த் அந்தப் பெண்ணின் தோளைப் பிடித்து தாங்கி தூக்கி ஆட்டோவின் உள்ளே ஏற.. Husband பின்னால் ஏற..

ஆட்டோக்காரன் தன் சீட்டில் ஏற..

சித்தார்த் திரும்பி Husband-டிடம்..

சித்தார்த்
நான் என் கார்ல follow பண்ணுறேன்

ஆட்டோவில் இருந்து எழ..

அந்தப் பெண் சித்தார்த்தின் கையை கெட்டியாக பிடிக்க..

சித்தார்த் அவளைப் பார்க்கிறான்..

அவள் அவனையே பார்த்து கண்களை மூடித் திறக்க..

சித்தார்த் உட்கார்ந்து அந்தப் பெண்ணின் தலையை தன் மடியில் வைத்துக்கொள்ள..

கர்பிணி பெண் கீழே சிதறிக்கிடந்த செல்லை எடுத்து இணைக்க..

ஆட்டோ கிளம்ப..

HUSBAND
Cindy, you be here.. I will come.. ok?

மனைவி
Go fast dear.. Go fast..

சித்தார்த்
பக்கத்துல என்ன Hospital இருக்கு?

ஆட்டோக்காரன்
கல்யாணி Hospital

சித்தார்த் கீழே குனிந்து அவளைப் பார்க்க..

அந்தப் பெண் சித்தார்த்தையே பார்த்துக் கொண்டிருக்கிறாள்..

CUT TO

2. EXT - ROAD - DAY

Signal பச்சையிலிருந்து சிகப்புக்கு மாற..

ஒரு பைக்கை ஆட்டோ இடிக்க..

பைக் ரோட்டில் சாய..

பைக்காரன் வேகமாக எழுந்து ஆட்டோக்காரனிடம்

பைக்காரன்
டேய் Red Signal கண்ணுல தெரிலயாடா..

ஆட்டோக்காரன் Signal-ஐ பார்க்க..

சித்தார்த்
சாரி சார்..

பைக்காரன்
என்னடா சாரி..

சித்தார்த்
Brother மன்னிச்சிடுங்க.. ஒரு உயிர
காப்பாத்தனும்..

பைக்காரன் உள்ளே பார்க்க..

பெண் ரத்தத்துடன் சித்தார்த் மடியில் கிடக்க..

பைக்காரன் அமைதியாக..

சித்தார்த்
(ஆட்டோக்காரனிடம்)
போண்ணா.. போண்ணா..

ஆட்டோக்காரன் ஆட்டோவை வளைத்து திரும்பி போக..

சிகப்பு Signal..

CUT TO

2A. EXT - HOSPITAL - DAY

ஆட்டோ வந்து நிற்க..

சித்தார்த், ஆட்டோக்காரன், Husband மூவரும் அந்தப் பெண்ணை தூக்கி ஓடி வர..

Hospital Attender-கள் ஓடி வந்து உதவி செய்ய..

ATTENDER
503 க்கு கால் பண்ணு..

ஒருவன் stretcher-ஐ தள்ளிக் கொண்டு வர..

அந்தப் பெண்ணை தூக்கி அதில் வைக்க..

அந்தப் பெண் சித்தார்த்தின் கையை விடாமல் பிடித்திருக்க..

சித்தார்த் மிரட்சியாக அந்த பெண்ணை பார்த்தவாறே ஓட..

lift-ன் உள்ளே stretcher-ஐ தள்ளிக் கொண்டு போக..

அந்தப் பெண் சித்தார்த்தை பார்க்க..

Attender 5th floor button-ஐ அழுத்த..

சித்தார்த் அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்க்க..

lift மூட..

இருள்..

lift திறக்க..

ஒரு Doctor.. இரண்டு நர்ஸ்கள் தயாராக நிற்க..

DOCTOR
What happened..?

சித்தார்த்
யாரோ இடிச்சிட்டு போய்ட்டாங்க..

Doctor அவள் கையை பிடித்து Pulse பார்க்க..

அவள் காதில் இருந்து ரத்தம் வழிய..

சித்தார்த் அதைப் பார்த்து மிரண்டு டாக்டரை பார்க்க..

Doctor நர்ஸிடம்

DOCTOR
Make it fast she is losing her pulse *[Mention Medicine - Trips AB Positive blood]

எல்லோரும் stretcher-ஐ தள்ளி கொண்டு ஓட..

ஒரு நர்ஸ் ஆட்டோக்காரனையும், Husband-யும் தடுக்க..

அந்தப் பெண்ணை Operation Theater-க்கு கொண்டுபோக..

ஒரு பெட்டில் அந்தப் பெண்ணை படுக்க வைக்க..

அந்தப் பெண் சித்தார்த்தின் கையை இறுக்கமாக பிடித்தவாறு இருக்க..

சித்தார்த் புரியாமல் நிற்க..

DOCTOR
*Release him..

ஒரு நர்ஸ் அவளின் கையை பிரிக்க முயல..

அந்தப் பெண் கண்களை திறந்து முனங்க..

நர்ஸ் கைகளை பிரிக்கிறாள்..

அந்தப் பெண் எழுகிறாள்..

எல்லோரும் அதிர்ந்து நிற்க..

சித்தார்த் மிரண்டு அவளைப் பார்க்க..

அந்தப் பெண் திரும்பி சித்தார்த்தை பார்த்து..

பெண்
ப்பா..

பின்னே மடிந்து விழுகிறாள்..

Doctor அவள் Pulse-ஐ பார்த்து.. தன் கண்ணாடியை கழட்டி திரும்ப..

சித்தார்த் புரியாமல் நிற்க..

அந்தப் பெண்ணின் முகத்தில் பேரமைதி..

Doctor சித்தார்தின் தோளில் கைவைத்து

DOCTOR
இந்தப் பொண்ணு உங்களுக்கு
தெரிஞ்சவங்களா?

சித்தார்த் புரியாமல் அந்தப் பெண்ணையே பார்க்க..

ஒரு நர்ஸ் துணியால் அந்தப் பெண்ணின் முகத்தை மூடுகிறாள்..

DOCTOR
அந்த பொண்ணு உங்களுக்கு சொந்தமா..

சித்தார்த்
இல்ல..

DOCTOR
அந்தப் பொண்ணுக்கு தெரிஞ்சவங்க யாராவது
இருக்காங்களா..

வெளியே கைகாட்டுகிறான்..

Doctor வெளியே போக..

சித்தார்த் மெதுவாக வெளியே வர..

தூரத்தில் ஆட்டோக்காரர், Husband நிற்க..

Doctor அவர்களிடம் போய்.. பேச..

Husband-ன் Cell அடிக்க..

Husband எடுத்து

HUSBAND
மேல வாங்க 503

Husband Doctor-ரிடம் ஏதோ சொல்ல..

ஒருவர் ஓடி வருகிறார்..

Husband அவரிடம் போய் ஏதோ பேச..

Doctor-ரிடம் அவர் ஓடிவந்து ஏதோ கேட்க..

Doctor ஏதோ சொல்ல..

அவர்
ஐயோ.. என்ன பெத்தவளே.. என்ன
பெத்தவளே..

கீழே விழுகிறார்..

Husband அவரை தூக்க..

அவர் எழுந்து வந்து Doctor-ரின் காலில் விழுந்து

அவர்
Doctor.. என் உசிர காப்பாத்துங்க.. என்
தெய்வத்தை காப்பாத்துங்க..

Doctor அமைதியாக நிற்க..

ஆட்டோக்காரர் அந்த தந்தையை தூக்க..

தந்தை
கடவுளே என் உசிர எடுத்துக்கய்யா.. என்
புள்ளய உட்டுரு.. ஐயோ.. என் பவாணி..
என்ன பெத்தவளே..

சித்தார்த் திரும்பி நடந்து போய்.. STAIR CASE-ல் இறங்குகிறான்..
கண்களில் இருந்து கண்ணீர் வழிகிறது..

DISSOLVE

TITLE CARD

DISSOLVE

மூன்று நாட்களுக்கு பின்..

3. INT - RECORDING THEATER - DAY

ஒரு குறுகிய நீளமான ரூம்..

ஒருவர் நடந்து போய் மூலையில் இருந்த கதவை திறந்து உள்ளே போக..

பல Violin-களின் Rehearsal செய்யும் சத்தம் கேட்க..

கதவு சாத்தப்பட..

சத்தம் நிற்கிறது..

அமைதி..

POV மெதுவாக தவழ்ந்து கதவருகே போக..

கதவு திறக்க..

சத்தம்..

ஒருவன் வெளியே வர..

POV உள்ளே போக..

உள்ளே இருபது Violinist-கள் Rehearsal செய்ய..

சித்தார்த் வயலினோடு தன் முன்னே இருந்த stand-ல் உள்ள நோட்ஸை வெறித்துப் பார்த்தவாறு இருக்க..

Engineer Room-ல் இருந்து இசையமைப்பாளர் சைகை செய்ய..

எல்லோரும் வாசிக்க..

சித்தார்த் அமைதியாக உட்கார்ந்திருக்க..

டேக் முடிய..

இசையமைப்பாளர்
கொஞ்சம் warm-ஆ வாசிங்க..

CONDUCTOR
Take..

Violinist-கள் ரெடியாக..

சித்தார்த் ரெடியாக..

இசையமைப்பாளர் டேக் சொல்ல.. Conductor சைகை செய்ய..

Violinist-கள் வாசிக்க..

சித்தார்த் வாசிக்க.. அவன் கண்கள் வெறித்தவாறு இருக்க..

டேக் முடிய..

சித்தார்த் வாசிக்கிறான்..

மற்ற Violinist-கள் அவனைத் திரும்பிப் பார்க்க..

சித்தார்த் கண்கள் நிலை குத்தி இருக்க.. அவன் Violin-ல் இருந்து சொல்ல முடியாத சோகம் வெளிவர..

இசையமைப்பாளர் கோபமாக பார்க்க..

Engineer எழுந்து பார்க்க..

சித்தார்த் வாசிக்கிறான்..

மற்ற Violinist-கள் புரியாமல் அவனைப் பார்க்க..

சித்தார்த் வாசித்து முடிக்கிறான்..

3A. INT - ENGINEER CABIN - DAY

இசையமைப்பாளர் Mike Switch-ஐ ON செய்து

இசையமைப்பாளர்
யோவ் நோட்ஸ் முடிஞ்ச பிறகு நீ என்னையா
தனியா எதையோ வாசிக்கிற..

யுகி..

CONDUCTOR
சார்..

இசையமைப்பாளர்
இங்க யாருய்யா Music Director..

CONDUCTOR
Sorry Sir.. டேய் சித்தார்த்..

சித்தார்த் எழுந்து தன் Violin-னையும் Bow-வையும் பெட்டியில் வைத்து..

டேய் சித்தார்த்..

எல்லோரும் அதிர்ச்சியாக பார்க்க..

சித்தார்த் எழுந்து நடந்து போகிறான்.

CUT TO

4. EXT - SWIMMING POOL -DAY

தண்ணீருக்குள் சித்தார்த்தின் முகம்..

கண்கள் திறந்த படி..

REVEAL

Platform-ல் மூச்சிறைக்கின்றான்..

CUT TO

5. EXT - ROAD - DAY

சிவப்பு கார் வந்து நிற்க..

சித்தார்த் இறங்கி போய் Boot-ஐ திறக்கிறான்..

Shoe-ஐ கழட்டுகிறான்..

CUT TO

6. INT - SUBWAY - DAY

படிக்கட்டில் சித்தார்த் இறங்குகிறான்.. காலில் செருப்பு.. சட்டை மடித்து இருக்க.. கையில் Violin.. கண்களில் கூலிங்கிளாஸ்..

நடந்து வந்து கீழே இறங்குகிறான்..

Subway-ல் மக்கள் நடந்து போக..

நடுவே கண்தெரியாதவர்கள் உட்கார்ந்திருக்க..

ஒரு சிறுமி ஒரு டப்பாவைக் காட்டியபடி பாடுகிறாள்..

CUT TO

6A. INT - SUBWAY STEPS - DAY

POV இறங்க..

வயலின் ஓசை கேட்க..

POV இறங்கி நடுவில் வர..

கண்தெரியாதவர்கள் நடுவே உட்கார்ந்து சித்தார்த் Violin வாசிக்கிறான்..

பாதசாரிகள் சிலர் பிச்சை போட..

சித்தார்த் Violin-னில் இருந்து சோகமாக இசை வெளிவர..

---- பாடல் -----

மறுமுனையில் இருந்து ஒருவன் நடந்து வர.. அவன் யுகி..

அவன் காலையில் Music Conduct செய்தவன்..

அவன் நடந்து வந்து எதிர் சுவரில் சாய்ந்து சித்தார்த் வாசிப்பதை கேட்கிறான்..

வாட்ச்சில் டயம் பார்க்கிறான்..

பாடல் முடிகிறது..

CUT TO

7. EXT - ROAD - DAY

POV சிவப்பு காரை கடந்து போக..

யுகி
ஒரு கால்சீட்டுக்கு 9000..அந்த வேலைய
ஒழுங்கா செய்ய முடியல.. இங்க வந்து பிச்ச
எடுக்குற..

சித்தார்த் முகத்தை கழுவி.. தன் சட்டை மடிப்பால் துடைக்க.

யுகி
உன்னால எனக்கு வேல போயிடும்டா..
காலைல ஏன்டா அப்படி behave பண்ணுன..

ஏதோ சத்தம் கேட்க..

சித்தார்த் திரும்பிப் பார்க்க..

ஒருவர் கீழே கிடக்க..

பைக்காரன் அவரை திரும்பி பார்த்து.. வேகமாக வர..

ரோட்டில் இருந்தவர்கள் பெரியவரை தூக்க..

சித்தார்த் கோபமாக ஓட..

யுகி புரியாமல் அவனைப் பார்க்க..

பைக்காரன் வர..

சித்தார்த் அவனை நோக்கி ஓட..

பைக்காரன் லாவகமாக திரும்ப..

சித்தார்த் எட்டி பைக்காரனின் சட்டையை பிடிக்க..

பைக்காரன் விடாமல் பைக்கை ஓட்ட..

சித்தார்த் பைக்காரன் சட்டையை விடாமல் பிடித்துக் கொள்ள.. பைக் சித்தார்த்தை ரோட்டில் இழுத்துக் கொண்டே போக..

யுகி ஓடி பைக்காரனை இழுக்க..

பைக் ரோட்டில் சரிய..

பைக்காரன் கீழே விழ..

ரோட்டில் கிடந்த சித்தார்த் எழுந்து ஓடி வந்து பைக்காரனை அடிக்க..

யுகி சித்தார்த்தை பிடிக்க..

சித்தார்த் திமிறி ஓடி மீண்டும் பைக்காரனை அடிக்க..

பைக்காரன் கை எடுத்து கும்பிட்டு கீழே உட்கார..

யுகி
டேய் சித்தார்த் விடுடா..

சித்தார்த்
(பைக்காரனிடம்)
இடிச்சிட்டு போயிக்கிட்டே இருப்பியா..

பைக்காரன்
Sorry Sir..

சித்தார்த்
என்னடா Sorry..

மீண்டும் அடிக்கின்றான்..

யுகி சித்தார்த்தை இழுக்க..

பைக்காரன்
மன்னிச்சிடுங்க சார்..

சித்தார்த்
என்னடா மன்னிக்கிறது உசிரு போயிருந்தா.. நீ Sorry கேட்டா உசிரு திரும்பி வந்திரும்மா.. உங்களயெல்லாம்.. நிக்க வச்சு சுடனும்டா..

யுகி சித்தார்தை இழுத்து போகிறான்..

பைக்காரன் கீழே தலைகுனிந்து உட்கார்ந்து.. எழுந்து அந்த கிழவரை நோக்கி போகிறான்..

CUT TO

7A. EXT - ROAD - DAY

சித்தார்த் தன் சிவப்பு காரில் சாய்ந்து நிற்க..

எதிரில் நிற்கும் யுகி..

யுகி
என்னடா ஆச்சு உனக்கு இவ்வளவு
Violent-ஆ behave பண்ணுற..

சித்தார்த் அமைதியாக நிற்கிறான்..

யாரோ ரோட்டில விழுறான்..

சித்தார்த்
யாரோ இல்லடா..

யுகி
(உற்றுப்பார்த்து)
அந்த செத்துப்போன பொண்ணு உனக்கு
தெரிஞ்சவளா? அவள எவனோ இடிச்சுட்டு
போயிட்டான்.. அதுக்காக இந்த பைக்காரனை
அடிக்கிறயா?

சித்தார்த்
அந்த பொண்ணு..

யுகி
செத்துட்டா.. இனிமே உயிரோட
வரமாட்டா..

சித்தார்த் அமைதியாகிறான்..

போடா.. போய் ரெண்டு bottle beer
வாங்கி அடி.. அடிச்சிட்டு அந்த பாட்டில
உடைச்சு போட்டு அந்த பொண்ண விட்டு
வெளிய வா..

சித்தார்த் யுகியைப் பார்க்க..

போ..

CUT TO

8. INT - TASMAC - NIGHT

மனிதர்கள் குரங்குபோல் கைநீட்டி சாராயம் கேட்க..

அவர்களை தள்ளிக் கொண்டு சித்தார்த்தும் கை நீட்டுகிறான்..

POV பின்னே போக..

CUT TO

9. EXT - APARTMENT - NIGHT

Security Gate-ஐ திறக்க..

சிகப்பு கார் உள்ளே நுழைகிறது..

ஒரு சுவரில் உட்கார்ந்து ஒருவன்(Plato)பேசிக்கொண்டிருக்க.. இரண்டு Punk-கள் அவன் சொல்வதை கேட்க..

PLATO
Tell me What is the meaning of existence.. நீ எதுக்கு பொறந்திருக்க..

மற்றவனிடம்

நீ எதுக்கு college போற.. நான் எதுக்கு இங்க உட்கார்ந்து பேசுறேன்..

காரில் இருந்து இறங்கும் சித்தார்த்தைப் பார்த்து..

அதோ அவரு வாசிக்கிற Music-க்கு என்ன Meaning

தன் பாக்கெட்டை தடவிப் பார்த்து..

சிகரெட் இருக்கா?

ஒருவன்
No..

Plato இறங்கி ஓடுகிறான்..

சித்தார்த் நடக்க.. கையில் Violin, இடது கையில் இரண்டு Beer பாட்டில்கள்..

PLATO
(ஓடி வந்து)
Bro.. Can you lend me 100 bucks?

சித்தார்த் நின்று முறைக்கின்றான்

இன்னிக்கு நீங்க Play பண்ணுன பாட்டு கேட்டேன்.. Blissful.. அதைப்பத்தி தான் discussion போகுது.. சில்லர ஒரு 100 ரூபாய் இருக்குமா..?

சித்தார்த் பர்ஸிலிருந்து 100 ரூபாய் கொடுக்க..

PLATO
Thanks a ton.

வாங்கி ஓடுகிறான்..

லிப்டின் வெளியே "ஆட்கள் வேலை செய்கிறார்கள் படிக்கட்டை உபயோகிங்கள்" board தொங்க..

சித்தார்த் படிக்கட்டில் ஏறுகிறான்..

ஏதோ சத்தம் கேட்க..

சித்தார்த் நின்று படிக்கட்டு கதவின் வழியே பார்க்க..

ஒரு கணவன் மனைவி சண்டை போடுகிறார்கள்..

சித்தார்த் படி ஏறுகிறான்..

ஒரு பெண் படிக்கட்டில் உட்கார்ந்தபடி ஒரு பையனுக்கு(வயது 11) சாதம் ஊட்ட..

சித்தார்த்
Mahesh how are you?

பையன் பதில் சொல்லாமல் திரும்பி POV-ஐ பார்க்க..

அவன் மனநிலை பாதிக்கப்பட்ட சிறுவன் மகேஷ்

Mahesh POV-ஐ யே பார்க்க..

சித்தார்த் நடந்து ஒரு கதவிற்கு சென்று கையில் கதவை திறக்க..

POV உள்ளே போகிறது..

சித்தார்த் தன் காலால் கதவை சாத்தி நடந்து போய் Violin-னை ஒரு சோபாவில் வைத்து.. Beer பாட்டில்களை டேபிளில் வைத்து..

தன் சட்டையை கழட்டி தூர எறிந்து..

Kitchen-க்குள் சென்று ஒரு கிளாசை கழுவி.. ஒரு ஆணியில் தொங்கிய opener-ரை எடுத்து வந்து டேபிளில் வைத்து..

பேண்ட்டைக் கழட்டி தூர எறிந்து..

பாத்ரூம் போகிறான்..

CUT TO

10. INT - BATHROOM - NIGHT

Shower-ல் சித்தார்த் கண்களை மூடி நிற்க..

*அந்தப் பெண் சித்தார்த்தின் கையை பிடித்து இழுக்க..

சித்தார்த் கண்களை திறக்கின்றான்..

CUT TO

10A. INT - HOUSE - NIGHT

சித்தார்த் ஒரு shorts அணிந்து தலையை துவட்டிக் கொண்டே வர..

Cell அடிக்க..

செல்லில் "AMMA" என்று வர..

சித்தார்த் வந்து Opener-ஐ பார்க்க.. டேபிளில் Opener இல்லை..

சித்தார்த் புரியாமல் நிற்கிறான்..

Cell அடிக்கிறது..

சித்தார்த் நடந்து போய் ஆணியில் பார்க்க.. Opener இல்லை..

சித்தார்த் புரியாமல் நிற்கிறான்..

Cell அடிக்க..

சித்தார்த் Cell-ஐ எடுத்து ON செய்து

சித்தார்த்
அம்மா.. i will call you later

மறுமுனை
..

சித்தார்த்
Bye..

Cell-ஐ டேபிளில் வைத்து..

கீழே குனிந்து பார்க்கிறான்..

எழுந்து தன் இடுப்பில் கை வைத்து நிற்கிறான்..

CUT TO

Bed-ல் உட்கார்ந்திருக்கிறான்..

டேபிளில் இருந்த Beer பாட்டிலை பார்க்கிறான்..

CUT TO

சித்தார்த் பெட்டில் தூங்குகிறான்..

ஏதோ சத்தம் கேட்கிறது..

சித்தார்த் அதிர்ந்து எழுகிறான்..

ஏதோ சத்தம் கேட்கிறது..

பெட்டில் இருந்து இறங்குகிறான்..

சத்தம் ஹாலில் கேட்கிறது..

லைட்டை போடுகிறான்..

கதவில் ஏதோ பிராண்டுவது போல கேட்கிறது..

சித்தார்த் புரியாமல்.. கதவருகே வந்து..

சித்தார்த்
யாரு.. யாரு..

சத்தம் நிற்கிறது..

சித்தார்த் வேகமாக கதவைத் திறக்க..

அதிர்கிறான்..

வெளியே Mahesh நிற்கிறான்..

சித்தார்த் கீழே குனிந்து..

சித்தார்த்
Mahesh என்ன பண்ற.. தூங்கல?

Mahesh சித்தார்த்தின் வீட்டின் உள்ளே பார்க்க..

CUT TO

10B. EXT - HOUSE - NIGHT

சித்தார்த்
வா..

Mahesh-ஐ இழுத்துக் கொண்டு சித்தார்த் Corridor-ல் நடந்து போக..

Mahesh சித்தார்த்தின் கதவையே பார்க்க..

சித்தார்த் திரும்பி பார்க்க..

எதுவும் இல்லை..

சித்தார்த்
அங்க என்ன பாக்குற வா..

Mahesh-ன் வீட்டு கதவு திறந்து இருக்க..

சித்தார்த் கதவை தட்டி..

மகேஷ் அம்மா.. மகேஷ் அம்மா

V.O
யாரு..

பதறி..

மகேஷ்.. மகேஷ்

வெளியே ஓடி வர..

சித்தார்த் வீட்டின் வாசலில் இருந்த POV பார்க்கிறது..

சித்தார்த் திரும்பி நடந்து வருகிறான்..

POV பின்னால் நகர்ந்து வீட்டின் உள்ளே போக..

சித்தார்த் நடந்து உள்ளே வர.. குளிர்கிறது..

AC-ஐ off செய்து.. பெட்டில் படுக்க..

POV அவனை ஒரு மூலையிருந்து பார்க்கிறது..

DISSOLVE

11. INT - HOUSE - DAY

Alarm அடிக்க..

சித்தார்த்தின் கை அதை off செய்து.. திரும்பி.. போர்வையை இழுத்து தூங்குகிறான்..

கண் விழிக்கிறான்..

எழுந்து தன் மேல் இருக்கும் போர்வையைப் பார்க்கிறான்..

எழுந்து நிற்கிறான்.. போர்வையையே பார்க்கிறான்..

CUT TO

11A. INT - BATHROOM - DAY

Shower-ல் நிற்கிறான்..

CUT TO

11B. INT - HOUSE - DAY

டீ குடிக்கின்றான்.. பெட்டைப் பார்த்துக்கொண்டே..

MUSIC

Shoe lace-ஐ கட்டுகிறான்..

CUT TO

12. INT - STUDIO - DAY

சித்தார்த் Solo வாசிக்க ..

CUT TO

12A. EXT - ACCIDENT ROAD - DAY

சித்தார்த் அந்த பெண் கிடந்த இடத்தை பார்க்கிறான்..

CUT TO

13. INT - SUBWAY - NIGHT

சித்தார்த் வாசித்து முடிக்கிறான்..

வயலினை தன் பெட்டியில் வைக்க..

சிறுமி சித்தார்த்தின் கையை பிடித்து..

சிறுமி
மாமா இன்னிக்கி எங்கள ரோட்டுல கொண்டு போய் விட்றீங்களா..

சித்தார்த்

(புரியாமல்)
எதுக்கு.. நீதானே எல்லோரையும் கூட்டிட்டு போவ..

சிறுமி திரும்பி படிக்கட்டை பார்க்கிறாள்..

சித்தார்த் சிறுமியை பார்க்கிறான்..

படிக்கட்டில் நான்கு பேர்.. இருவர் உட்கார்ந்திருக்க, இருவர் நிற்க..

சிறுமி திரும்பி சித்தார்த்தைப் பார்க்க..

சித்தார்த் பர்ஸிலிருந்து ஒரு 200 ரூபாயை அவளிடம் கொடுத்து..

அவள் கன்னத்தை தடவி திரும்பி நடந்து போகிறான்..

சிறுமி தன் கண்பார்வையற்ற குடும்பத்தை கூட்டிக்கொண்டு படிக்கட்டை நோக்கி நடக்க..

நான்கு பேர் எழுந்து நடந்து வர..

சிறுமி நிற்கிறாள்..

தாத்தா
(சிறுமியிடம்)
என்னம்மா..

சிறுமி அவர்களை திருப்பி மறுபுறம் நோக்கி அழைத்துச் செல்ல..

இரண்டு பேர் ஓடி வந்து..

சிறுமியின் பையை புடுங்க..

சிறுமிப் பையை விடாமல் இழுக்க..

அவன்
ஏ.. கொடுடி

தாத்தா
பாப்பா..

சிறுமி போராட..

மற்றவர்
ஒன்னு போடுடா..

தாத்தா ஒருவனை தடவி பிடித்து..

தாத்தா
தம்பி.. டேய் தொண்ட கிழிய பாடி கெடச்ச பணம்டா.. அதை இப்படி தட்டி பறிக்கிறிங்களே..

அவன் அவரை அடிக்க..

அவர் கீழே விழ..

சிறுமி

தாத்தா..

பையைக் கீழே போட்டு ஓடிவந்து தாத்தாவை தூக்க..

ஒருவன் பையை எடுத்து காசை எடுத்து எண்ணிக் கொண்டே திரும்பி நடக்க..

மற்றவர்களும் நடக்க..

ஒருவன்
எவ்வளோ..

எண்ணியவன்
ஒரு Half-க்கு தேரும்

மற்றவர்கள் நடந்து.. நிற்கிறார்கள்..

எதிரில் சித்தார்த் நிற்கிறான்.

ஒருவன்
என்னடா பின்னால போனவன் முன்னால
வர்ரான்..

தலைவர்
டேய் என்ன Heroism மா..

சித்தார்த் லேசாக தலையாட்டுகிறான்..

ஒருவன்
டேய் ஓரம்போ.. உன்ன உடச்சு உன்
பெட்டியில பேக் பண்ணிடுவேன்..

சித்தார்த்
Try பண்ணு..

இருவர் ஓடி வந்து சித்தார்த்தை அடிக்க..

------- FIGHT -------

கடைசியில் ஒருவன் ஒரு குப்பை தொட்டியை தேடி பாட்டிலை எடுத்து, சுவரில் உடைத்து ஓடி வர..

சித்தார்த் அவனை எதிர்கொள்ள..

ஓடி வந்தவன் கால் தடுக்கி கீழே விழ..

சித்தார்த் புரியாமல் பார்க்க..

அவன் திரும்ப..

அவனின் விலாவில் பாட்டில் குத்தி இருக்க..

மற்றவர்கள் ஓடிவந்து அவனை தூக்கிக் கொண்டு போக..

சித்தார்த் யோசித்தவாறு நிற்கிறான்..

CUT TO

14. EXT - HOUSE - NIGHT

காரை நிறுத்தி சித்தார்த் இறங்குகிறான்..

வீட்டை நோக்கி நடக்கிறான்..

தூரத்தில் Plato-வும் அவனது சிஷ்யர்களும் ஏதோ தர்க்க விசாரணையில்..

சித்தார்த் படிக்கட்டில் நடக்க..

பெண் (V.O)
என்னால இனி ஒரு நிமிஷம் இருக்க
முடியாது..

அடி விழும் சத்தம்..

ஒரு பெண் கீழே விழுகிறாள்..

சித்தார்த் நிற்கிறான்..

படிக்கட்டின் கதவை திறந்து பார்க்கிறான்..

கணவன்
போடி.. உன்ன யாரு புடிச்சு வச்சிருக்கா..
போ..

பெண்
உங்கள கேக்க யாரும் இல்லன்ற தைரியத்தில
தானே இப்படி பண்றீங்க..

சித்தார்த் அவளை பார்க்கிறான்..

அந்தப் பெண் சித்தார்த்தைப் பார்த்து.. கண்களை துடைத்துக் கொள்ள..

கணவன்
ஆமாடி யாரும் இல்லனு..

கணவன் திரும்பி சித்தார்த்தைப் பார்த்து..

என்ன?

சித்தார்த் அவனைப் பார்க்க..

மூடிக்கிட்டுப் போடா..

மனைவி
ஏங்க.. அவர எதுக்கு..

அவள் தலைமுடியை பிடித்து..

சித்தார்த் கதவை சாத்துகிறான்..

V.O
எவன்டி அவன்.. POSE கொடுக்கிறான்..
அவன உனக்கு தெரியுமா..

மனைவி (V.O)
ஐயோ.. எனக்கு அவர தெரியாதுங்க..

கணவன்

அவரா..

அடிக்கின்றான்..

சித்தார்த் தலைகுனிந்து நடந்து படிக்கட்டில் ஏறுகிறான்..

படிக்கட்டின் மூலையில் மகேஷ் பந்தோடு நிற்கிறான்..

சித்தார்த் அவனைப் பார்க்க..

சித்தார்த்
ஹாய்..

மகேஷ் அமைதியாக நிற்க..

சித்தார்த் நடந்து சாவியை எடுத்து கதவை திறந்து வீட்டின் உள்ளே போகிறான்..

CUT TO

14A. INT - HOUSE - NIGHT

சித்தார்த் ஏதோ நினைத்தவனாய் கதவின் பின்புறம் சாவியை நுழைத்து தாழ்ப்பாள் போடுகிறான்..

தன் பேக்கிலிருந்து இரண்டு Beer பாட்டிலை டேபிளில் வைக்கின்றான்..

தன் பாக்கெட்டில் இருந்து ஒரு Brown Cover-ஐ எடுத்து கிழித்து.. இரண்டு Opener-களை எடுக்கிறான்..

ஒன்றை டேபிளில் வைத்து..

நடந்து போய் மற்றொன்றை Kitchen கதவின் மேல் இருந்த ஆணியில் தொங்க விடுகிறான்..

அங்கிருந்தவாறே இரண்டு Opener-களையும் பார்க்கிறான்..

நடந்து போய் டேபிளில் இருந்த Opener-ஐ எடுத்து..

இரண்டு பாட்டிலின் நடுவே வைத்து சிரித்து..

சட்டையைக் கழட்டி சோபாவின் மேல் எறிகிறான்..

பேண்டைக் கழட்டி காலை உதற..

பேண்ட் சோபாவின் கீழே போய் விழுகிறது..

பனியனைக் கழட்டி எறிந்து பாத்ரூம் நோக்கி நடந்து போகிறான்..

POV டேபிளைப் பார்த்தவாறு இருக்க..

CUT TO

14B. INT - BATHROOM - NIGHT

Shower-ல் நிற்கிறான்..

CUT TO

14C. INT - HOUSE - NIGHT

பாத்ரூம் கதவை திறந்து தலையை துவட்டியவாறு நடந்து வந்து Wardrobe-ஐ திறந்து ஒரு Shorts-ஐ மாட்டி..

டேபிளை நோக்கி நடந்து வந்து நிற்கிறான்..

முகத்தில் அதிர்ச்சி..

டேபிளில் Opener இல்லை..

வேகமாக நடந்து Kitchen கதவைப் பார்க்க..

ஆணியில் Opener இல்லை..

அதிர்கிறான்..

சுற்றும் முற்றும் பார்க்கிறான்..

ஓடிச்சென்று Kitchen-னில் அடுக்கி இருந்த கத்திகளில் பெரிய கத்தி ஒன்றை எடுக்கின்றான்..

திரும்பி நடந்து வந்து கதவு பூட்டி இருக்கிறாதா என்று சரி பார்க்க..

கதவு பூட்டி இருக்க..

டேபிளுக்கு அடியில் குனிந்து பார்க்கிறான்..

மெதுவாக நடந்து வந்து மற்ற ரூமின் கதவை திறந்து பார்க்கிறான்..

யாருமில்லை..

மீண்டும் ஹாலுக்கு வருகிறான்..

யாருமில்லை..

கத்தியை டேபிளில் வைத்து நடந்து போய் கதவைத் திறந்து..

CUT TO

14D. EXT - HOUSE - NIGHT

சித்தார்த் வெளியே வந்து கதவு சாவியை மூடி..

நடந்து மகேஷின் வீட்டிற்கு வந்து கதவைப் பார்க்கிறான்..

திரும்பி தன் வீட்டைப் பார்க்கிறான்..

கதவைத் திறந்து மகேஷின் அம்மா வருகிறாள்..

மகேஷ் அம்மா
என்ன சித்தார்த்..

சித்தார்த் திரும்பி..

சித்தார்த்
கொஞ்சம் Opener தர்றீங்களா..

அவள் சித்தார்த்தை ஒரு மாதிரியாக பார்க்க..

சித்தார்த்
Please..

அவள் உள்ளே போகிறாள்..

எதிர் சுவரில் சாய்ந்தவாறு உட்கார்ந்திருந்த மகேஷ் தன் கையை பாக்கெட்டில் வைத்தவாறு சித்தார்த்தையே பார்த்துக் கொண்டிருக்க..

V.O
(மகேஷ் அம்மா)
ஏங்க இங்க இருந்த Opener-ஐ பார்த்தீங்களா..

V.O
(கணவன்)
தெரியாது..

அவள் வெளியே வந்து..

மகேஷ் அம்மா
டேய் மகேஷ்.. Opener-ரை பாத்தியா..

சித்தார்த் மகேஷைப் பார்க்க..

மகேஷ் சித்தார்த்தைப் பார்க்க..

டேய்.. Opener-ஐ எடுத்தியா..

மகேஷ் அம்மா அவன் பக்கத்தில் வந்து..

மகேஷ்.. அது என்ன பாக்கெட்டில..

மகேஷ் பாக்கெட்டை மறுகையாலும் மூடிக்கொள்ள..

சித்தார்த் அவனைப் பார்க்க..

மகேஷின் அம்மா அவன் கையை எடுத்து பார்க்க..

என்னடா பாக்கெட்டுல..

மகேஷ் அடம்பிடிக்க..

அவள் இழுக்க..

சித்தார்த் புரியாமல் பார்க்க..

ஏங்க இங்க பாருங்க..

கணவன் மகேஷிடம் வந்து

கணவன்
டேய் மகேஷ் பாக்கெட்டுல என்ன வச்சிருக்க..

கையை இழுக்க.. மகேஷ் அடம் பிடிக்க..

சித்தார்த் பார்க்க..

கணவனும் மனைவியும் ஒரு பெரிய போராட்டம் நடத்தி மகேஷின் பாக்கெட்டில் இருந்து பொருளை வெளியே எடுக்க..

அது ஒரு Opener..

சித்தார்த் அதிர்கிறான்..

மகேஷ் அம்மா
Opener-ஐ எதுக்குடா பாக்கெட்டுல வச்சிருக்க..

எழுந்து வந்து.. சித்தார்த்திடம் கொடுத்து

எதாவது ஒரு பொருள் எடுத்தாண்ணா அத வாங்கவே முடியாது..

சித்தார்த் மகேஷைப் பார்க்க..

மகேஷ் சித்தார்த்தை முறைக்கின்றான்..

சித்தார்த் புரியாமல் Opener-ஐ பார்த்து நடந்து போய் கதவைத் திறந்து டேபிளைப் பார்க்க..

டேபிளில் இருந்த இரண்டு பாட்டில்களும் உடைந்து கிடக்க.. பீர் டேபிளிலிருந்து வழிகிறது..

CUT TO

15. EXT - ROAD - NIGHT

சித்தார்த் எதிர் ரோட்டில் ஒரே இடத்தில் திரும்பி திரும்பி நடக்கிறான்..

நிற்கிறான்..

எதிரில் பார்க்கிறான்..

நடக்கிறான்..

எதிரில் PSYCHIATRIC CENTER என்ற போர்டு இருக்கிறது..

CUT TO

15A. INT - PSYCHIATRIC CENTER - NIGHT

Reception-ல் ஒரு பெண் உட்கார்ந்து உதட்டில் Lipstick பூசுகிறாள்..

போன் சிணுங்க..

அதை எடுத்து..

RECEPTIONIST
Yes Doctor

மறுமுனை
..

Receptionist எதிரில் பார்த்து..

RECEPTIONIST
நாளு Patients Doctor

மறுமுனை கட் ஆக..

Receptionist போனை வைத்து மீண்டும் Lipstick போட..

Reception-ல் நான்கு பேரில் ஒருவனாக சித்தார்த் உட்கார்ந்திருக்க..

சித்தார்த் இடது வலது உட்கார்ந்திருக்கும் இருவரைப் பார்க்க..

இருவரும் அமைதியாக இருக்க..

இடது புறத்தில் இருந்தவரிடம் குனிந்து..

சித்தார்த்
Sir.. I am Siddharth

அவர் அமைதியாக அவனை பார்க்க..

(இடமிருந்தவரிடம்)
நீங்க.. என்ன விஷயமா டாக்டர பார்க்க வந்திருக்கீங்க..

அவர்
சும்மா..

சித்தார்த்
சும்மா..?

அவர் தலையை பிடித்துக் கொண்டே..

அவர்
தலை வீங்குது.. பெரிசா.. அப்படியே பெரிசு பெரிசா ஆகி வெடிச்சிடும் போல இருக்கு..

சித்தார்த்
OH.. ரொம்ப வலி..

அவர்
எங்கப்பா தலைல ஒரு பெரிய கல்ல எடுத்து நச்சு நச்சுனு அடிச்சு.. மண்டை ஓட்ட தூள் தூளா ஆக்குனாத்தான் எனக்கு தலை வலி போகும்..

தலையை பிடித்துக் கொள்ள..

சித்தார்த் வாயைப் பிளந்தவாறு இருக்க..

சிரிப்பு சத்தம் கேட்க..

சித்தார்த் திரும்பி பார்க்க..

வலது புறம் உள்ளவன் சித்தார்த்தை பார்த்து சிரித்து..

தன் விரலை தலையில் வைத்து சுற்றிக்காட்டி பக்கத்தில் உள்ளவன் பைத்தியம் என்பது போல் சைகை செய்ய..

சித்தார்த் பயந்து.. "சிரிக்க வேண்டாம்" என்று முகத்தை மாற்றி சைகை செய்ய..

அவர் அமைதியாகி..

தன் கை கொடுத்து..

அவர்
I am Rakesh Sharma..

சித்தார்த் யோசிக்க..

Not that Rocket Rakesh Sharma..

சிரிக்க..

சித்தார்த் சிரிக்க..

Do you believe in God?

சித்தார்த் சிரித்து..

சித்தார்த்
Actually..

அவர்
(சீரியசாக)
No.. Answer me Plainly.. நீங்க கடவுள நம்புறீங்களா இல்ல..

சித்தார்த்
(புரியாமல்)
ம்.. அது..

அவர் தன் பாக்கெட்டில் இருந்த ஒரு பேனாவை எடுக்கிறார்..

அவர்
இது என்ன?

சித்தார்த்
(எச்சியை முழுங்கி)
பேனா..

அவர்
இது உள்ள கடவுள் இருக்கிறாரா?

சித்தார்த் பெருமூச்சு விட்டு முன்னே Receptionist-ஐ பார்க்க..

Receptionist கண்களில் Kajal போட..

Do you hear me?

சித்தார்த்
Yes Sir..

அவர்
இந்த பேனாவுக்குள்ள என்ன இருக்கு..

சித்தார்த்
Refill..

அவர்
Good.. Refill-க்குள்ள என்ன இருக்கு?

சித்தார்த்
Ink..

அவர்
Ink-க்குள்ள..

சித்தார்த் அவரை பார்க்க..

Ink-க்குள்ள Dye & Water.. Water & Dye.. Nothing but a chemical composition.. Yes?

சித்தார்த்
yes..

அவர்
அதுக்குள்ள என்ன இருக்கு? Atom..

சித்தார்த் சாய்ந்து உட்காந்து அவரைப் பார்க்கிறான்..

அவர்
Atom-குள்ள என்ன இருக்கு.. Nothing.. So God is made of nothing.. So, everything is God..

அவர் குனிந்து Pen-ஐ சித்தார்த்தின் பாக்கெட்டில் வைக்க..

சித்தார்த் பேனாவை எடுக்கப் பார்க்க..

அவர் தடுத்து..

இப்ப கடவுள் உன் பாக்கெட்டுல..

சாய்ந்து அமைதியாக உட்காருகிறார்..

Bell அடிக்க..

ஒருவன் பலமாக சிரித்தபடி வெளியே வர..

RECEPTIONIST
நீங்க போங்க..

சித்தார்த் எழுகிறான்..

CUT TO

15B. INT - DOCTOR ROOM - NIGHT

ஒரு பேனா எதையோ கிறுக்க..

DOCTOR
You say some kind of Paranormal

thing exist in your home..

சித்தார்த் டாக்டரை புரியாமல் பார்க்க..

Are you married?

சித்தார்த்
இல்ல Sir..

DOCTOR
நீங்க எத்தன மணிக்கு தூங்கப் போவீங்க..

சித்தார்த்
(யோசித்து)
எப்ப தூக்கம் வருதோ.. சில Time 2'o clock ஆயிரும் சார்..

DOCTOR
எத்தன மணிக்கு சாப்பிடுவீங்க?

சித்தார்த்
பத்து மணி..

DOCTOR
எவ்வளவு நாளா Liquor குடிக்கிறீங்க..

சித்தார்த்
ஒரு வருசமா..

DOCTOR
எவ்வளவு சாப்பிடுவீங்க?

சித்தார்த்
ஒரு bottle.. எப்பயாவது ரெண்டு..

DOCTOR
சாப்பாடு சாப்பிட்டு பீர் சாப்பிடுவீங்களா இல்ல..

சித்தார்த்
*Doctor.. டேபிள்ல வச்ச Opener காணாம போகுது அதுக்கு என்ன காரணம்..

DOCTOR
Last-அ நீங்க என்ன கனவு கண்டீங்க..

சித்தார்த்
Doctor.. எங்க வீட்டில எதோ நடக்குது.. அது என்னது..

DOCTOR
you see Mister.. என்ன பேரு

சித்தார்த்
சித்தார்த்

DOCTOR
Siddharth.. what you are going

through is Hallucinatory
Projection..

சித்தார்த்
(கோபமாக)
Doctor.. ரெண்டு தடவ டேபிள்ல வச்ச
Opener காணாம போகுது.. நான் கண்ணால
பார்த்து Test பண்ணி..

DOCTOR
opener காணாம போகும் போது நீங்க
டேபிள் பக்கத்திலே இருந்தீங்களா?

சித்தார்த்
நான் Shower-ல குளிச்ச..

DOCTOR
(சிரித்து)
நீங்க Opener-ஐ டேபிள்ல வச்சத யாராவது
பார்த்தாங்களா..?

CUT TO

15C. EXT - PSYCHIATRIC CENTER - NIGHT

சித்தார்த் வெளியே வருகிறான்..

பிளாட்பாரத்தில் இருந்த Dust bin-ஐ உதைக்கின்றான்..

CUT TO

16. EXT - HOUSE - NIGHT

நாய்கள் குரைக்கும் சத்தம் தூரத்தில் கேட்க..

POV சித்தார்த்தின் வீட்டை நோக்கி நகர..

CUT TO

16A. INT - HOUSE - NIGHT

பெட்டில் சித்தார்த் படுத்திருக்க..

REVEAL..

பக்கத்தில் யுகி படுத்திருக்க..

இருவரும் மேலே பார்த்தவாறு படுத்திருக்க..

யுகி
இந்த வீட எப்படா வாங்கினீங்க..

சித்தார்த்
3 வருஷத்துக்கு முன்னாடி.. ஏன்..

யுகி
இல்ல.. நீங்க வர்றத்துக்கு முன்னாடி
யாராவது இந்த வீட்டில தற்கொலை

பண்ணிக்கிட்டாங்களா..

சித்தார்த்
இது புது வீடுடா.. நாங்க தான் 1st Resident

யுகி
ஆசை நிறைவேறாம தற்கொலை பண்ணிக்கிட்டா அவங்க ஆவியா..

சித்தார்த்
(எரிச்சலாகி)
நான் தைரியமா இருக்கத்தான் உன்ன இங்க வந்து படுக்க சொல்லிருக்கேன்..

யுகி
எனக்கு பயமா இருக்குடா..

சித்தார்த்
நான் பக்கத்தில இருக்கிறன்ல தைரியமா இரு..

சித்தார்த் லைட்டை Off செய்கிறான்..

பாதி இரவில் இருவரும் படுத்திருக்க..

யுகி
நீ Exorcist படம் பார்த்திருக்கியா..

சித்தார்த்
ம்..

யுகி
அதுல அந்த பேய் படிக்கட்ல தலைகீழா

சித்தார்த் எழுகிறான்..

சித்தார்த்
வாய மூடிக்கிட்டு ஒழுங்கா படு.. இல்ல..

படுக்கிறான்..

CUT TO

16B. EXT - HOUSE - NIGHT

ஒரு POV மெதுவாக ஏற..

படிக்கட்டின் முனை வந்து திரும்ப..

மகேஷ் கதவை திறந்து வெளியே வந்து நிற்கிறான்..

CUT TO

16C. INT - HOUSE - NIGHT

சித்தார்த்தும், யுகியும் தூங்க..

POV நகர்ந்து சுவரின் மேல் ஏறி..

இருவரின் மேல் வந்து பார்த்து.. நகர்ந்து மெதுவாக கீழே வந்து பெட்டின் அடியில் வந்து ஏறி.. மெதுவாக இருவரும் படுத்திருந்த இடைவெளியில் புகுந்து போக..

சித்தார்த் முணுங்க.. POV நிற்கிறது..

TOP ANGLE

சித்தார்த்தும், யுகியும் அமைதியாக படுத்திருக்க..

யாரோ தள்ளுவது போல் யுகி மெதுவாக பெட்டிலிருந்து நகர்கிறான்..

விளிம்பிற்கு வந்து சில வினாடிகள் நின்று..

பொத்தென்று கீழே விழுகிறான்..

யுகி லேசாக கண் திறந்து பார்த்து..

தரையை தடவி..

திரும்பி பார்த்து.. தான் பெட்டில் இல்லையென்று உணர்ந்து மெதுவாக எழுந்து பெட்டில் போய் ஏறி படுக்கின்றான்..

சிறிது நேரம் அமைதி நிலை..

மீண்டும் யாரோ தள்ளுவது போல் நகர..

யுகி
டேய் சித்தார்த்.. டேய் சித்தார்த்..

நகர்ந்து நிற்க..

சித்தார்த்
(தூக்கத்தில்)
ம்..

யுகி
தள்ளாம படுடா..

சித்தார்த்
நான் தள்ளலடா..

யுகி நகர்கிறான்..

யுகி
டேய்..

சித்தார்த் திரும்ப..

POV நடுவில் இருந்து வெளியே வர..

இருவரும் திரும்பி ஒருகளித்து ஒருவரை ஒருவர் பார்த்தவாறு படுக்க..

யுகி
ஏன்டா தள்ளுற..

சித்தார்த்
நான் எங்கடா தள்ளுறேன்..

கண்களைத் திறக்கின்றனர்..

முகத்தில் பயம்..

அமைதி..

இருவரும் மல்லாந்து படுத்து.. சுற்றி முற்றி பார்க்க..

யாருமில்லை..

முகத்தில் ஆறுதல்..

திடீரென்று யுகியின் காலை யாரோ பத்து பேர் இழுத்தது போல கீழே போக..

யுகி அலற..

சித்தார்த் எழுந்து உட்கார..

யுகி ஒரு சுவரில் போய் விழ..

இருவரும் புரியாமல்.. வாயை திறக்க முடியாமல் பார்த்து நடுங்க..

யுகி தலையில் யாரோ கொட்டியது போல் கீழே சரிய..

யுகி
(தலையில் கைவைத்து)
அம்மா..

சித்தார்த்
யுகி..

யுகி எழ..

அவன் லுங்கியை எதோ பிடித்த இழுக்க..

யுகி தடுமாறி கீழே விழுந்து.. நகர.. லுங்கி அவிழ்ந்து போக..

சித்தார்த் படுக்கையை விட்டு எழுந்து ஓட..

கதவு தானாக திறக்க..

யுகியும், சித்தார்த்தும் வெளியே அலறி ஓடுகிறார்கள்..

மகேஷ் அவர்கள் ஓடுவதைப் பார்த்து..

நடந்து வந்து..

சித்தார்த் வீட்டிற்குள் போக..

கதவு சாத்திக்கொள்கிறது..

CUT TO

17. EXT - MOUNT ROAD - NIGHT

சித்தார்த் Shorts-ஓடும், யுகி Underwear-ஓடும் ஒரு Platform-ல் நிற்க..

போகும் வாகனங்கள் இவர்களை ஆச்சரியத்தோடு பார்க்க..

ஒரு போலீஸ் வேன் வந்து நிற்க..

INSPECTOR
டேய்.. யாருடா நீங்க.. என்ன இது..

யுகியும், சித்தார்த்தும் பயம் போகாமல் நடுங்கிக்கொண்டே நிற்க..

Inspector இறங்கி வருகிறார்..

ஏன்டா ரோட்லே வந்து..

யுகி
சார்.. நாங்க நல்ல குடும்பத்தில இருந்து வர்றோம் சார்..

INSPECTOR
ஜட்டியோடவா..

சித்தார்த்
எங்க வீட்ல பேய் இருக்கு சார்..

INSPECTOR
(புரியாமல்)
என்னது பேயா..?

யுகி
ஆமா சார்..

INSPECTOR
இந்த Exorcist படத்தில பேய் படிக்கட்டுல தலைகீழ வருமே அது மாதிரியா..

யுகியும், சித்தார்த்தும் அதிர்ச்சியாக.. ஒருவரை ஒருவர் பார்த்து கொள்ள..

INSPECTOR
என்னடா படம் ஓட்டுறீங்களா..?

யுகி
கொஞ்சம் Cell-ல குடுங்க சார்.. என் Friend வீட்டுக்கு போன் பண்ணி Dress எடுத்தார சொல்லனும்..

Inspector புரியாமல் பார்க்க..

யுகி
சார் நம்புங்க சார்..

அவர் காலை தொட.. *

சித்தார்த்தும் தொட..

INSPECTOR
யோவ் 304.. நம்ம கீழ்பாக்கம் ஆஸ்பத்திரில இருந்து யாராவது Escape

ஆகிட்டாங்களான்னு கேளு..

சித்தார்த்
சார் நாங்க ரெண்டு பேரும் Violinists.. இளையராஜா சார் பாட்டெல்லாம் Play பண்றோம்..

யுகி
கொஞ்சம் Cell கொடுங்க சார்.. .

Inspector அவர்களை நம்பாமல் Cell-ஐ எடுத்து

INSPECTOR
நம்பர் சொல்லு..

CUT TO

18. INT - TEA SHOP - DAY

சித்தார்த்தும், யுகியும் லுங்கிகள், பெரிய T-Shirt-கள் அணிந்திருக்க.. டீ குடிக்கிறார்கள்.. எதிரில் ஒருவன்(பத்ரி) டீ குடிக்க..

சித்தார்த்தும் யுகியும் அவனை உற்றுப் பார்க்க..

அவன் அமைதியாக யோசித்து..

பத்ரி
Solve பண்ணிடலாம்..

யுகி
எப்படி..

பத்ரி
கொஞ்சம் செலவு ஆகும்டா..

சித்தார்த்
எவ்வளோ ஆனாலும் பரவாயில்லடா.. எனக்கு இந்த Problem-ல இருந்து வெளிய வரணும்டா..

யுகி
எப்படிடா Solve பண்ணுவ..

பத்ரி
ஆவி அமலா..

CUT TO

19. EXT - HOUSE - DAY

ஒரு Call Taxi வந்து நிற்க..

இரண்டு பேர் இறங்க..

ஒரு 30 வயது பெண்(ஆவி அமலா) கண்களில் கூலிங் கிளாஸ்..

ஒரு 35 வயது ஆண் (ராஜேஷ்) கையில் ஒரு பெட்டி..

19A. EXT - HOUSE - DAY

யுகி சித்தார்த்திடம் சாவியை வாங்கி கதவை திறந்து விட..

அமலா உள்ளே நடந்து போகிறாள்.. ராஜேஷ் தொடர..

உள்ளே போய் நிற்கிறாள்..

வெளியே சித்தார்த், யுகி, பத்ரி நிற்க..

அமலா ராஜேஷைப் பார்த்து தலையாட்ட..

ராஜேஷ்
(வெளியே பார்த்து)
உள்ள வாங்க..

மூவரும் உள்ளே வர..

சித்தார்த்தும், யுகியும், பத்ரியும் உள்ளே வர..

யுகி லுங்கியைப் பிடித்துக் கொள்ள..

அமலா தரையில் ஏதோ தேடிக் கொண்டே வீட்டை ஆராய்கிறாள்..

ராஜேஷ் ஒரு டேபிளை இழுத்து நடு ஹாலில் போட..

டேபிள் மேல் இருந்த சில பொருள்களை சித்தார்த் எடுத்து வேறு இடத்தில் வைக்க..

ராஜேஷ் பெட்டியை கீழே வைத்து.. திறந்து ஒரு சிகப்பு துணியை எடுத்து டேபிளில் விரித்து.. ஒரு நோட்டுபுக்கையும், பென்சிலையும் வைக்க..

ஒரு கண்ணாடி டம்ளரை எடுத்து.. Kitchen Tap-ல் தண்ணீர் பிடித்து..டேபிளில் வைக்க..

அமலா சித்தார்த்தின் பெட்டிற்கு வந்து, பெட்டை உற்றுப் பார்த்து கை நீட்ட..

எல்லோரும் புரியாமல் பார்க்க..

ராஜேஷ் ஒரு Paint Brush-ஐ அவளிடம் கொடுக்க..

அமலா Brush-ல் பெட்டை கூட்ட..

சித்தார்த் புரியாமல் பார்க்க..

அமலா எதையோ கூட்டி ராஜேஷிடம் கைநீட்டி தரையில் காட்ட..

ராஜேஷ் கிளவ்ஸை கையில் மாட்டி.. நடந்து வந்து அமலா காட்டிய இடத்தில் குனிந்து எதையோ எடுத்து வந்து கண்ணாடி டம்ளரில் போட..

அது ஒரு பெரிய முடி..

யுகி மிரண்டு பத்ரியைப் பார்க்க..

பத்ரி தலையாட்டுகிறான்..

அமலா நடந்து போய் Wardrobe-ஐ முகர்ந்து பார்க்கிறாள்..

நடந்து வந்து ஒரு பீரோவை முகர்ந்து பார்த்து நாற்றமடிப்பது போல் முகத்தை சுளித்து..

நடந்து வந்து சேரில் உட்கார்ந்து கண்களை மூடிக்கொள்ள..

ராஜேஷ் ஒரு நோட்டை டேபிளில் வைத்து..

ஒரு Ink பாட்டிலையும்,ஒரு இறகு பேனாவையும் டேபிளில் வைத்து..

பத்ரியிடம் வந்து ஏதோ காதில் சொல்ல..

பத்ரி சித்தார்த்திடம் வந்து

பத்ரி
டேய்.. 50,000 ரூபாய் கட்டு ஒன்னு எடுத்து
அந்த டேபிள்ல வை..

சித்தார்த்
50,000 ஆயிரமா?

யுகி
Idiot.. சொல்றத கேள்றா..

சித்தார்த் புரியாமல் அமலாவைப் பார்த்துக் கொண்டே.. Bureau-வை திறந்து ஒரு 50,000 ரூபாய் கட்டை எடுத்து வந்து டேபிளில் வைக்க..

ராஜேஷ் பணக் கட்டை எடுத்து அமலாவின் கையில் வைக்க..

அந்த கட்டை கண்திறக்காமல் தடவிப் பார்த்து..

எச்சியைத் துப்பி வலதுபுறம் எறிய.. ராஜேஷ் அதை எடுத்து அவள் பையில் வைத்து.. எழுந்து வந்து பெட்டியிலிருந்த ஒரு துணியை எடுத்து அமலாவின் கைகளை கட்ட..

எல்லோரையும் தள்ளிப் போக சொல்ல..

சித்தார்த், யுகியின் கண்கள் கீழே விழுந்து விடும் அளவுக்கு பெரிதாக..

ராஜேஷ் தண்ணீர் டம்ளரை எடுத்து அமலாவின் தாடையைப் பிடிக்க..

அமலா வாயைத் திறக்க..

ராஜேஷ் டம்ளரை வைக்க..

அமலா தண்ணீர் முழுதும் குடிக்கிறாள்..

ராஜேஷ் டம்ளரை Kitchen Sink-ல் வைக்க..

அமலா தலை குனிந்தவாறு இருக்க..

மற்றவர்கள் என்ன நடக்குமோ என்று பார்க்க..

திடீரென்று அமலா எழுகிறாள்..

பேய் போல் எழுகிறாள்..

கண்கள் விறிய..

அரட்டுகிறாள்..

அமலா

ஈ ரு பா லி

மா வு சா

ரு பா மா வு சா

பிராலி பிராலி

ரத்து ரத்து

சசாச சவாவ

சத்ரு சத்ரு..

இ.. இ.. இ..

ஈ.. ஈ..

நாக்கை வெளியே தள்ளி.. உரட்டி, புரட்டி, அலற..

யுகி காதை பொத்திக் கொள்ள..

சித்தார்த் பயப்பட..

பத்ரி சுவரோடு சாய்ந்து கொள்ள..

அமலா அரட்டி எழமுடியாமல் பிதற்றி.. ஓலமிட்டு சடாரென்று சேரில் உட்கார்ந்து தலை குனிய..

ராஜேஷ் ஓடி வந்து அவள் கட்டை அவிழ்த்து எறிந்து பென்சிலை எடுத்து அமலாவின் கையில் கொடுத்து.. நோட்டை பிரித்து காட்ட..

அமலா பென்சிலால் ஏதோ கிறுக்கி பென்சிலை தூர எரிகிறாள்..

சித்தார்த், யுகி, பத்ரி பார்க்க..

அமலா அமைதியாகிறாள்..

பின்பு சித்தார்த்தை முன்னால் உட்காரச் சொல்லி சைகை செய்ய..

பத்ரி ஒரு சேரை இழுத்து போட..

சித்தார்த் பயந்து உட்கார..

அமலா நோட்டைப் பார்த்து..

அமலா
(ஹிந்தியில்)
ராஜேஷ்
(தமிழில்)
உன் சொந்த ஊர்ல இருக்கிற உங்க வீட்டுக்கு வடக்கால இருக்கிற கேணில ஒரு பச்சப்புள்ள குடிபுகுந்துருக்கு.. அது.. 27 வருஷமா அங்க படுத்துக்கிடக்குது.. அதுக்கு மனசில ரணம்.. அந்த ரணம் ஆறாம உன்ன தேடி

வந்திருக்கு..

சித்தார்த் எச்சில் முழுங்க..

அமலா மீண்டும் நோட்டைப் பார்த்து..

அந்த ரணத்துக்குக் காரணம் உன் சொந்தத்தில
யாரோ செஞ்ச வினை.. அது வயித்தில 4
மாசு சிசு.. அம்மாவும் புள்ளையும் ஒருகளிச்சு
படுத்திருக்காங்க..

யுகி
அந்த கேணிய தோண்டி எடுத்து உடலை
அடக்கம் செஞ்சா..

அமலா யுகியை முறைக்க..

ராஜேஷ்
Interrupt பண்ணாதீங்க..

அமலா அமைதியாக நோட்டை தலைகீழாக திரும்பிப் பார்த்து

பத்து பவுன் தங்கத்தில தொட்டில் செஞ்சு
கொடுங்க.. அத கொண்டு போய் ஆள் அரவம்
இல்லாத காட்டுல புதைச்சுட்டு திரும்பி
பார்க்காம நடந்து வந்துட்டா.. இந்த வீட்டில
நடக்கிற அக்கிரமம் நின்னுடும்..

அமலா நோட்டை டேபிளில் வைத்து கீழே குனிந்து கொள்ள..

ராஜேஷ் டேபிளில் உள்ள பொருட்களை எடுத்து பெட்டியில் வைத்து..

Pack செய்ய..

அமலாவின் பையை டேபிளில் வைக்க..

யுகி
இந்த பரிகாரம் எப்ப பண்றது..

ராஜேஷ்
நாளைக்கே பண்ணுங்க.. எனக்கு தெரிந்த
Jewellery Friend இருக்காங்க..
Cheap-பா முடியும்.

அமலா Bag-ல் கைவிட்டு தடவி.. புரியாமல்

அமலா
(தமிழில்)
ராஜேஷ் பணம் எங்க..

ராஜேஷ்
அந்த Bag-ல்..

அமலா
Bag-ல் இல்ல..

ராஜேஷ் புரியாமல் நடந்து வந்து Bag-ஐ தேடி

ராஜேஷ்
நான்தானே வச்சேன்..

அமலா
அப்ப எங்க போச்சு..

பத்ரி
அவர் பேக்ல வச்சத நான் பாத்தேன் மேடம்..

சித்தார்த் எழுகிறான்..

அமலா டேபிளின் கீழே குனிந்து தேடுகிறாள்..

ராஜேஷ் பெட்டியில் தேடுகிறான்..

அமலா நடந்து வந்து ராஜேஷை அறைகிறாள்..

அவன் பேண்ட் பாக்கெட்டை செக் செய்கிறாள்..

அமலா
(கோபமாக)
எருமை எங்க வச்ச..

ராஜேஷ் புரியாமல் சுற்றம் முற்றும் பார்க்கிறான்..

யுகி சித்தார்த்தை பார்க்க..

யுகியும், பத்ரியும், அமலாவும், ராஜேஷும் கீழே குனிந்து தேட..

சித்தார்த் அமைதியா நிற்க..

அமலா பெட்டின் கீழே பார்க்க..

திடீரென்று ஒரு கை அவள் தலைமுடியை இழுக்க..

அமலா அலறுகிறாள்..

தன்னை விடுவித்துக் கொள்ள முயல..

முடி இழுக்கப்பட..

அமலா கீழே போக..

ராஜேஷ் ஓடி வந்து அமலாவை இழுக்க.. முடி இழுக்கப்பட.. அமலா கதற..

ராஜேஷ் கீழே குனிந்து பார்க்க..

அவன் முகத்தில் ஒரு கை நகங்களால் பிராண்ட..

ராஜேஷ் முகத்தைப் பிடித்துக் கொண்டு கீழே விழ..

அமலா கத்த..

பத்ரியும் யுகியும் ஓடி வந்து அமலாவை இழுக்க.. தலைமுடி பாதி பிய்ந்து
அமலா விடுவிக்கப்பட..

அமலா பயந்து நடந்து வர..

டேபிள் வேகமாக நகர்ந்து அவளை சுவரோடு சாய்த்து அழுத்த..

பத்ரி வெளியே ஓட..

அமலா
ஐய்யோ கடவுளே என்ன விட்டிருங்க.. நான் சொன்னது எல்லாம்..

அறை வாங்குகிறாள்..

பொய்.. பொய்.. நான் சொன்னது எல்லாம் பொய்..

கை எடுத்து கும்பிட்டு அழ..

டேபிள் Move-ஆக.. அமலா வேகமாக வந்து கீழே விழுகிறாள்.

புரண்டு படுக்கிறாள்.. Accident-ஆன இடத்தில் கிடந்த பெண் போல கிடந்து சித்தார்த்தை பார்க்க..

சித்தார்த் புரியாமல் பார்க்க..

எல்லோரும் புரியாமல் பார்க்க..

அமலாவின் உடல் அந்தரத்தில் எழ.. எல்லோரும் அதிர்ச்சியாக..

அமலா சித்தார்த்தை பார்த்து கை நீட்ட..

சித்தார்த் அவள் கையை பிடிக்க..

அமலா
ப்பா..

அமலா கீழே விழ.. நினைவுக்கு வர.. எழுந்து வெளியே ஓட.. ராஜேஷ் ஓடுகிறான்..

சித்தார்த் திக்கு பிடித்தவன் போல் நிற்கிறான்..

கதவு மூடிக்கொள்கிறது..

யுகி வாயடைத்து கீழே ஒண்டி உட்கார..

சித்தார்த் அவனைப் பார்க்க..

பெட்டில் எதோ சத்தம் கேட்க.. இருவரும் திரும்பி பார்க்க..

ஒரு கை அந்த 50,000 ரூபாய் பணக்கட்டை பெட்டில் வைக்கிறது..

CUT TO

20. EXT - CAR - DAY

சித்தார்த்தின் சிகப்பு கார் வர..

சித்தார்த் அமைதியாக ஓட்டுகிறான்..

பக்கத்தில் யுகி..

CUT TO

21. EXT - YUGI HOUSE - DAY

Calling Bell அடிக்க.. ஒரு பெண் திறக்க..(யுகியின் அக்கா)

யுகியும், சித்தார்த்தும் நிற்க..

சித்தார்த் கையில் Suitcase, Bags, Violin

உள்ளே வர..

அக்கா
என்னடா சித்தார்த் ஊருக்கு எங்கயாவது
போறியா..

யுகி
அக்கா.. சித்தார்த் கொஞ்ச நாளைக்கி நம்ம
வீட்டுல தான் தங்குவான்.. மாமாகிட்ட
சொல்லிடு.

அக்கா
என்னடா ஆச்சு.. வீட்ல எதாவது
பிரச்சனையா?

யுகி
அவன் வீட்டுல ஒரு பேய் இருக்கு போதுமா..

அக்கா
போடா லூசு.. சித்தார்த் உள்ள வாடா..

சித்தார்த் உள்ளே போகிறான்..

DISSOLVE

Dining Table-ல் எல்லோரும் உட்கார்ந்து சாப்பிட.. எதிரில் அவர்கள்
குழந்தை ஆர்த்தி..

அக்கா பரிமாறுகிறாள்..

சித்தார்த்
என்னம்மா School இல்லையா..

ஆர்த்தி
Mid Term Exam..

Tap திறக்கும் சத்தம் கேட்க..

அக்கா
ஏன்டி Tap திறந்திருக்கு போய் மூடிட்டு வா..

ஆர்த்தி எழுந்து போகிறாள்..

Kitchen Tap-ஐ மூடுகிறாள்..

V.O
ஏய் அங்க ரசம் இருக்கு எடுத்திட்டு வா..

ஆர்த்தி ரசம் பாத்திரத்தை எடுத்த வர..

Tap Open-ஆக..

ஆர்த்தி ரசப்பாத்திரத்தை கீழே போட..

எல்லோருமே அவளையே பார்க்க..

அக்கா
அறிவு கெட்டவளே சரியா புடிச்சு தூக்கிட்டு வரக்கூடாது.. காலைல தான் வீட கழுவிவிட்டேன்..

ஆர்த்தி Tap-ஐ பார்த்தவாறு நிற்க..

என்ன வேடிக்கை பாக்குற போய் Mat எடுத்திட்டு வா..

ஆர்த்தி
அம்மா Tap திறந்திருக்கு

அக்கா
மூட வேண்டியது தானே..

ஆர்த்தி
மூடுனேம்மா..

சித்தார்த் ஆர்த்தியை பார்க்கிறான்..

அக்காள் போய் Tap-ஐ மூட..

Calling Bell சத்தம் வர..

எல்லோரும் திரும்பி பார்க்க..

மாமா எழுந்து கதவை திறக்க..

யாருமில்லை..

பக்கத்தில் இருக்கும் Wash Basin-னின் Tap திறக்க..

அக்கா ஓடி வந்து Tap-ஐ மூட..

அக்கா
என்னது இது அதுவா திறக்குது..

ஆர்த்தி
அம்மா Tap திறக்குது..

TV ஆன் ஆக..

மாமா
What is happening Da?

யுகி சித்தார்த்தை பார்க்க..

சித்தார்த் அமைதியாக உட்கார்ந்திருக்கிறான்..

ஜன்னல் கண்ணாடி உடைய..

அக்கா
என்னங்க என்ன நடக்குது..

மாமா கதவை சாத்திவிட்டு ஓடி வர..

Calling Bell அடிக்க..

சித்தார்த் எழுகிறான்..

திறந்து இருந்த Tap-ல் கை கழுவுகிறான்..

மாமா கதவை திறக்க..

யாருமில்லை..

இன்னொரு ஜன்னல் உடைய..

எல்லோரும் இங்கும் அங்கும் ஓட..

சித்தார்த் தன் Suit case, Bags, Violin-னோடு வெளியே போகிறான்..

CUT TO

22. INT - HOTEL RECEPTION - DAY

Receptionist card-ஐ கொடுத்து

RECEPTIONIST
Strictly No Smoking Sir.. Have a Great Stay..

சித்தார்த்
Thanks..

ஒரு Bell Boy அவன் luggage-களை வாங்கி lift-ல் ஏற..

சித்தார்த் முகத்தில் எந்த சலனமும் இல்லை..

CUT TO

22A. INT - HOTEL ROOM - DAY

Bell Boy Luggage-களை அலமாரியில் வைத்து நிற்க..

சித்தார்த் 100 ரூபாயை அவனுக்கு கொடுக்க..

அவன் புன்னகை செய்து போகிறான்..

Cell அடிக்க..

BELL BOY
Have a Great Day sir..

சித்தார்த்
(எடுத்து)
அம்மா நான் Recording Theater-ல

இருக்கேன்..

முறுமுனை
..

சித்தார்த்
எனக்கு ஒரு help பண்ணு.. அப்படியே ஒரு பத்து நாளைக்கு போன் பண்ணாத.. சரியா..

மறுமுனை
..

சித்தார்த்
Please..

Cell-ஐ off செய்து, Table-ளில் வைத்து அப்படியே பெட்டில் படுக்கிறான்..

CUT TO

22B. EXT - HOTEL CORRIDOR - DAY

ஒரு POV மெதுவாக நகர..

சித்தார்த்தின் ரூமிற்கு வர.. கதவின் கீழே புக..

சித்தார்த் படுத்திருக்கிறான்..

POV மெதுவாக நகர்ந்து மேலே பார்க்க..

Smoke Detector..

POV Smoke Detector நோக்கி போகிறது..

சித்தார்த் அமைதியாக படுத்திருக்க..

அவன் முகத்தில் தண்ணீர் கொட்டுகிறது..

கண்கள் திறக்க..

முகம் முழுவதும் தண்ணீர் மழை..

Alarm அடிக்க..

CUT TO

22C. EXT - HOTEL CORRIDOR - DAY

Maintenance Department ஆட்கள் ஓடி வர..

Alarm அடித்துக் கொண்டே இருக்க..

Guest-கள் வெளியே வந்து எட்டிப் பார்க்க..

சித்தார்த்தின் ரூம்மிலிருந்து Bell Boy Suitcase-ஐ வெளியே வைக்கிறான்..

CUT TO

24. INT - SUBWAY - NIGHT

கண் தெரியாதவர்கள் உட்கார்ந்திருக்க..

சித்தார்த் Violin வாசிக்கிறான்..

CUT TO

24A. INT - SUBWAY - NIGHT

தலைக்கு Suitcase-ஐ வைத்து காலுக்கு Bag-ஐ வைத்து..

Violin-ஐ நெஞ்சோடு அணைத்தபடி தரையில் பேப்பர் விரிக்கப்பட்டிருக்க..

சித்தார்த் தூங்குகிறான்..

CUT TO

25. INT - SUBWAY - DAY

Cell அடிக்க..

சித்தார்த் எழுகிறான்.. கண்களை சுருக்கி உலகத்தைப் பார்க்கிறான்..

பிச்சைக்காரர்கள் தூங்குகிறார்கள்..

சித்தார்த் Cell-ஐ எடுத்து முகம் சுளித்து..

சித்தார்த்

Hello..

மறுமுனை

..

சித்தார்த்

என்னது..

முகத்தில் அதிர்ச்சி..

CUT TO

26. EXT - SIDDHARTH HOUSE - DAY

சிகப்பு கார் வந்து நிற்க..

அதிலிருந்து சித்தார்த் இறங்கி வீட்டைப் பார்க்கிறான்..

CUT TO

26A. INT - STEPS - DAY

சித்தார்த் படிக்கட்டில் ஏற..

கணவன் மனைவி சண்டை போட..

தன் வீட்டிற்கு வர..

கதவு லேசாக திறந்திருக்க.. உள்ளே அம்மாவும், மகேஷ் அம்மாவும் பேசி

கொண்டிருக்க..

அம்மா சித்தார்த்தைப் பார்த்து

அம்மா
எங்கடா போன..

சித்தார்த் உள்ளே வந்து சுற்றும் முற்றும் பார்க்க..

சித்தார்த்
நீ எப்பமா வந்த..

மகேஷ் அம்மா கிளம்பி வெளியே போக..

அம்மா
அஞ்சி மணிக்கெல்லாம் கிண்டி வந்துட்டேன்.. நல்ல வேள என்கிட்ட Spare சாவி இருந்துச்சு.. அது சரி நீ எந்த ஊர்ல இருந்து வர்ற..

சித்தார்த் தன் Luggage-களை கீழே வைத்து..

மகேஷைப் பார்க்க..

மகேஷ் சித்தார்த்தைப் பார்க்க..

டேய் கேக்குறன்ல..

சித்தார்த்
(நடந்து வந்து)
நீ எதுக்குமா வந்த..

அம்மா
எதுக்கா.. எத்தனைவாட்டி போன் பண்ணுனேன்.. போன் எடுத்தா "அப்பறம் பேசுறேன்.." "போனை வை.." "10 நாள் கழிச்சு பேசுறேன்.." என்னடா என்னாச்சு உனக்கு..

சித்தார்த்
அப்பா எங்க..

அம்மா
மண்டபம் Audit போயிருக்கார்..

சித்தார்த் சேரில் உட்கார..

அம்மா டம்ளரில் டீ எடுத்து வர..

டேய்.. மகேஷ் அம்மா டீ போட்டு கொடுத்திருக்காங்க.. கொஞ்சம் குடி..

கொடுக்க.. சித்தார்த் வாங்குகிறான்..

அம்மா Kitchen-னுக்குள் நுழைந்து..

அம்மா
என்னடா.. வேலைக்காரி எதாவது புதுசா

சேர்த்தியா.. வீடெல்லாம் Neat-ஆ
இருக்கு..

சித்தார்த் புரியாமல் வீட்டை சுற்றிப் பார்க்கிறான்..

V.O
என்னடா பாக்குற..

சித்தார்த்
அம்மா நீ எப்ப ஊருக்குப் போவ..

அம்மா
ஏன்டா.. நான் 20 days leave apply
பண்ணிருக்கேன்..

சித்தார்த் அம்மாவை ஒரு சேரில் உட்கார வைத்து..

கீழே மண்டியிட்டு

சித்தார்த்
அம்மா.. நான் சொல்லறத அமைதியா
கேளு..

அவன் முதுகை தடவி..

அம்மா
என்னடா கண்ணா..

சித்தார்த் திரும்பி சுற்றும் முற்றும் பார்க்க.. குரலை தாழ்த்தி

சித்தார்த்
அம்மா.. இந்த வீட்டில ஒரு பேய்
இருக்குமா..

அம்மா
(புரியாமல்)
என்னது?

சித்தார்த்
நெஜமாம்மா..

அம்மா
(எரிச்சலாக)
ச்சீ.. எந்த AGE-லடா இருக்க.. MARS-க்கு
Satellite அனுப்புறாங்க.. நீ இங்க
பேயிருக்குண்ற.. உனக்கு காலகாலத்தில
கல்யாணம் பண்ணி வச்சா எல்லாம்
சரியாயிடும்.

அம்மா எழ..

சித்தார்த் அவள் காலை பிடித்து இழுத்து மீண்டும் சேரில் உட்கார வைத்து..

சித்தார்த்
அம்மா.. சத்தியமாம்மா..

எழுந்து ஓடி.. வயலின் பாக்ஸை எடுத்து வந்து காலடியில் வைத்து..

என் வயிலின் மேல் சத்தியமாம்மா..

அம்மா அவனைப் பார்த்து..

அம்மா
சத்தியமா?

சித்தார்த்
(தலையாட்டி)
ஆமா?

அம்மா
அந்த பேய காட்டு..

சித்தார்த் எழுந்து சுற்றும் முற்றும் பார்த்து.. அவளைப் பார்த்து.. ஏதோ யோசித்து..

சித்தார்த்
ஒரு நிமிஷம் அப்படியே உட்காரு..

சத்தமாக..

அப்படியே உட்காரு..

வேகமாக வெளியே ஓடுகிறான்..

CUT TO

26B. EXT - HOUSE - DAY

சித்தார்த் மகேஷ் வீட்டை நோக்கி ஓடுகிறான்.. கையில் Violin Box..

சித்தார்த் மகேஷ் வீட்டுக்குள் ஓடுகிறான்..

Kitchen-ல் மகேஷ் அம்மா சமையல் செய்ய..

26C. INT - MAHESH HOUSE - DAY

சித்தார்த் ஓடி பெட்ரூம் வர..

மகேஷ் அப்பா பெட்டின் கீழே உட்கார்ந்து பேப்பர் படிக்க..

சித்தார்த் ஓடி வந்து..

சித்தார்த்
மகேஷ் அப்பா.. எனக்கு அவசரமா ஒரு Beer வேணும்.

மகேஷ் அப்பா
(புரியாமல்)
என்னது..? Beer-ரா.. என்கிட்ட..

சித்தார்த்
டெய்லி நைட்டு பண்ணன்டு மணிக்கு மொட்ட மாடில போய் குடிக்குறது எனக்கு தெரியும் சார்..

அவர் அதிர்ந்து எழ..

மகேஷ் அப்பா
மெதுவா பேசுப்பா..

சித்தார்த்
உடனே எனக்கு ஒரு Beer வேணும் சார்..

மகேஷ் அப்பா
இப்ப எப்படிப்பா..

சித்தார்த்
(திரும்பி)
மகேஷ் அம்மா..

அவர் சித்தார்த்தை நோக்கி.. ரகசிய குரலில்

மகேஷ் அப்பா
கம்முனு இரு நான் தர்றேன்..

மெதுவாக நடந்து எதிரில் இருக்கும் சாமி ரூமுக்குள் செல்ல..

சித்தார்த் நடந்து சென்று பார்க்க..

மகேஷின் அப்பா கீழே சுவரில் சாய்க்கப்பட்டுள்ள ஒரு பெரிய பிள்ளையார் படத்தின் பின்னே கைவிட்டு.. இரண்டு Beer பாட்டிலை எடுக்க.. திரும்பி..

Cool-ஆ இல்லியே பரவாயில்லையா?

சித்தார்த் ஓடி வந்து ஒரு பாட்டிலை பிடுங்கி.. ஓடுகிறான்..

மகேஷ் அப்பா
டேய்..

சித்தார்த் Kitchen-க்கு வந்து..

சித்தார்த்
மகேஷ் அம்மா Opener கொடுங்க.. ரொம்ப அவசரம்..

அவள் பதறி Opener-ஐ தேடி தந்து.. சித்தார்த் கையில் Beer பாட்டிலை பார்த்து..

மகேஷ் அம்மா
என்ன இது..

சித்தார்த்
(ஓடிக் கொண்டே)
மாமா கொடுத்தாரு..

மகேஷ் அம்மா
என்னது..

தலைமுடியை கட்டி நடந்து உள்ளே போக..

V.O
ஏங்க.. எனக்கு ஒரு உண்மை தெரிஞ்சாகனும்..

மூலையில் உட்கார்ந்திருக்கும் மகேஷ் சிரிக்கின்றான்..

CUT TO

26D. INT - HOUSE - DAY

சித்தார்த் உள்ளே ஓடி வர..

அம்மா
எங்கடா போன..

சித்தார்த் ஓடிவந்து டேபிளில் உள்ள பொருள்களை தள்ளிவிட்டு.. Beer பாட்டிலையும், Opener-யும் வைக்க..

என்னடா இது.. வீட்டில Beer பாட்டில்..

சித்தார்த்
ஸ்ஸ்ஸ்..

Opener-ஐ சரியாக வைத்து..

சித்தார்த் அம்மாவின் கையை பிடித்து இழுத்து கொண்டு பாத்ரூம் நோக்கி போக..

டேபிளில் beer பாட்டிலும் Opener-ரும் இருக்க..

CUT TO

26E. INT - BATHROOM - DAY

சித்தார்த்தும் அம்மாவும் நிற்க..

அம்மா
ஏன்டா நீ beer குடிப்பியா?

சித்தார்த்
(ரகசியமாக)
மெதுவா பேசுமா..

அம்மா
(ரகசியமாக)
எத்தன நாள்டா இந்த பழக்கம்..

சித்தார்த்
(ரகசியமாக)
ஞாபகம் இல்லமா..

அம்மா
என்னது..

சித்தார்த் அம்மாவை பொருட்படுத்தாமல் சுவரில் காதை வைத்து கேட்க..

அப்பாவுக்கு தெரிஞ்சா என்னாகும் தெரியுமா?

ஏதோ சத்தம் கேட்க..

சித்தார்த்
ஸ்ஸ்ஸ்..

அம்மாவின் வாயை பொத்த..

அம்மா அமைதியாக..

CUT TO

26F. INT - HOUSE - DAY

POV டேபிளுக்கு கீழே இருக்க..

பாத்ரூம் கதவை திறந்து சித்தார்த்தும் அம்மாவும் வெளியே வர..

சித்தார்த் மெதுவாக நடந்து வந்து நின்று டேபிள் அருகே வந்து நின்று பார்க்க..

அம்மாவும் வந்து பார்க்க..

Camera Raise Up to Reveal Table..

டேபிளில் Beer பாட்டிலும் Opener-ரும் இருந்த இடத்திலே இருக்க..

சித்தார்த் புரியாமல் நின்று அம்மாவை திரும்பி பார்க்க..

அம்மா அவனை அறைந்து..

அம்மா
ஏண்டா Beer குடிக்கிறயா அப்பாவுக்கு
தெரிஞ்சா.. என்னாகும் தெரியும்ல..

சித்தார்த் டேபிளையே பார்க்க..

CUT TO

27. INT - OFFICE - DAY

பத்ரி ஒரு Telephone முன் உட்கார்ந்து திறக்க.. Speaker mode-ல் Ring சத்தம் கேட்க..

எதிரில் சித்தார்த்தும், யுகியும் Tension-ஆக உட்கார்ந்து இருக்க..

பத்ரி எதிரில் ஒரு பேப்பர்..

V.O
(அம்மா)
ஹலோ..

சித்தார்த் நிமிர்ந்து உட்கார..

பத்ரி
Mrs.Janaki Sounder Rajan

V.O
(அம்மா)
Speaking..

பத்ரி
Ma'am.. மண்டபம் Coast Guard-ல
இருந்து Dr. Suresh பேசுறேன்..

V.O

(அம்மா)
மண்டபத்தில இருந்தா?

பத்ரி
Yes Ma'am.. ஒரு சின்ன பிரச்சன..
கொஞ்சம் பதறாம கேளுங்க..

பத்ரி
(பேப்பரை பார்த்தபடி)
இங்க Audit வந்த உங்க Husband
Mr.Sounder Rajan-க்கு ஒரு Minor
Accident.. இடது கால்ல ஒரு சின்ன
Hairline Crack.. இப்ப எங்க
ஹாஸ்பிட்டலதான் இருக்காரு.. அவர நாங்க
வீட்டுக்கு போக சொன்னோம் ஆனா..

பத்ரி சித்தார்த்தை பார்த்து..

அவரு கேட்கமாட்டேன்றார்.. வீட்டுக்கு தெரிய
வேணாம்னு சொல்றார்.. But he needs
somebody's assistance.. எங்க
ஆஸ்பிட்டல்ல Staff facility ரொம்ப
கம்மி.. So யாராவது வந்து அவர கூட்டிட்டு
போனா நல்லா இருக்கும்..

மறுமுனை அமைதியாக இருக்க..

பத்ரி சித்தார்த்தை பார்க்க..

V.O
(அம்மா)
என் நம்பர் உங்களுக்கு எப்படி தெரியும்
Doctor..

சித்தார்த் தலையை முன்னால் கொண்டு போக..

பத்ரி
Well.. உங்க Husband Unconscious-அ
இருக்கும் போது.. அவரு பாக்கெட்ல Check
பண்ணும் போது இருந்த Diary-ல உங்க
நம்பர் இருந்துச்சு.. Sorry to do that..

எதிர் முனையில் அமைதி..

யுகி கட்டை விரலை உயர்த்தி பத்ரியை பாராட்டுகிறான்..

சித்தார்த் போனையே பார்க்க..

V.O
(அம்மா)
Doctor..

பத்ரி
Yes Ma'am..

V.O
(அம்மா)
உங்க Phone-பக்கத்தில இருக்கிற என்

பையன்கிட்ட கொடுக்கிறீங்களா..?

பத்ரி
(மிரண்டு)
Ma'am..

V.O
(அம்மா)
டேய் பொறுக்கி.. சித்தார்த்.. என்னடா உன் Friend வச்சு Drama செய்யறியா.. உங்கப்பா Mandapam Audit-க்கு போயிருக்காருன்னு நான் பொய் சொன்னேன்டா.. உங்கப்பா வீட்ல உக்காந்து 20/20 Cricket பாக்குறாரு..

சித்தார்த் எழுகிறான்..

லீவு போட்டு Cricket பாக்குறேன்னு சொல்லாத.. கத்துவான்னு அவரு தான் பொய் சொல்ல சொன்னாரு.. நீ என்னடானா ஏதோ சித்து வேல எல்லாம் பண்ற.. எதுக்கு என்ன வீட்டை விட்டு கிளப்புற.. ஏதோ பேயின்ன.. இப்ப அப்பா ஆக்ஸிடன்ட்ற.. என்ன Fraud- பண்ற..

சித்தார்த் தலையில் கை வைக்க..

எதாவது பொண்ண வச்சு குடித்தனம் பண்றியா?

சித்தார்த் பதறி

சித்தார்த்
ஐயோ அம்மா.. அதெல்லாம் இல்ல..

V.O
(அம்மா)
வேறென்ன..? நீ வீட்டுக்கு வா கம்பிய காய வச்சு குண்டியில சூடு போடுறேன்..

பத்ரி
Ma'am.. இவளோ violence..

V.O
(அம்மா)
அடி செருப்பால.. நீ வீட்டு பக்கம் வந்த.. விளக்கமரத்துல அடிச்சு பேயோட்டிருவேன்.. டேய் சித்தார்த் எரும.. உனக்கு என்ன வேணும்.. கறிக்கடைல இருக்கேன்.. Chicken-அ.. mutton-அ?

சித்தார்த்
கொஞ்சம் விஷம் வாங்கி கொழம்பு வை..

போனை பத்ரியிடம் புடுங்கி கீழே வைக்கிறான்.. உட்காருகிறான்..

பத்ரி
Problem Unsolved

யுகி முன்னால் டம்ளரில் இருந்த தண்ணீரை பத்ரியின் மூஞ்சியில் ஊத்த..

யுகி
IDEA TANK-க்கு..

பத்ரி
என்ன? நீ எதாவது idea சொல்ல
வேண்டியது தானே!

சித்தார்த்
(எழுந்து)
டேய்.. நான் எவ்வளவு Serious-ஆ
இருக்கேன்.. நீங்க விளையாடுறீங்க..
எங்கம்மாவுக்கு எதாவது ஆக போதுடா..
அந்த பேயி.. எதாவது..!

சுற்றும் முற்றும் பார்க்கிறான்..

அந்த பொண்ணு நெஜம்மாவே எதாவது
பண்ணப்போறாடா..

கண்கலங்க கீழே உட்காருகிறான்..

யுகி அவனை பார்க்க.. பத்ரி எதுவும் சொல்ல முடியாமல் முகத்தை துடைத்து கொள்கிறான்..

CUT TO

28. EXT - HOUSE - NOON

சித்தார்த் அம்மாவும் மகேஷ்ம் நடந்து வர..

அம்மாவின் கையில் காய்கறி கூடை..

V.O
(Plato)
Ma'am..

அம்மா திரும்ப..

Plato நிற்க்கிறான்..

அம்மா
Yes..

PLATO
நீங்க நம்ம சித்தார்த் Mother-அ..

அம்மா
ஆமா..

PLATO
ஒன்னுமில்ல.. அன்னிக்கு சில்லர இல்லனு
சித்தார்த் ஒரு 500 Rupees வாங்குனாரு..
அவரு வீட்ல இருக்காரா..

பர்ஸை எடுக்கிறாள்.. 500 ரூபாய் எடுத்து கொடுக்கிறாள்..

PLATO
Thanks Aunty..

ஓடுகிறான்..

CUT TO

28A. EXT - HOUSE - DAY

அம்மாவும் மகேஷ்ம் உள்ளே வர..

கீழ் வீட்டிலிருந்து சண்டை போடும் சத்தம் கேட்க..

அம்மா வீட்டை பார்த்தவாறு நடக்க..

மனைவி அடிவாங்கி வெளியே வந்து விழ..

அம்மா அதிர்கிறாள்..

மனைவி
ஐயோ.. இப்படி காலைலயே குடிச்சிட்டு
என்ன வந்து இப்படி கொல்றானே..

V.O
வாய மூடுடி.. வாய மூடு..

அம்மா அவளை பார்க்க.. மகேஷ் பார்க்க..

மனைவி
நீ நல்லா இருக்கமாட்டய்யா.. நீ
உருப்படாம..

கணவன் வெளியே ஓடிவந்து மனைவியை எட்டி மார்பில் உதைக்க..

அம்மா
(சத்தமா)
யோவ்..

கணவன் திரும்பி பார்க்க..

என்னய்யா இப்படி எட்டி உதைக்கிற..
அறிவில்ல உனக்கு.. ஒரு பொம்பளைய
இப்படி அடிக்கலாமாயா?

கணவன்
(எரிச்சலுடன்)
ஏய்.. இது என் பொண்டாட்டி.. நான்
அடிப்பேன்.. உதைப்பேன் யார் நீ..

அம்மா
பொம்பள.. பொம்பளைய அடிச்சா பொம்பள
கேட்பேன்..

கணவன் கோபமாக..

மனைவி
ஐயோ.. அம்மா நீங்க போயிருங்க.. அந்த
ஆளு மிருகம்..

கணவன் மனைவியை நடந்து கொண்டே பின்னால் காலை விட்டு உதைத்து நடந்து அம்மாவிடம் வர..

கணவன்
யேய்.. நான் அடிப்பேன்டி.. நீ என்ன பண்ணுவ..

அம்மா
100-க்கு போன் பண்ணுவேண்டா..

கணவன்
எங்க பண்ணு..

V.O
(மகேஷ் அம்மா)
சித்தார்த் அம்மா நீங்க மேல வாங்க..

அம்மா மேலே பார்க்க..

மகேஷின் அம்மா படிக்கட்டில் வேகமாக இறங்கி வர..

அம்மா மீண்டும் கணவனைப் பார்க்க..

கணவன்
போன் பண்ணுடி 100-க்கு..

அம்மா
நான் சும்மா மிரட்டுனேன்னு நெனக்கிறியா..? நில்லுடா..

அம்மா Cell-ஐ எடுத்து நம்பரை தட்ட..

கணவன் அம்மாவின் கழுத்தை பிடித்து கீழே தள்ள..

அம்மா நிலை குலைந்து படிக்கட்டின் விளிம்பில் விழ..

மகேஷ் அம்மா
(ஓடி வர)
ஐயோ..

கணவன்
த்தா.. கழுத்த ஒடச்சிடுவேன்..

மகேஷ் கணவனை பார்த்து கொண்டே இருக்க..

மகேஷ் அம்மா சித்தார்த் அம்மாவை தூக்க..

அம்மாவின் தலையில் இருந்து ரத்தம் வர..

மனைவி ஓடி வந்து சித்தார்த் அம்மாவின் தலையில் ரத்தத்தை பார்த்து..

மனைவி
ஐயோ.. கடவுளே.. யோவ்.. நீ நல்லாயிருப்பியா உன்ன யாருமே கேக்க முடியாதா..?

கணவன் அறைய.. அவள் கீழே விழ..

மகேஷ் படிக்கட்டில் ஏறி நடந்து போகிறான்..

மகேஷ் அம்மா கீழே கிடந்த Cell-ஐ எடுத்து சித்தார்த் அம்மாவின் தலையில் கை வைத்து ரத்தம் வந்த இடத்தை பொத்தி அழைத்துப் போக..

அம்மா அதிர்ச்சியில் உறைந்தவளாய் நடந்து போக..

கணவன் பாக்கெட்டில் கைவிட்டு சிகரெட் பாக்கெட்டை எடுத்து மேலே பார்க்க..

மகேஷ் நடந்து முன்னே போக..

மகேஷின் அம்மா சித்தார்த்தின் அம்மாவிடம் சாவி வாங்கி அழைத்துக் கொண்டு சித்தார்த்தின் வீட்டை திறந்து உள்ளே போக.. சாவி கதவில் இருக்க..

மகேஷ் அவன் வீட்டின் உள்ளே போக..

சித்தார்த் வீட்டின் கதவு மெதுவாக மூட.. சாவி திருப்ப.. தாழ்ப்பாள் மூடுகிறது..

கணவன் சிகரெட்டை டப்பாவில் தட்ட..

மனைவி வீட்டில் அழும் சத்தம் கேட்க..

மேலே மகேஷ் நிற்கிறான்..

கையில் பெரிய பந்து..

கணவன் தீப்பெட்டி எடுத்து பற்ற வைக்க..

குச்சி எரிந்து அணைகிறது..

மீண்டும் பற்ற வைக்க..

குச்சி எரிந்து அணைகிறது..

மீண்டும் ஒரு குச்சியை எடுத்து பற்ற வைக்க..

குச்சி எரிந்து அணைய..

மேலே மகேஷின் கையிலிருந்து பந்து விலகி வருகிறது..

பறந்து வருகிறது..

கணவன் பற்ற வைக்க..

குச்சி அணைய..

கணவன் புரியாமல்.. குச்சியை பார்க்க..

எதோ சத்தம் கேட்க..

கணவன் மேலே பார்க்க..

ஒரு பெரிய பந்து வேகமாய் வந்து அவன் மூஞ்சிய தாக்க..

கணவன் அதிர்ந்து கீழே விழ..

பந்து உருண்டு ஓடி .. சுவரில் மோத..

கணவன் கோபமாக மேலே பார்க்க..

மகேஷ் நிற்கிறான்..

கணவன் வேகமாக படிக்கட்டில் நடந்து வர..

CUT TO

28B. INT - SIDDHARTH HOUSE - DAY

மகேஷின் அம்மா Washbasin-னில் தண்ணீரை ஒரு துணியால் எடுத்து அம்மாவின் தலையிலிருந்த ரத்தத்தை துடைக்க..

CUT TO

28C. EXT - STEP - DAY

கணவன் கோபமாக மேலே வர..

மகேஷ் அமைதியாக நிற்க..

கணவன் மகேஷ் நின்ற Corridor-க்கு வந்து நிற்க..

மகேஷ் மெதுவாக Corridor-ன் நடுவே நகர்ந்து கணவனை பார்க்க..

கணவன் வேகமாக நடந்து மகேஷிடம் போய் கை ஓங்க..

அவன் கை அந்தரத்தில் நிற்க..

கணவன் புரியாமல் மேலே பார்க்க..

அவன் விரல்கள் இரண்டு உடைகிறது..

கணவன் அலறி கீழே விழ..

CUT TO

28D. INT - SIDDHARTH HOUSE - DAY

சத்தம் கேட்டு சித்தார்த் அம்மாவும், மகேஷ் அம்மாவும் திரும்பி பார்க்க..

CUT TO

28E. EXT - SIDDHARTH HOUSE CORRIDOR - DAY

கணவன் கை நீட்டியவாறு Corridor-ல் தரதர வென்று வேகமாக ஊர்ந்து போக..

CUT TO

28F. INT - SIDDHARTH HOUSE - DAY

சித்தார்த் அம்மாவும், மகேஷ் அம்மாவும் பதறி ஓடி வந்து கதவை திறக்கப் பார்க்க..

கதவு பூட்டி இருக்க..

CUT TO

28G. EXT - CORRIDOR - DAY

கணவன் காற்றில் மிதந்து சுவரில் எறியப்பட..

மகேஷ் அமைதியாக அவனை பார்க்க..

கணவன் திரும்பி Corridor-ன் தரையை பார்த்தவாறு கீழே விழ..

தலைமுடி இழுக்கப்பட..

கணவன் படுத்தவாறு தலை தூக்க..

தலை தரையில் மோத..

மீண்டும் தலைமுடியால் தூக்கப்பட்டு

தலை தரையில் மோத..

மீண்டும் தலைமுடியால் தூக்கப்பட்டு

தலை தரையில் மோத..

கதவு தட்டப்படும் ஓசை கேட்க..

V.O
(மகேஷ் அம்மா)
மகேஷ்.. மகேஷ்..

கணவனின் கால் மேலே எழும்ப..

அவன் மிரண்டு திரும்பி பாரக்க..

அவன் அப்படியே சுழற்றப்பட்டு.. காற்றில் எழும்பி மேல் மாடியிலிருந்து
அந்தரத்தில் படுத்தவாறு தொங்க..

கணவன் அலற..

மகேஷ் நகர்ந்து வந்து.. கைபிடியில் சாய்ந்து பார்க்க..

கதவு தட்டப்பட..

கணவன் அந்தரத்தில் தொங்க..

அவன் லுங்கி அவிழ்ந்து காற்றில் பறந்து கீழே போக..

CUT TO

28H. INT - HUSBAND HOUSE - DAY

மனைவி அழுதபடி கணவன் அலறும் சத்தம் கேட்டு ஓடி வந்து மேலே பார்க்க..

அவள் முகத்தின் மேல் லுங்கி போர்த்த..

கணவன் அந்தரத்திலிருந்து Corridor-க்கு இழுக்கப்பட்டு கீழே விழ..

V.O

(சித்தார்த் அம்மா/மகேஷ் அம்மா)
மகேஷ்.. மகேஷ்.. மகேஷ்..கதவ
திறடா..டேய் மகேஷ் கதவ திறடா..

மனைவி பரபரவென்று லுங்கியை முகத்திலிருந்து விலக்க..

மேலே யாரும் இல்லை..

கணவன் அலறும் சத்தமும்.. ஏதோ அடிக்கும் சத்தமும் கேட்க..

மனைவி
என்னங்க...

படிக்கட்டு ஏறி ஓடுகிறாள்..

கணவன் தூக்கபட்டு.. சுவரில் அடிக்கப்பட்டு.. இழுக்கப்பட்டு.. மீண்டும் தரையில் அடிக்கப்பட்டு.. இழுக்கப்ட்டு.. மீண்டும் சுவரில் அடிக்கப்பட்டு..இழுக்கப்ட்டு.. மீண்டும் சுவரில் அடிக்கப்பட..

மனைவி படிக்கட்டில் ஏறி ஓடி வர.. கணவன் தூக்கி வீசப்பட.. படிக்கட்டில் சரிந்து விழுகிறான்..

மனைவி ஓடிவந்து கணவனை பார்க்க..

கணவன் ரத்த வெள்ளத்தில் கீழே மயங்கி கிடக்க..

மனைவி கண்களை அகல விரித்து.. பயந்து பார்க்க..

கதவு தட்டப்படும் ஓசை..

V.O
மகேஷ்.. மகேஷ்.. கதவ தொறடா.. கதவ
தொறடா.. யாராவது கதவ தொறங்க..
யாராவது கதவ தொறங்க..

மனைவி பேயறைந்தவள் போல் நிற்க..

கதவு திறக்க.. சித்தார்த் அம்மாவும், மகேஷ் அம்மாவும் வெளியே வர மகேஷ் நிற்க..

அவன் காதை திருகி..

மகேஷ் அம்மா
(கோபமாக)
டேய்.. ஏன்டா கதவ சாத்தின.?

அவர்கள் திரும்ப..

சத்தம் போட்ட கணவன் சத்தமில்லால் கீழே கிடக்க..

சித்தார்த்தின் அம்மா வாயை பொத்திக் கொள்ள..

மகேஷ் அம்மா மகேஷைப் பார்க்க..

மகேஷ் அமைதியாக நிற்க..

சித்தார்த் அம்மா கீழே கிடந்த மனிதனை ஓடி தூக்க..

மகேஷ் அம்மாவும் ஓடி வந்து தூக்க..

மனைவி கணவனை தாங்கி நடக்க..

மூன்று பெண்களும் அந்த முரட்டு மனிதனை படிக்கட்டில் இழுத்தபடி நடக்கிறார்கள்..

CUT TO

29. INT - SIDDHARTH HOUSE - DAY

ஒரு சேரில் சித்தார்த்தின் அம்மா உட்கார்ந்திருக்க... தலையில் கட்டு.. எதிரே நிற்கும் மகேஷின் அம்மா...

மகேஷ் அம்மா
தலைல என்னாச்சுனு சித்தார்த் வந்து கேட்டா என்ன சொல்லுவீங்க..

CUT TO

அம்மா
வழுக்கி விழுந்திட்டேன்டா..

எதிரில் நிற்கும் சித்தார்த்...

சித்தார்த்
எங்க..

அம்மா
பாத்ரூம்ல..

சித்தார்த்
(பதறி)
முதுக புடிச்சு யாராவது தள்ளுனது மாதிரி இருந்துச்சா..

அம்மா
(புரியாமல்)
என்னது..

சித்தார்த்
நல்லா யோசிச்சு சொல்லுமா..

அம்மா
பாத்ரூம்ல யாருடா வருவா!

சித்தார்த் அம்மாவை கை பிடித்து இழுத்து போகிறான்..

அம்மா
டே... எங்கடா..

வேகமா இழுத்து கொண்டு போய் பாத்ரூம் கதவை திறந்து காட்டி..

சித்தார்த்
எங்க விழுந்த.. எப்படி அடிபட்டுச்சு

அம்மா அவனை ஒரு முறை பார்த்து.. நடந்து பாத்ரூம்க்குள் போய்.. ஒரு சோப்பை எடுத்து..

அம்மா
இந்த சோப்பை எடுத்தேன் கீழே தவறி
விழுந்துடுச்சி.. நான் திரும்பி எடுக்கலாம்னு
குனிஞ்சேன்.. கால் சோப்புல பட்டு.. நான்
இந்த திட்டுல தலைய மோதிட்டேன்..

சித்தார்த் அம்மாவையே பார்த்து..

சித்தார்த்
என் தல மேல அடிச்சு சொல்லு நீ வழுக்கி
விழுந்தது உண்மைதானு..

அம்மா
நம்புனா நம்பு.. நம்பாட்டி போ..

நடந்து போகிறாள்.. சித்தார்த் பாத்ரூமையே பார்க்கிறான்..

CUT TO

30. EXT - HOUSE - NIGHT

எங்கும் அமைதி.. தூரத்தில் நாய்கள் குரைக்க..

CUT TO

30A. INT - HOUSE - NIGHT

பெட்டில் அம்மா தூங்க..

சேரில் உட்கார்ந்தபடி அம்மாவையே பார்த்தபடி சித்தார்த் உட்கார்ந்திருக்க..

DISSOLVE

சோபாவில் படுத்தபடியே சித்தார்த் இருக்க..

V.O
(அம்மா)
டேய் சித்தார்த்.. டேய்..

சித்தார்த் கண் விழிக்க..

அம்மா டீ கொடுக்க..

சித்தார்த் எழுகிறான்..

Washbasin-ல் வாய் கொப்பளித்து, முகத்தை கழுவி வந்து சோபாவில்
உட்கார.. அம்மா டீ கொடுத்து பக்கத்தில் உட்கார்ந்து தன் சேலை
முந்தானையால் தன் மகனின் முகத்தை துடைத்து விடுகிறாள்..

அம்மா
சித்தார்த் உனக்கு என்னடா ஆச்சு..

சித்தார்த் அமைதியாக டீ குடிக்க..

யாராவது நல்ல டாக்டர்கிட்ட போகலாமா?

சித்தார்த்
(திரும்பி)

எனக்கு பைத்தியம் எதாவது புடிச்சிருக்குனு
நெனக்கிறயா..

அம்மா
அது இல்லடா.. ஆவி, பேய், பிசாசுனு..
என்னமோ உளர்ர.. உனக்கு புடிச்சு தானே
இந்த வீடு வாங்கினோம்.. இந்த வீட
வித்துடலாமாடா..

சித்தார்த் அமைதியாக இருக்க..

காலையில அப்பாக்கிட்ட பேசுனேன்டா..
உன்ன கூட்டிடு ஊருக்கு வரச் சொன்னாரு..

சித்தார்த்
என்னால எங்கயும் வர முடியாதுமா..

அம்மா
அம்மா இங்க இருக்கிறது உனக்கு
தொல்லையா இருக்காடா..

சித்தார்த் அம்மாவை திரும்பி பார்க்கிறான்..

கண்களில் கண்ணீர்..

சித்தார்த்..

சித்தார்த்
(உதடுகள் துடிக்க)
நீனா.. எனக்கு உயிருமா..

அம்மா அவனை அணைத்து கொண்டு..

அம்மா
போ.. டிக்கெட் வாங்கிட்டுவா.. நான் மதியம்
பஸ்க்கு கிளம்புறேன்டா..

நம்ப முடியாம சித்தார்த் எழுந்து அம்மாவை பார்க்க..

நல்ல Reclining Seat உள்ள
Travels-ஆ பாத்து Ticket எடு.. 12
மணி நேரம் Journey முதுகு வலிக்கும்..

சித்தார்த் எழுந்து பனியனை கழட்டி பாத்ரூமுக்கு ஓடுகிறான்..

CUT TO

31. EXT - ROAD - DAY

சித்தார்த் Car-ஐ ஓட்டுகிறான்..

கண்களில் வெறுமை..

CUT TO

31A. INT - HOUSE - DAY

அம்மா தன் துணிமணிகளை Bag-ல் வைக்கிறாள்..

டேபிளின் அடியில் ஒரு POV பார்க்கிறது..

CUT TO

31B. INT - TRAVELS OFFICE - DAY

ஒருவன் Ticket Availability-ஐ பார்க்க..

சித்தார்த்
Center Seat தாங்க சார்.. பக்கத்தில
லேடீஸ் இருக்கிற மாதிரி பாத்துக்கங்க..

ஒருவன் 27 என்ற கட்டத்தை Tick செய்ய..

CUT TO

31C. INT - HOUSE - DAY

அம்மா துண்டை எடுத்து பாத்ரூம் நோக்கி நடந்து போக..

POV டேபிளிலின் அடியிலிருந்து பார்க்கிறது..

அம்மா பாத்ரூம் உள்ளே நுழைகிறாள்..

CUT TO

31D. INT - BATHROOM - DAY

அம்மா துண்டை ஒரு Hook-ல் மாட்டி.. திரும்பி ஒரு சோப்பை எடுத்து சுவரில் இருந்த ஒரு சிறிய இடைவெளியில் வைத்து திரும்ப.. சோப்பு நழுவி கீழே விழ..

அம்மா குழாய்களை திறந்து சுடு தண்ணீர் வரும் அளவை சரி பார்த்து..

திரும்பி சேலையை அகற்றி நகர..

வழுக்கி விழுகிறாள்.. - 150 FRAME.

காலோடு சோப்பு நழுவ..

CUT TO

31E. EXT - BATHROOM - DAY

"பட்" என்று சத்தம் கேட்க..

V.O
(அம்மா முனங்கல்)
ம்ங்ம்...மா

டேபிளின் கீழே உள்ள POV துடிக்க..

மெதுவாக POV நகர்கிறது.. பாத்ரூம் நோக்கி போக..

பாத்ரூம் கதவின் பக்கத்தில் வந்து நின்று..

பின்னால் நகர்ந்து.. நின்று

முன்னால் வேகமாக நகர..

எந்த சத்தம் வராமல் இருக்க..

கதவு திறக்க..

POV உள்ளே போக..

சித்தார்த் அம்மா கீழே கிடக்க..

தலையில் இருந்து ரத்தம் வழிந்து.. பாத்ரூமை ஈரமாக்க..

POV பதறி மேலே உயரே போகிறது..

அம்மா மயங்கி கிடக்கிறாள்..

CUT TO

31F. EXT - CAR - DAY

சித்தார்த் காரை ஓட்டி வருகிறான்..

CUT TO

31G. INT - BATHROOM - DAY

POV மேலே இருந்து.. சுற்றி..

கீழே இறங்க..

CUT TO

31H. EXT - BATHROOM - DAY

பாத்ரூம் கதவு திறக்க..

அம்மா தரையில் மயங்கிய நிலையில் நகர்ந்து வருகிறாள்..

POV அம்மா மேல் பார்த்தபடி காற்றில் நழுவ..

அம்மா கீழே நகர..

CUT TO

31I. EXT - HOUSE - DAY

முன் கதவு திறக்க..

அம்மா நகர்ந்து பாதிவரை வெளியே வர..

POV திரும்பி பார்க்க..

மகேஷ் வீடு மூடி இருக்க..

POV பறந்து போய்.. கதவை தட்ட..

மீண்டும் அம்மாவிடம் பறந்து வந்து.. அம்மாவை பார்க்க..

கதவு திறக்கும் சத்தம் கேட்க..

POV பார்க்க..

மகேஷ் அம்மா பார்த்து..

புரியாமல் கீழே கிடக்கும் அம்மாவை பார்த்து..

மகேஷ் அம்மா
சித்தார்த் அம்மா..

ஓடுகிறாள்.. சித்தார்த் அம்மாவை எழுப்புகிறாள்..

சித்தார்த் அம்மா.. அம்மா..

எழுந்து தன் வீட்டை நோக்கி ஓடுகிறாள்..

CUT TO

31J. EXT - CAR SHED -DAY

காரை விட்டு சித்தார்த் இறங்குகிறான்.. Key lock செய்கிறான்..

மெதுவாக நடந்து வருகிறான்..

முகத்தில் மகிழ்ச்சி..

Plato அவன் அருகில் வந்து தலையை சொரிய..

சித்தார்த் தன் பர்ஸை எடுத்து ஒரு 500 ரூபாயை கொடுக்க..

CUT TO

31K. INT - CORRIDOR - DAY

மகேஷ் அம்மா cell-ஐ எடுத்து..

மகேஷ் அம்மா
ஏங்க.. நம்ம சித்தார்த் அம்மா கீழே
விழுந்துட்டாங்க.. தலையில பலமா அடி..

முறுமுனை
.....

மகேஷ் அம்மா
என்னனு தெரியாதுங்க.. ஒரே ரத்தம்..
உங்களுக்கு சித்தார்த் நம்பர் தெரியுமா..

CUT TO

31L. INT - COMPOUND - DAY

சித்தார்த் உள்ளே வர..

சித்தார்த்தைப் பார்த்து மகேஷ் அம்மா ஏதோ சொல்ல.. [SILENCE]

சித்தார்த் அதிர்ந்து நிற்க..

சித்தார்த் படிக்கட்டில் ஓடுகிறான்..

கீழ் வீட்டு மனைவி வெளியே வர..

மகேஷ் அம்மா சித்தார்த்திடம் அவன் அம்மாவை காட்ட..

சித்தார்த் ஓடி வந்து அம்மாவைப் பார்க்கிறான்..

காலில் சாய்ந்து கீழே விழுகிறான்..

கீழே மனைவி ஓடி வர..

கணவன் அங்க அங்கே உடம்பில் கட்டுப் போட்டு தத்தி தத்தி ஓடி வர..

மகேஷ் அம்மா அம்மாவை தூக்க..

மனைவி தூக்க..

சித்தார்த் அம்மாவை தூக்க.. கண்களில் கண்ணீர்

அம்மாவை தூக்கி மூவரும் படிக்கட்டில் இறங்க..

கணவன் நொண்டிக் கொண்டே அம்மாவை தாங்கிக் கொள்ள..

நால்வரும் அம்மாவை தூக்கிக் கொண்டே நடக்க..

சித்தார்த் மேலே பார்க்கிறான்.. POV அவனை பார்க்க..

திடீரென்று அம்மாவை விட்டு விட்டு ஓடி வருகிறான்..

POV வீட்டிற்கு போக..

சித்தார்த் வீட்டிற்குள் ஓடி வந்து..

கதவை சாத்தி..

நடு அறையில் மண்டியிட்டு..

சித்தார்த்
என்னடி வேணும் உனக்கு.. ஏன்டி என்ன
இப்படி கொல்லுற.. நான் உனக்கு என்னடி
தப்பு செஞ்சேன்..

POV பின்னால் நகர்ந்து ஒரு மூலைக்கு போக..

நான் நல்லது தான்டி பண்ணுனேன் உனக்கு..
ஏன் என்ன இப்ப சாவடிக்கிற..

POV நகர்ந்து டேபிளுக்குள்ளே ஓளிந்து கொள்ள..

நீ கண்ணால பாத்தலடி.. உன்ன
காப்பாத்த.. நான்..நான்.. எவ்வளோ
கஷ்டப்பட்டேன்டி.. எவ்வளோ
கஷ்டப்பட்டேன்.. நீ செத்த உடனே நான்
எவ்வளவு நாள் வருத்தப்பட்டேன்டி.. ஆனா
நீ.. இப்படி என்னையும் என் குடும்பத்தையும்
கொல்லுறியேடி.. எங்கம்மா உனக்கு என்ன
பண்ணாங்க.. என்ன கொடுமடி

செஞ்சாங்க..

POV சுருங்கி போக..

என்னடி வேணும் உனக்கு.. என்ன ஏன்டி இப்படி.. என் பின்னால ஏன்டி வர்ற.. போடி.. எங்கயாவது போடி.. என்ன விட்டுட்டு போடி.. எங்கம்மா.. எங்கம்மாவுக்கு எதாவது ஆச்சுனா..

எழுந்து ஓடுகிறான்.. கிச்சனில் இருந்து ஒரு *கத்தியை எடுத்து வந்து மண்டியிட்டு..

POV பார்க்க..

எங்கம்மாவுக்கு எதாவது ஆச்சுனா..

கழுத்தில் கத்தியை வைத்து..

நான் என் கழுத்த அறுத்துபன்டி.. அறுத்துகிட்டு சாவேன்டி.. செத்து உன்ன வந்து.. உன் கிட்ட வந்து..

அழுகிறான்..

கத்தியை கீழே போட்டு...

சித்தார்த்

அம்மா..

சித்தார்த் வெளியே ஓடுகிறான்..

POV சுருங்கி கிடந்து..

மெதுவாக எழுந்து நடு ஹாலுக்கு வந்து தலை குனிய..

REVEAL..

ஒரு பேய் தலை குனிந்தவாறு இருக்க..

பின் மெதுவாக..

தலை தூக்கி..

மேலே பார்த்து..

கைகளை காற்றில் அலையவிட்டு..

ஓலமிடுகிறது..

CUT TO

............. INTERVAL ...........

32. INT - HOSPITAL WARD - DAY

Stretcher-ரில் சித்தார்த் அம்மாவை தள்ளி வர..

ஒரு Attender-ரும், நர்ஸும் ஓடி வர..

ஒரு டாக்டர் நின்று ஒரு ரூமிற்கு வழி காட்ட..

Stretcher உள்ளே போக..

Doctor சித்தார்த்தை பிடித்து நிறுத்தி.. உள்ளே போக..

கதவு சாத்திக் கொள்கிறது..

சித்தார்த் நடந்து ஒரு படிக்கட்டிற்கு வர..

Corridor empty-ஆக இருக்க..

சித்தார்த் பார்க்க..

அந்தப் பெண்ணின் தந்தை அழுத காட்சி..

V.O
டேய் சித்தார்த்.. டேய்..

சித்தார்த் நினைவுகள் உடைந்து.. நிமிர..

எதிரே யுகியும், பத்ரியும் நிற்க..

சித்தார்த் எழுந்து படி இறங்க..

பத்ரி
எங்கடா போற..

CUT TO

32A. INT - HOSPITAL RECEPTION - DAY

RECEPTIONIST
Patients வீட்டு Address எல்லாம்
கொடுக்க முடியாதுங்க..

சித்தார்த்
சார் கொஞ்சம் Help பண்ணுங்க.. நான்
பெரிய Problem-ல மாட்டி இருக்கேன்..
அந்த Address தந்தீங்கனா..

RECEPTIONIST
என் வேல போயிடும் சார் Please
புரிஞ்சிக்கங்க..

சித்தார்த் கடுப்பாகிறான்..

திரும்புகிறான்..

தூரத்தில் Security நிற்க..

சித்தார்த்
யுகி..

யுகி
என்ன..

CUT TO

32B. EXT - HOSPITAL PARKING LOT - DAY

Security தொப்பியை கழட்டி.. நடந்து வந்து நிறுத்தி இருந்த பைக்கில் ஒரு பேப்பரை சொறுகி.. ஒரு 500 ரூபாயை எடுத்துப் போக..

ஒரு மூலையில் இருந்து யுகி,பத்ரி, சித்தார்த் நடந்து வந்து..

யுகி அந்த பேப்பரை எடுத்து பார்த்து..

யுகி
TN 02 4563

பத்ரி செல்லை எடுத்து நம்பரை போட..

மூவரும் பைக்கில் ஏற..

யுகி ஓட்டுகிறான்..

பத்ரி
மாமா.. பத்ரி பேசுறேன்..

மறுமுனை
....

பத்ரி
மாமா ஒரு ஆட்டோ நம்பர் Trace பண்ணனும்.. ரொம்ப Urgent..

மறுமுனை
....

பத்ரி
மாமா.. தலைபோற மேட்டரு..

மறுமுனை
....

பத்ரி
உங்க RTO Office வர ரெண்டாயிடும்.. Please..

மறுமுனை
....

பத்ரி
(பேப்பரைப் பார்த்து)
TN 02 4563

பைக் ஒரு ரோட்டில் திரும்ப..

CUT TO

33. EXT - AUTO STAND - DAY

Bike வந்து நிற்க..

சித்தார்த் இறங்கி ஓடி ஒரு ஆட்டோகாரனிடம்..

சித்தார்த்
அண்ணே இங்க ஒரு ஆட்டோகாரர் இருப்பாரே..

ஒருவர்
இங்க எட்டு பேர் இருக்குறோம்பா..

சித்தார்த்
சார் போன வாரம் ஒரு Accident நடந்துச்சே.. ஒரு பொண்ணு.. ஆட்டோ No. TN.02.4563

மற்றவர்கள்
நம்ம பச்சய கேக்குறாங்கப்பா..

ஒருவன்
டேய்..

சித்தார்த்
அந்த ஆட்டோல தான் hospital-லுக்கு போனோம்..

ஒருவன்
அவர் பேரு..

மற்றவர்கள்
(சிரித்துக் கொண்டே)
பச்சை..

ஒருவன்
(அதட்டி)
டேய்..

அவர் பேர் அடைக்கலம்..

கைகாட்டி..

அதோ அந்த டீக்கடைல நிப்பாரு பார்..

சித்தார்த் ஓடி பைக்கில் ஏற..

பைக் கிளம்புகிறது..

CUT TO

34. EXT - TEA STALL - DAY

ஒரு டீக்கடையில் அந்த ஆட்டோகாரன் டீ குடிக்க..

பைக் வந்து நிற்க..

ஆட்டோக்காரன் சித்தார்த்தை பார்த்து.. டீ கடையில் காசு குடுத்து வேகமாக நடந்து போக..

CUT TO

34A. EXT - PLATFORM - DAY

ஆட்டோக்காரன் நடந்து போக..

சித்தார்த்தும்,யுகியும் Follow செய்ய..

ஆட்டோக்காரன்
(நின்று)
எதுக்கு Follow பண்ணுற..

நடந்து கொண்டே..

சித்தார்த் ஓடி பக்கத்தில் வந்து..

சித்தார்த்
அண்ணே.. என்ன ஞாபகம் இருக்கா?

ஆட்டோக்காரன்
(நடந்து கொண்டே)
தெரியல..

சித்தார்த்
அண்ணே.. நீங்க தானே அன்னிக்கி அந்த
Accident-ஆன பொண்ண..

ஆட்டோக்காரன்
அன்னிக்கி ஆரம்பிச்சிதய்யா தலைவலி..
Police Station-க்கு வா.. இந்த காரா
அந்தக்காரானு கேள்வி மேல கேள்வி கேட்டு
உயிர எடுக்குறானுங்க..

கடுப்பாகி தன் ஆட்டோவில் ஏறி உட்காருகிறான்..

சித்தார்த் ஓடி வந்து..

சித்தார்த்
அண்ணா.. அந்த பொண்ணு வீட்டு அட்ரஸ்
தெரியுமா?

ஆட்டோக்காரன்
தெரியாது..

யுகி தன் பாக்கெட்டில் கை விட்டு ஒரு ஆயிரம் ரூபாயை நீட்ட..

ஆட்டோக்காரன் அவனைப் பார்த்து..

என்ன இது..

யுகி
வாங்கிகிட்டு அட்ரஸ் சொல்லுண்ணா..

சித்தார்த் யுகியைப் பார்க்க..

ஆட்டோக்காரன் யுகியை பார்த்து..

ஆட்டோக்காரன்
டேய் போடா.. ஆட்டோக்காரன் என்ன
இழச்சவனா? காசு நீட்டுற.. நமக்கு 500

போதும் ஒரு நாளைக்கி.. அத நான்
சம்பாதிச்சிக்கிறேன்.. நீ எடத்த காலி
பண்ணு..

Auto-வை Start செய்ய..

சித்தார்த் பதறி..

சித்தார்த்
அண்ணா.. Sorry-ண்ணா
மன்னிச்சிக்கண்ணா.. தவறுதாண்ணா.. என்ன
பண்ணனும்னு தெரியாம..

ஆட்டோக்காரன்
என்னய்யா அவன் அவன் வந்து காச
நீட்டுறீங்க.. நீ ஆயிரரூபா நோட்ட நீட்டுற..
அந்த பொண்ணு அப்பன் வந்து பத்தாயிரம்
கட்ட நீட்டுறான்..

சித்தார்த் நெற்றியை சுருக்கி..

சித்தார்த்
அவரு எதுக்கு காசு கொடுத்தாரு..

ஆட்டோக்காரன்
ஆங்.. அந்த பொண்ணை கொன்னவன
கண்டுபுடிக்கணும்மா.. பேயிபுடிச்ச மாதிரி
அலையிறான்.. காலைல ஆறு மணிக்கு
வந்து.. என்ன காரு.. என்ன கலரு.. என்ன
நம்பருனு உயிர எடுத்துருவான்.. ரெண்டு
நாளா ஆளக்காணும்.. இப்ப நீ வந்துட்ட..
இடத்த காலி பண்ணு.. போ..

யுகி ஆட்டோக்காரன் காலை பிடித்து..

யுகி
அண்ணா.. Please-ணா.. அந்தாளு அட்ரஸ்
கொஞ்சம் சொல்லுங்கண்ணா..

ஆட்டோக்காரன்
என்ன துட்டு செல்லலையா? காலப்புடிக்குற..

சித்தார்த்
Please-ணா கொஞ்சம் அட்ரஸ்
சொல்லுங்கணா..

ஆட்டோக்காரன்
மாதவரம் பால்பண்ணைக்கு பின்னால ஒரு ஐஸ்
பேக்டரி.. அந்தாளுது தான்.. போ..

Auto-வை Start செய்கிறான்..

CUT TO

35. EXT - ROAD - DAY

ஒரு ரோட்டில் பைக் போக.. பைக்கில் பத்ரி, சித்தார்த், யுகி..

CUT TO

35A. EXT - TEA SHOP - DAY

பைக் வந்து நிற்க..

யுகி
அண்ணே பால் பண்ணை எப்படி
போறதுண்ணே..

கடைக்காரர்
LAST RIGHT..

பத்ரி
டேய் டீ சாப்பிடுவோம்டா..

சித்தார்த்
டேய் நீ போடா..

பத்ரி பைக்கை விட்டு கீழே இறங்குகிறான்.. கீழே விழுகிறான்..

சித்தார்த் புரியாமல் பார்க்க..

யுகி stand போட்டு நிறுத்தி பத்ரியை தூக்க..

ஒரு POV பைக்கின் சாவியை நோக்கி போக..

சித்தார்த்
என்னடா ஆச்சி..

பத்ரி மிரண்டு திரும்பி திரும்பி பார்க்க..

யுகி
என்னடா ஆச்சி உனக்கு..

பத்ரி
நான் வரலடா..

பைக் Ignition Off ஆக..

சித்தார்த் பைக்கை Start செய்ய முயன்று தோற்று.. பைக்கை ஒரு ஓரத்தில் நிறுத்தி இறங்கி நடந்து போக..

யுகி புரியாமல் ஓடி சித்தார்த்துடன் நடக்க..

பத்ரி மிரண்டு ஓடி அவர்களுடன் சேர்ந்து நடந்து போக..

காற்று பலமாக அடிக்கிறது..

CUT TO

36. EXT - BIG GATE - DAY

POV ஒரு கேட்டின் கம்பிகளுக்கிடையே பார்க்க..

மூவரும் நடந்து வருகிறார்கள்..

POV பின்னால் போகிறது..

CUT TO

36A. EXT - ICE FACTORY - DAY

சித்தார்த், யுகி, பத்ரி நடந்து வர..

ஒரு பெரிய கேட் போட்ட காம்பவுண்டு..

கேட்டை திறந்து உள்ளே போகிறார்கள்..

நடுவில் ஒரு கட்டிடம்..

யாரும்மில்லை..

சித்தார்த் நடந்து போக.. யுகியும், பத்ரியும் பதட்டதுடன் தொடர்ந்து போக..

CUT TO

36B. INT - ICE FACTORY - DAY

சித்தார்த் உள்ளே வர.. நண்பர்கள் பின்னால் வர..

ஒரு Room - கதவு சாத்தி இருக்க..

சித்தார்த் கதவை திறந்து பார்க்க.. அதிர்கிறான்..

யுகியும், பத்ரியும் பின்னால் நகர..

சித்தார்த் மிரண்டு உள்ளே வர..

எதிரில், பெரிய சுவரில் இறந்த பெண்ணின் போட்டோ பெரிய அளவில் Frame செய்யப்பட்டு சாய்த்து வைக்கப்பட்டிருக்க.. புன்னகையுடன் அந்த பெண்.. நெற்றியில் சந்தனமும் பொட்டும்.. கீழே ஒரு விளக்கு எரிய..

வெளியே ஏதோ சத்தம் கேட்க..

நண்பர்கள் வெளியே போக..

சித்தார்த் அந்த படத்தை பார்த்தவாறு நடந்து போக..

தூரத்தில் நான்கு பேர் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்..

ஒருவன் சிமெண்ட் கலவையை மண்வெட்டியால் பாண்டில் போட.. ஒரு பெண் தூக்கி போய் நடந்து வந்து பெண்ணிடம் கொடுக்க.. அவள் காலியான பாண்டை கொடுத்து நடந்து போய் ஒரு கொத்தனாரின் அருகே கொட்ட..

கொத்தனார் ஒரு சிறிய கல்லறையை கட்டுகிறார்..

சித்தார்த்தும், யுகியும் திரும்பி பார்க்க..

ஒரு நிழலில் Scooty நிற்க..

அதன் அருகே கீழே உட்காந்தவாறு அந்த பெண்ணின் அப்பா மயங்கி சாய்ந்திருக்க.. அவர் அருகில் மது பாட்டில்..

CUT TO

37. EXT - ROAD - DAY

சித்தார்த் நடந்து வர.. இரண்டு பக்கமும் யுகி, பத்ரி..

யுகி
(சித்தார்த்தை நோக்கி)
எதுக்குடா இவ்வளவு தூரம் வந்த.. சும்மா வேடிக்க பாக்கிறதுக்காகவா..?

சித்தார்த்
என்னடா பண்ண சொல்லுற.. அந்தாளு மயங்கி கிடக்கறாரு.. அந்த பொண்ணுக்கு சமாதி கட்டுறாங்க..

பத்ரி
அந்த பொண்ண புதச்சிருக்காங்கடா..

சித்தார்த்
அதனால..

யுகி
அதனால தாண்டா அவ உன் வீட்டுல இருக்கா..

சித்தார்த் யுகியைப் பார்க்க..

பத்ரி
அந்த பொண்ண எரிச்சிருந்தா உனக்கு எதுவும் நடந்திருக்காதுடா..

சித்தார்த்
இப்ப என்னடா பண்ண முடியும்..

யுகி
அந்த பொணத்த நாம வெளிய எடுத்து எரிச்சிருக்கனும்டா..

சித்தார்த்
ஏய்.. அது தப்புடா..

பத்ரி
அந்தாள் பண்ணதுதாண்டா தப்பு! பொணத்த Public Cemetery-ல தாண்டா புதைக்கணும்.. அது தானே Rule..

சித்தார்த்
நமக்கு தாண்டா அது பொணம்.. அந்த மனுசனுக்கு பெத்த மக..

இருவரும் அமைதியாக நடக்க..

யுகி
டேய்.. உங்கம்மா Hospital-ல இருக்காங்கடா.. மறந்திட்டு பேசுறயா..?

டீக்கடை வர..

CUT TO

38. INT - HOSPITAL ROOM - EVE

பெட்டில் அம்மா படுத்திருக்க.. சித்தார்த் பார்த்துக் கொண்டிருக்க..

Doctor Pulse பார்த்து வெளியே நடக்க..

சித்தார்த் அவரிடம் போய்..

சித்தார்த்
Doctor..

DOCTOR
Nothing to worry.. She will be alright in two days..

சித்தார்த்
எப்ப Discharge Doctor..

DOCTOR
In three days..

நடந்து போக..

சித்தார்த் அம்மாவையே பார்க்க..

யுகியும், பத்ரியும் Cabin-க்கு வெளியே வந்து கை காட்ட..

சித்தார்த் வெளியே வந்து..

சித்தார்த்
இன்னும் மூணு நாள்ல நாம எதாவுது பண்ணி..

பத்ரி
வா எல்லாம் ready பண்ணியாச்சு..

சித்தார்த் அவர்களோடு நடக்கின்றான்..

CUT TO

39. EXT - SIDDHARTH HOUSE - NIGHT

சித்தார்த், யுகி, பத்ரி corridor-ல் நிற்க..

மகேஷ் அம்மா அவர்களுக்கு டீ கொடுக்க..

சித்தார்த் வாங்கி திரும்பி பார்க்க..

மகேஷ் சித்தார்த் வீட்டு கதவின் முன்னே நின்று வீட்டின் உள்ளே பார்க்க..

39A. INT - SIDDHARTH HOUSE - NIGHT

பதிமூன்று புரோகிதர்கள் பூஜை செய்ய..

DISSOLVE

39B. EXT - SIDDHARTH HOUSE - NIGHT

படிக்கட்டில் புரோகிதர்கள் நடந்து போக..

DISSOLVE

39C. INT - SIDDHARTH HOUSE - NIGHT

கிருத்துவ போதகர்கள், பெண்கள் 50 பேர் ஜெபம் செய்ய..

CUT TO

39D. EXT - SIDDHARTH HOUSE - NIGHT

மகேஷ் அவன் வீட்டின் முன் நின்று கீழே உட்கார்ந்திருந்த சித்தார்த்தை பார்க்க..

CUT TO

39E. EXT - STEPS - NIGHT

கணவனும் மனைவியும் கீழே நிற்க..

கிருத்துவர்கள் இறங்கி நடந்து போக..

DISSOLVE

39F. INT - MAHESH HOUSE - NIGHT

மகேஷ் அம்மா வீட்டிற்கு நடந்து..

மகேஷ் அம்மா
மகேஷ்.. எங்கடா இருக்க..

தேடுகிறாள்..

டேய் மகேஷ்..

மகேஷ் அம்மா கட்டிலுக்கு கீழே குனிந்து பார்க்க..

மகேஷ் கட்டிலுக்கு கீழே படுத்திருக்கிறான்..

CUT TO

39G. INT - SIDDHARTH HOUSE - NIGHT

முகமதியர்கள் பிராத்தனை செய்ய..

CUT TO

39H. EXT - STEPS - NIGHT

சித்தார்த், நண்பர்கள், மகேஷ் அப்பா, மகேஷ் அம்மா நிற்க..

முகமதியர்கள் வீட்டை விட்டு இறங்கி வருகிறார்கள்..

CUT TO

39I. EXT - SIDDHARTH HOUSE - NIGHT

வீடு திறந்திருக்க..

வெளியே மலர்களும் மாலைகளும் தொங்க..

மகேஷ் அம்மா இரண்டு பாய்களையும், மூன்று தலையணைகளையும் சித்தார்த்திடம் கொடுக்க..

மகேஷ் அம்மா
நாளைக்கி காலைல வரைக்கும் கதவ தொறந்து வைக்க சொன்னாங்க.. நீங்க மேல போய் படுங்க.. நான் மகேஷ் அப்பாவ வாசல்லயே உட்கார வெக்கிறேன்..

சித்தார்த், நண்பர்கள் மேலே போக..

CUT TO

வானத்தில் நிலா..

CUT TO

40. EXT - TERRACE - NIGHT

மூவரும் தூங்க..

பத்ரி திரும்பி அலற..

சித்தார்த் எழுந்து பார்க்க..

Plato-வும் அவன் சகாக்களும் நிற்க..

சித்தார்த்
என்ன Plato..

PLATO
பசிக்குது.. ஒரு 1000 Rupees..

சித்தார்த் பார்க்கிறான்..

Bro..

யுகி எழுந்து..

யுகி
டேய்.. நாங்களே மண்டை காஞ்சி இப்பத்தான் படுத்திருக்கோம்.. பேசாம போயிடு..

PLATO
But தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில்..

யுகி
மாடில இருந்து தள்ளி விட்டுருவோம்..

Plato திரும்பி நடக்கின்றான்..

CUT TO

40A. EXT - TERRACE STEPS - NIGHT

Plato-வும் சகாக்களும் நடந்து வர..

மகேஷ் வீட்டின் நிலப்படியில் தலை வைத்து மகேஷ் அப்பா தூங்க..

Plato நடந்து வந்து சித்தார்த் வீட்டின் முன்னே நின்று பார்க்க..

சித்தார்த் வீடு திறந்திருக்க..

Plato கீழே பார்க்க..

படிக்கட்டு காலியாக இருக்க..

Plato சைகை செய்ய..

ஒரு சகா மேல் படிக்கட்டை பார்க்க..

இன்னொரு சகா கீழ் படிக்கட்டை பார்த்துக்கொள்ள..

Plato மெதுவாக சித்தார்த் வீட்டிற்குள் நுழைந்து.. மெதுவாக கதவை சாத்திக்கொள்ள..

CUT TO

நிலா மேகத்திற்குள் நுழைய..

CUT TO

40B. EXT - STEPS - NIGHT

சகாக்கள் உளவு பார்க்க..

சித்தார்தின் வீட்டு கதவு மூடியிருக்க..

40C. INT - SIDDHARTH HOUSE - NIGHT

Plato மெதுவாக நடந்து வந்து பார்க்க.. இரண்டு குத்து விளக்குகள்.. அதை எடுத்து டேபிளில் வைக்கின்றான்..

ஒரு Wall Clock தொங்க.. அதை கழுட்டி டேபிளில் வைத்து.. திரும்பி வீட்டில் தேடுகிறான்.. ஒரு மூலையில் பீரோ..

Plato மெதுவாக நடந்து பீரோவின் கதவில் சொருகி இருந்து சாவியை திருக.. கதவு திறக்க..

உள்ளே கைவிட்டு துளாவ..

Plato முகத்தில் மகிழ்ச்சி..

ஏதோ சத்தம் கேட்க..

அவன் திரும்பி பார்க்க..

யாருமில்லை..

Plato நகைகளை டேபிளில் வைத்து திரும்ப..

தலை கீழாய் பேய் அவன் முன்னே தோன்றி அலற..

Plato அலறி..

Kitchen நோக்கி ஓடி..

Knife Self-ல் இருந்த ஒரு கத்தியை எடுக்க பார்க்க..

Knife Self நகர..

Plato அதிர்கிறான்..

பேய் கை நீட்ட..

Knife Self-ல் இருந்து ஒரு கத்தி பறந்து வந்து பேயின் கையில் உட்கார..

Plato அலறி ஓட..

டேபிளில் இருந்த ஒரு Flower Vase-ஐ தட்டி விட..

Flower Vase கீழே விழ..

பேய் அதை பிடித்து.. லாவகமாக டேபிளில் வைக்க..

Plato கதவிற்கு ஓடி கதவை திறக்க..

கதவு பாதி திறக்க..

பேய் அவன் அருகே பறந்து போக..

Plato கதவை கஷ்டப்பட்டு திறக்க..

திடீரென்று கதவு மூட.. Plato அதில் விழுந்து அலறுகிறான்..

CUT TO

மகேஷ் அப்பா எழ..

CUT TO

40D. EXT - TERRACE - NIGHT

சித்தார்த்தும் நண்பர்களும் அதிர்ந்து எழ..

CUT TO

40E. EXT - STEPS - NIGHT

சகாக்கள் மிரண்டு படிகட்டின் மூலைக்கு வர..

மகேஷின் குடும்பம் வர..

கணவனும் மனைவியும் வந்து பார்க்க..

சித்தார்த், நண்பர்கள் வர..

Plato அலறும் சத்தம்.. நிற்க..

சித்தார்த் மெதுவாக நடந்து வர..

அமைதி..

சித்தார்த் நிற்க..

அமைதி..

மகேஷின் அம்மா சித்தார்த்தை பார்த்து போகாதே என்று சைகை செய்ய..

சித்தார்த் புரியாமல் நின்று திரும்பி பார்க்க..

கதவு திறக்க..

அமைதி..

Plato நொண்டிக்கொண்டு மெதுவாக வர..

முகத்தில் ரத்தம்.. கண்கள் நிலைகுத்தி இருக்க..

அவன் வலது புட்டத்தில் ஒரு கத்தி சொருகி இருக்க..

எல்லோரும் அதிர்ந்து பார்க்க..

ஒரு விகார கை வெளியே வந்து.. Plato புட்டத்திலிருந்து கத்தியை பிடிங்கி உள்ளே போக..

கதவு "படால்" என மூடி கொள்ள..

Plato கீழே விழுகிறான்..

சித்தார்த் கீழே உட்காருகிறான்..

CUT TO

41. EXT - ICE FACTORY - NIGHT

ஒரு Truck வந்து நிற்க..

யுகி இறங்க..

பத்ரி இறங்க..

சித்தார்த் அமைதியாக சீட்டில் உட்கார்ந்திருக்க..

ஒரு Beer Bottle-லை தூக்கி எறிகிறான்..

Bottle உடைகிறது..

சித்தார்த் இறங்குகிறான்..

யுகி பின்னால் ஓடி கதவை திறக்க..

பத்ரியும் ஓடி எதையோ எடுக்க..

சித்தார்த் அமைதியாக நிற்க..

யுகி ஓடி வந்து இரண்டு மண்வெட்டியில் ஒரு மண்வெட்டியை சித்தார்த்திடம் கொடுக்க..

சித்தார்த் பத்ரி வைத்திருந்த கடப்பாறையை வாங்கி நடக்க..

யுகியும், பத்ரியும் சுற்றி முற்றி பார்த்து நடக்க..

CUT TO

41A. INT - ICE FACTORY - NIGHT

மகளின் படத்திற்க்கு கீழே தகப்பன் அயர்ந்து தூங்க..

விளக்கு ஏரிய..

CUT TO

41B. EXT - ICE FACTORY - NIGHT

சித்தார்த் கடப்பாறையால் கல்லறையை தோண்ட.. பத்ரி இணைந்து கொள்ள.. யுகி மண்வெட்டியுடன் நிற்க..

CUT TO

41C. INT - ICE FACTORY - NIGHT

Cooling Tower-ல் தண்ணீர் கொட்ட..

ஒரு POV காற்றில் நகர..

ஒரு அறையின் உள்ளே போக..

தந்தை படத்தின் கீழே தூங்குகிறார்..

POV அவர் அருகில் வந்து பார்க்க..

விளக்கு அணைகிறது..

தந்தை அமைதியாக தூங்க..

Cooling Tower-ன் சத்தம்..

POV அவரையே பார்த்து.. நகர்ந்து Switch போர்டை நோக்கி சென்று ஒரு சிகப்பு பட்டனின் அருகில் போக..

Cooling Tower-ன் சத்தம் நிற்க..

தந்தை மெதுவாக எழுந்து கண்களை கசக்கி உட்காருகிறார்..

எதிரே பார்க்கிறார்..

முகம் கலவரமாக..

எழுந்து Cooling Tower-ஐ ஓடி பார்க்க..

Cooling Tower இயங்காமல் நிற்க..

பதறி Switch போர்டை நோக்கி ஓடி..

பச்சை பட்டனை ON செய்ய..

Cooling Tower ON ஆக..

மெதுவாக நடந்து வெளியே வர..

ஏதோ உடைக்கும் சத்தம் கேட்க..

திரும்பி பார்க்க..

தூரத்தில் தனது மகளின் கல்லறையை மூன்று உருவங்கள் உடைக்க..

தந்தை பதறி ஓடுகிறார்..

தந்தை
டேய்.. யாருடா நீங்க..

யுகி திரும்பி பார்க்க..

பத்ரி திரும்பி பார்த்து சித்தார்த்தை பார்க்க..

சித்தார்த் வேகமாக கடப்பாறையால் குத்த..

தந்தை
பாவிங்களா.. என்னடா பண்ணுறீங்க..

ஓடிவந்து சித்தார்த்திடம் போய்.. அவன் கையை பற்றி இழுக்க..

அவரை சித்தார்த் தள்ளி விட்டு மீண்டும் கல்லறையை உடைக்க..

தந்தை எழுந்து..

டேய்.. யாருடா நீ என்னடா பண்றீங்க என் மகள.. ஐயோ..

மீண்டும் சித்தார்த்திடம் வர..

யுகி அவரை புடிக்க..

தந்தை திமிர..

பத்ரி ஓடி வந்து அவரை அழுத்த..

தந்தை
டேய் என்ன விடுங்கடா.. ஏண்டா இப்படி பண்றீங்க..

யுகி
செத்தா எரிக்க வேண்டியது தானேயா எதுக்கு புதைக்குற..

தந்தை
நீங்க யாருடா என்ன கேக்குறதுக்கு..

பத்ரி
நாங்க பக்கத்தில தான் குடியிருக்கிறோம்.. நீ எதுவும் செய்யலாம்.. நாங்க பாத்துக்கிட்டு சும்மா இருக்கனுமா..

தந்தை அவர்களை தள்ளி கொண்டு சித்தார்த்திடம் ஓடி வந்து சித்தார்த்தை

இழுக்க..

சித்தார்த் அவரோடு கீழே விழுந்து புரண்டு கடப்பாறையை நழுவ விட.. தந்தை அவனை இழுக்க..

தந்தை
டேய் யாருடா நீங்க.. என் பொண்ணு
தூக்கத்தை கலைக்கிறீங்க.. டேய்..

சித்தார்த் திமிறி எழுந்து கீழே கிடந்த மண்வெட்டியை எடுத்து கல்லறையை தோண்ட..

தந்தை எழுந்து..

டேய் பாவி.. மனுசனா நீ.. இப்படி
கல்லறையை தோண்டலாமாடா.. உன்
சொந்தம் உன்ன விட்டு போயிருக்காடா..

மீண்டும் எழுந்து சித்தார்த்தை நோக்கி வர..

யுகி ஓடி வந்து தந்தையை இழுக்க..

பத்ரி இழுக்க..

தந்தை
என் பெத்த மக கல்லறைடா.. அவள
தொந்தரவு செய்யாதீங்கடா..

யுகி
வாய மூடுய்யா..

அவர் வாயை பொத்த..

தந்தை
என்ன கொல்லுங்கடா.. என்ன கொல்லுங்க..
என் மகள எதுவும் செய்யாதீங்கடா..

அவர் மீண்டும் சித்தார்த்தை இழுக்க..

பத்ரி அவரை அறைய..

சித்தார்த் பத்ரியை அடிக்கிறான்..

யுகி
டேய்..

யுகி அவரை இழுக்க..

சித்தார்த் யுகியை எட்டி உதைக்கிறான்..

தந்தை சித்தார்த்தை பார்க்க..

சித்தார்த் அவரின் சட்டையை பிடித்து..

சித்தார்த்
என் உயிர எடுக்குறாயா.. உன் பொண்ணு
என் உயிர எடுக்குறா..

தந்தை புரியாமல் அவனை பார்க்க..

யாருய்யா உன் பொண்ணு எனக்கு சொந்தமா
பந்தமா..? எதுக்குயா என் வீட்டுல
இருக்கணும்.. கோபம் இருந்தா அந்த காருல
இடிச்சுட்டு போனானே அவன் வீட்டுக்கு போய்
அவன கொல்லலாமே.. எங்கம்மா என்ன
பண்ணுனாங்க.. எங்கம்மாவ அடிச்சு..
எங்கம்மாவுக்கு எதாவுது ஆச்சுனா உன்
பொண்ண.. உன் பொண்ணு உயிரோட
இருந்தா கொன்னுருப்பேன் அவள..

திரும்பி கல்லறையை பார்த்து..

இந்த பொணத்த வெளிய எடுத்து எரிய்யா..
Petrol ஊத்தி எரிச்சுடு.. அப்பத்தான் என்
வீட்டை விட்டு போவா..

தந்தை
(நம்ப முடியாமல்)
என் பொண்ணு உன் வீட்ல இருக்காளா..?

அவரின் சட்டையை பிடித்து..

சித்தார்த்
வாய்யா.. வா.. காட்டுறேன்.. உன்
பொண்ண வந்து இழுத்துட்டு போ.. வா..

சித்தார்த் அவரின் சட்டையை பிடித்து இழுத்து கொண்டு போகிறான்..

CUT TO

41D. INT - ICE FACTORY - NIGHT

பெரிய படத்தில் புன்னகை செய்தபடி அந்தப் பெண்..

DISSOLVE

42. INT - SIDDHARTH HOUSE - NIGHT

சித்தார்த் சுவரோடு சாய்ந்து நிற்க..

யுகியும், பத்ரியும் ஒரு மூலையில் நிற்க..

ஒரு சேரில் தந்தை எதிரில் பார்த்தவாறு உட்கார்ந்திருக்க..

அமைதி.. நேரம் ஓட.. தந்தை சித்தார்த்தைப் பார்க்க.. சித்தார்த் அவரை பார்க்க..

யுகி தன் வாட்சைப் பார்க்க..

சித்தார்த்தின் செல் அடிக்க..

சித்தார்த் பாக்கெட்டிலிருந்து செல்லை எடுத்து பார்க்க..

"Unknown No" என்று வர..

சித்தார்த் செல்லை cut செய்கிறான்..

தந்தை சித்தார்த்தை திரும்பிப் பார்க்க..

சித்தார்த் அவரை பார்த்து.. நண்பர்களைப் பார்க்க..

நண்பர்கள் அவனைப் பார்த்து.. தந்தையைப் பார்க்க..

தந்தை மீண்டும் எதிரில் பார்க்க..

செல் மீண்டும் அடிக்க..

சித்தார்த் செல்லை மீண்டும் பாக்கெட்டிலிருந்து எடுத்து பார்க்க..

"unknown No" என்று வர..

சித்தார்த் செல்லை cut செய்ய..

தந்தை எழுகிறார்..

சித்தார்த்தும் நண்பர்களும் அவரைப் பார்க்க..

தந்தை நடந்து கதவிற்கு வர..

செல் அடிக்க..

சித்தார்த் வேகமாக நடந்து அவரின் முன்னே வந்து நிற்க..

சித்தார்த்
எங்க..

தந்தை
நான் போகனும் வழிவிடு..

சித்தார்த்
உன் பொண்ண கூட்டீட்டு போ..

தந்தை
டேய்.. தள்ளுடா..

அவர் சித்தார்த்தை விலக்க..

செல் Ring Tone cut ஆக..

சித்தார்த் அவரை இழுத்து..

சித்தார்த்
யோவ்.. நான் சொல்றத கேளு..

தந்தை
டேய் என் பொண்ணுகிட்ட போகனும்..
ஒழுங்கா வழிவிடு..

சித்தார்த்
உன் பொண்ணு இங்கதான்யா இருக்கா..
அவள கூட்டீட்டு போ..

அவர் சித்தார்த்தின் சட்டையை பிடித்து..

தந்தை

டேய்.. என்னடா நெனச்சிகிட்டு இருக்க..
நைட்டுல வந்து ரவுடித்தனம் பண்ணி இங்க
என்ன கூட்டீட்டு வந்து.. நான் மனுசனா
இருக்கேன்.. என்ன..

வீட்டு Telephone அடிக்க..

பத்ரி ஓடி வந்து அவரை பிடிக்க..

டேய்..

பத்ரி
என்னடா பண்ணுவ..

சித்தார்த் பத்ரியை தள்ளி.. அவரைப் பார்த்து..

சித்தார்த்
நான் மனுசனா இருந்தேன்யா.. உன்
பொண்ணு சாக கிடக்கையில நான் மனுசன்
மாதிரி ஓடி அவள காப்பாத்த நெனச்சேன்யா..
ஆனா அவ..

Telephone அடிக்க..

தந்தை
டேய் என் பொண்ணு தான் செத்துட்டாளடா..
நீ அவள ஹாஸ்பிட்டலுக்கு கூட்டீட்டு
போனயிலடா.. எவளவுடா வேணும்..
சொல்லுடா.. காசு தர்றேன்.. அத
விட்டுட்டு.. என் பொண்ணு பேயா இருக்கா..
உன்ன அதப் பண்றா.. இதப் பண்றானு என்
பொண்ணப் பத்தி ஏன்டா தப்பா பேசுற..

யுகி Telephone-ஐ எடுத்து காதில் வைக்க..

சித்தார்த்
உண்மையதான்யா சொன்னேன்.. உன்
பொண்ணு இங்க தான்..

யுகி
(அதிர்ந்து)
டேய்..

சித்தார்த்
ஒளிஞ்சிகிட்டு இருக்க அவள போய் கூட்டீட்டு
போயா..

யுகி
(கத்துகிறான்)
சித்தார்த்..

எல்லோரும் யுகியை பார்க்க..

டேய் அம்மாடா.. Hospital-ல இருந்து
பேசுறாங்க..

சித்தார்த் அவரை இழுத்து..

சித்தார்த்
வாய்யா.. எங்கம்மாட்ட நீயே கேளு... உன்
பொண்ணு என்ன பண்ணுனானு நீயே கேளு..

யுகியிடம் Telephone-ஐ வாங்கி..

Receiver-ஐ தன் முகத்தின் முன்னே வைத்து..

அம்மா.. உன்ன யாரும்மா பாத்ரூம்ல
தள்ளிவிட்டா? யாரும்மா பாத்ரூம்ல கொல்லப்
பாத்தா.. நான் SPEAKER-ல போடுறேன்..
சத்தமா சொல்லு.. எல்லாரும் கேக்கணும்..

SPEAKER MODE-ல் போட..

எல்லோரும் அந்த போனையே பார்க்க..

அம்மா
(SPEAKER-ல்)
சித்தார்த்..

வழுவிழந்த குரலில்..

டேய் சித்தார்த்..

சித்தார்த்
சொல்லும்மா.. அந்த பேயிதானே.. அந்த
பேயிதானே உன்ன கொல்லப் பாத்துச்சு..

அம்மா
(SPEAKER-ல்)
அது பேயில்லடா..

சித்தார்த் புரியாமல் பார்க்க..

தந்தை டெலிபோனை உற்றுப் பார்க்க..

சித்தார்த்
(அதிர்ந்து)
அம்மா..

அம்மா
(SPEAKER-ல்)
நான் பாத்தேன்டா.. நீ சொன்னயே நம்ம
வீட்டுல ஏதோ இருக்குதுனு.. அத நான்
கண்ணால பாத்தேன்டா.. என்னய அதுதான்டா
காப்பாத்துச்சு.. நான் பாத்ரூம்ல வழுக்கி
விழுந்தப்போ.. அது தாண்டா என்ன தூக்கிட்டு
போச்சு..

சித்தார்த் கோபமாக..

சித்தார்த்
என்னது.. அப்ப முந்தா நேத்து விழுந்தது..

அம்மா
(SPEAKER-ல்)
பொய் சொன்னேன்டா.. அன்னிக்கி நான்

பாத்ரூம்ல விழல.. நம்ம கீழ் வீட்டு முரடன் அவன் பொண்டாட்டிய அடிச்சப்ப ஏன்டான்னு கேட்டதுக்கு என்ன தள்ளி விட்டுட்டான்.. நான் படிக்கட்டுல விழுந்து தலைல அடிபட்டுருச்சு.. உன்கிட்ட பொய் சொல்லிட்டேன்..

சித்தார்த் நம்பமுடியாமல் மண்டியிட்டு உட்கார..

ஆனா மறுநாள் நான் நெஜமாவே பாத்ரூம்ல வழிக்கி விழுந்தேன்.. HELP-க்கு யாருமே வரலடா.. ஆனா ஏதோ வந்து என்ன தூக்கிச்சு.. அப்பத்தான் நீ சொன்ன பேய பாத்தேன்.. அது பேயில்லடா.. தெய்வம்.. என்ன காப்பாத்துன தெய்வம்..

எல்லோரும் அதிர்ந்து பார்க்க..

டேய் சித்தார்த்.. என்னய சீக்கிரம் DISCHARGE பண்ணி கூட்டீட்டு போடா.. நான் அதபாத்து..

நர்ஸ்
(SPEAKER-ல்)
மேடம் செல்ல குடுங்க டாக்டர் வந்துருவாரு..

அம்மா
(SPEAKER-ல்)
டேய் சித்தார்த்.. என்ன சீக்கிரமா வந்து கூட்டீட்டு போடா..

நர்ஸ்
(SPEAKER-ல்)
கொடுங்க மேடம்..

போன் CUT ஆகும் சத்தம்..

எல்லோரும் Telephone-யே பார்த்துக் கொண்டிருக்க..

சித்தார்த்தின் முகம் அமைதியாக..

யுகியும் பத்ரியும் தலைகுனிந்து நிற்க..

தந்தை மெதுவாக நடந்து போய் சேரில் உட்கார..

தந்தை கைகளால் முகத்தை மூடுகிறார்..

சித்தார்த் அவரை பரிதாபமாக பார்க்க..

தந்தை நிமிர்ந்து சேரில் சாய்ந்து.. மேலே பார்த்து..

பெருமூச்சு விட்டு.. ஏதோ யோசிச்சவராய் தன் பாக்கெட்டை தடவிப் பார்த்து..

கைவிட்டு ஒரு Scissors Cigarette Pocket-டையும், தீப்பெட்டியும் எடுத்து பார்த்து..

நடந்து போய் எதிரே இருந்த ஒரு டேபிளில் வைத்து.. மீண்டும் வந்து சேரில் உட்கார..

சித்தார்த், யுகி, பத்ரி அவரை பார்க்க..

தந்தை தலை குனிய..

ஏதோ சத்தம் கேட்க..

தந்தை தலை நிமிர..

டேபிளின் கீழே இருந்து காற்றில் ஒரு விகாரமான கை வந்து டேபிள் மேல் இருந்த Cigarette Pocket-டையும், தீப்பெட்டியும் எடுத்து கொண்டு கீழே போக..

தந்தை
ஐயோ..

சித்தார்த் கண்கள் திறந்து பார்க்க..

யுகி, பத்ரி பயந்து நடுங்க..

தந்தை தரையில் உட்கார..

என் சாமி.. என்ன பெத்தவளே..

உட்கார்ந்த படியே நகர்கிறார்..

என் மடிக்கு வாங்க.. என் மடில
உட்காருங்க..

அழுகிறார்..

என் உயிரே.. என்ன பெத்த தாயி..
அப்பாகிட்ட வாங்க டா..

அந்த விகார உருவம் சுருங்கி நகர..

தந்தை
பவானிமா.. என் ராஜா இங்க வாங்கடா..

நாலு காலில் ஒரு குழந்தை போல் தவழ்ந்து போகிறார்..

சித்தார்த் கண்களில் கண்ணீர்..

அப்பாக்கிட்ட வந்திடுங்கடா..

அந்த விகார உருவம் நகர்ந்து.. காற்றில் எழுந்து ஒரு மூலையில் இருந்த சிறிய பெட்டியின் கதவை திறந்து உள்ளே போக..

தந்தை தவழ்ந்து போய் அதன் அருகே சென்று..

அம்மால்ல.. வந்திரும்மா.. நம்ம வீட்டுக்கு
போயிடலாம்.. வீட்ல யாருமில்ல.. நம்ம
Factory-க்கு போயிடலாம்.. அப்பாவுக்கு
முதுகுவலிடா.. Ice தூக்க Help பண்ணு..
வாடா.. என் தங்கமில்ல..

அழுகிறார்..

அமைதி..

எதுக்குமா இங்க இருக்க.. ஏன்மா இவ்வளவு
தூரம் வந்திருக்க.. இவங்க யாரும் நம்ம
சொந்தமில்லயே.. இந்த தம்பி.. இந்த தம்பி
உனக்கு நல்லது தானே செய்ய பாத்துச்சு..
உன்ன Hospital-ல கொண்டு போய்..

அழுகிறார்..

காப்பாத்த..

சித்தார்த் அழுகிறான்..

அந்த பெட்டி அமைதியாக இருக்க..

நீ யாருக்கும் தொந்தரவு கொடுக்க
மாட்டியேடா.. அப்பா குடிச்சிட்டு சத்தமா
பேசுனா கூட மெதுவா பேச
சொல்லுவயேடா..

அழுகிறார்..

இங்க எதுக்குடா வந்து அடுத்தவங்களுக்கு
பாரமா இருக்க..

சித்தார்த் தலை குனிகின்றான்..

வந்திருங்கடா.. நாம ரெண்டு பேருமா
போயி.. நீ அந்த காருல இடிச்சுட்டு
போனவன எனக்கு கூட்டிட்டு போயி
அடையாளம் காட்டு.. நான்.. நா..

தன் பேண்ட் பாக்கெட்டில் கை விட்டு ஒரு பட்டன் கத்தி எடுத்து..

நான் இந்த கத்தியால குத்தி கொல
பண்ணிடுறேன்.. அப்பறம் வந்து எதாவது
விசமோ.. சுறுக்கோ போட்டு உன்கிட்ட
வந்திடுறேன்மா.. வாம்மா.. வந்திடு
செல்லமே.. அப்பா உன்ன பாக்காம..
சாப்பிடல.. குளிக்கல.. என்னால தனியா
இருக்க முடியலமா.. எனக்கு யாருமே
இல்லம்மா.. எனக்கு யாருமே இல்ல தாயி..

அழுகிறார்..

குழந்தை போல் அழுகிறார்..

அந்த பெட்டியின் மூடி விலக..

இரண்டு விகாரமான கைகள் வெளியே வந்து அந்த தந்தையின் கழுத்தை கட்டிப்பிடித்துக் கொள்ள..

கடவுளே.. என் பிஞ்சுகைய.. நான்
இப்படியா பாக்கணும்..

சித்தார்த் வாயை பொத்திக்கொள்ள.. கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து ஓட..

யுகியும், பத்ரியும் சாந்தமாக..

வாம்மா.. அப்பா கூட வா.. நாம போய்..
அந்த பாவி.. இப்ப எங்க சிரிச்சுகிட்டு
இருக்கானோ.. அவன காட்டு.. அவன கதற
கதற குத்தி கொதறிட்டு.. நம்ம
Factory-க்கு போயிடலாம்.. வா.. வா..
அப்பாவுக்கு அவன வந்து அடையாளம்
காட்டு.. வா..

அந்த விகார கைகள் தந்தையின் கழுத்திலிருந்து விடுவித்து பின்னால் போய் அந்த பெட்டிக்குள் புகுந்து கதவை சாத்திக்கொள்ள..

தந்தை திரும்பி..

பவானிம்மா.. வாடா..

சித்தார்த் எழுகிறான்..

அம்மா.. வாடா.. வா போகலாம்.. வாடா..

தந்தை எழுந்து நிற்கிறார்..

இங்க இருந்து போகலாம் வா.. வந்திருமா..

தந்தை அந்த பெட்டியை திறக்க..

அந்த விகார உருவம் ஊளையிட்டபடி வேறோரு ஓட்டைக்குள் புகுந்து கொள்ள..

இங்க இருந்து ஏன் அவங்களுக்கு தொந்தரவு
கொடுக்குற.. வந்திருடா.. மத்தவங்களுக்கு
கஷ்டம் கொடுக்காதடா.. வாம்மா..

அமைதி..

தந்தை அப்படியே நிற்க..

சித்தார்த் அவர் அருகில் வந்து..

அவர் தோளில் கை வைக்க..

தந்தை திரும்பி சித்தார்த்தை பார்க்க..

CUT TO

43. EXT - TEA SHOP - EARLY MORNING

சித்தார்த் இரண்டு Tea-யும், Bun-ம் வாங்கி நடந்து வர.. பின்னால் யுகியும், பத்ரியும் வர..

சித்தார்த் Platform-ல் உட்கார்த்திருக்கும் தந்தையிடம் Tea-யை கொடுத்து உட்கார்ந்து.. ஒரு Bun-னை அவரிடம் கொடுக்க..

தந்தை
எனக்கு வேணாம்பா..

சித்தார்த்
Please சாப்பிடுங்க சார்.. நீங்க எதுவும்
சாப்பிடல..

அவரிடம் கொடுக்க..

அவர் வாங்கி Tea-யில் முக்கி சாப்பிட்டு..

தந்தை
நீங்க என்ன பண்ணுறீங்க தம்பி..

சித்தார்த்
நான் இளையராஜா சாருக்கு Violin வாசிக்கிறேன் சார்..

தந்தை Tea-யை கீழே வைத்து.. கை எடுத்து கும்பிட்டு..

தந்தை
அவரு பெரிய சாமிப்பா.. என் பொண்ணு ஒரு நாளைக்கு 10 வாட்டியாவது "செந்தூரப் பூவே" பாட்டு கேக்கணும்..

கண்களில் கண்ணீர்..

சித்தார்த் Tea-யை எடுத்து அவரிடம் கொடுக்க..

அதை அவர் வாங்கி கொள்ள..

சித்தார்த்
சார்.. என்ன மன்னிச்சிடுங்க சார்.. நான் ரொம்ப Violent-டா நடந்துக்கிட்டேன்..

தந்தை
பரவால்லப்பா

சித்தார்த்
இல்ல சார்.. உங்க பொண்ண நான் எவ்வளவு தப்பா புரிஞ்சிக்கிட்டேன்.. எங்கம்மாவ அடிச்சவன அடிச்சி போட்டிருக்கு.. பாத்ரூம்ல அடிபட்டு கிடந்தவங்கள உயிர காப்பாத்திருக்கு.. இதெல்லாம் தெரியாம.. என்ன மன்னிச்சிடுங்க சார்..

கண்களில் கண்ணீர்..

அவர் சித்தார்த்தின் கையை பிடிக்க..

சார் எங்கம்மா Discharge ஆன உடனே ஊருக்கு அனுப்பிடுறேன்.. நான் எங்கயாவது வெளிய தங்கிக்குறேன்.. நீங்க எப்ப எப்ப உங்க பொண்ண பாக்கணும்னு தோணுதோ.. நீங்க வந்து பாருங்க சார்.. நான் சாவிய பக்கத்து வீட்டுல கொடுத்திட்டு போறேன்..

தந்தை
தம்பி.. இப்ப தெரியுது ஏன் என் பொண்ணு உங்க வீட்டுல வந்து தங்கிருச்சுனு.. உனக்கு ரொம்ப பெரிய மனசுப்பா.. எத்தன வாட்டி அவள கல்யாணம் பண்ணிக்கமானு கேட்டிருக்கேன்.. கடைசி வரைக்கும் மாட்டேன்னு சொல்லிட்டா.. எனக்கு புடிக்கிற ஆம்பளய பாக்கும் போது சொல்லுறம்பான்னு

சொல்லிட்டு..

அழுகிறார்..

சித்தார்த் கண்களில் கண்ணீருடன்..

சித்தார்த்
உங்க பொண்ணு பொழச்சிருந்தா எனக்கு
உங்க பொண்ண கொடுத்திருங்கனு உங்க
காலுல வந்து விழுந்துருப்பேன் சார்..

தந்தை அமைதியாக ரோட்டைப் பார்க்க..

சித்தார்த் ரோட்டைப் பார்க்க..

இருவரும் கண்களை துடைத்துக் கொள்ள..

தந்தை எழுகிறார்..

கண்களை துடைத்துக் கொண்டு..

சித்தார்த் எழ..

தந்தை
என் பொண்ணு இனிமே உங்க வீட்ல
இருக்கமாட்டாப்பா..

சித்தார்த்
Sir..

சித்தார்த் புரியாமல்..

தந்தை
இன்னிக்கி சாய்ங்காலம் என் பொண்ண
எரிச்சுறேன்பா..

சித்தார்த்
(பதறி)
சார்.. வேணாம் சார்..

தந்தை சித்தார்த்தை பார்க்க.. நண்பர்கள் நம்ப முடியாமல் ஒருவனை ஒருவன் பார்த்து கொள்ள..

இவளோ நாள் நான் எப்படியாவுது உங்க மகள
வீட்ட விட்டு வெளியே அனுப்பணும்னு
கஷ்டப்பட்டேன்.. முடியல.. இப்ப நீங்க
எரிச்சா போயிடுவா.. ஆனா எனக்கு
தெரியும்.. நம்ப ரெண்டு பேரு மனசுமே
ஆறாது.. எனக்கு மூணு நாள் கொடுங்க
சார்.. உங்க மகள இடிச்சி கொன்னவன
நான் கண்டுபிடிச்சு உங்க கால்ல போடுறேன்..
அவனுக்கு தண்டனைய வாங்கி தந்திட்டு நாம
ரெண்டு பேருமே பவாணிய அடக்கம்
பண்ணுவோம்..

தந்தை
இல்லப்பா..

சித்தார்த்
(தீர்மானத்துடன்)
Please Sir.. நான் அவன
கண்டுபிடிக்கணும்.. Please ஒரு மூணு நாள்
பொறுங்க..

தந்தை
சரிப்பா..

ஒரு ஆட்டோ வர.. அதை அவர் நிறுத்தி.. ஏறிப்போகிறார்..

சித்தார்த் ரோட்டில் நிற்க..

நண்பர்கள் அவனிடம் வர..

Camera ஒரு வேப்பமரம் மேல் போக..

பேய் மரத்தின் உச்சியில்..

பேய் நின்று மெதுவாக காற்றில் ஆட..

பேயின் முகத்தில் கோபம்..

அந்த கோபம் ஓலமாக வெளிவர..

டீக்கடையில் உள்ளவர்கள் புரியாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக்
கொள்கிறார்கள்..

CUT TO

44. INT - POLICE STATION - DAY

ஒரு SI வந்து உட்கார..

சித்தார்த், யுகி, பத்ரி நாற்காலியிலிருந்து எழுந்து வர..

SI
இதுல யாரு யுகேஸ்வரன்..

யுகி
நான் தான் சார்..

SI
பவா செல்லதுரை உங்க மாமாவா..?

யுகி
ஆமா சார்..

SI
இந்த கேஸ்ல உனக்கு என்ன சம்பந்தம்..

யுகி சித்தார்த்தை காட்டி..

யுகி
இறந்து போன அந்த பவானி இவனுக்கு
சொந்தம் சார்..

சித்தார்த்

அந்த பொண்ணு அப்பா சாப்பிடாம இருக்காரு சார்..

SI

அந்தாளு என்ன லூசா.. பொண்ணு இறந்து போச்சு.. கஷ்டம்தான்.. அதுக்குனு எவன் இடிச்சானு கண்டு பிடிச்சிங்களா.. அரெஸ்ட் பண்ணுனிங்களானு தாட்டு பூட்டுனு கேள்வி கேக்குறான்.. வயசான ஆளாச்சுனு பாத்தேன்.. இல்ல..

சித்தார்த்தை பார்த்து..

அந்தாளு உனக்கு என்ன முறை வேணும்..

சித்தார்த் அவரைப் பார்க்க..

பத்ரி

மாமா முறை சார்..

சித்தார்த் தலை குனிகிறான்.. நிமிர்ந்து..

சித்தார்த்

சார்.. அந்த கார யாரு ஓட்டுனானு தெரிஞ்சா..

SI

தெரிஞ்சா? தெரிஞ்சா என்ன பண்ணுவ?

சித்தார்த்

தண்டன கொடுத்து..

SI

அப்ப நாங்க எதுக்கு? நாக்கு வழிக்கிறதுக்கா..

யுகி

கொன்னவன் யாருனு தெரிஞ்சா கொஞ்சம் மனசு ஆறும் சார்..

SI

டெய்லி ஒரு பத்து accident நடக்குது.. இடிச்சுட்டு போயிட்டே இருக்கானுங்க.. நம்ப தான் உஷாரா இருக்கனும்..

எல்லோரும் அமைதியாக இருக்க..

அந்த பொண்ண இடிச்சவன புடிக்க முடியாது.. அது ஒரு திருட்டு கம்நாட்டி.. கார திருடிட்டு வேகமா போயிருக்கான்.. இந்த பொண்ணு குறுக்க வந்துடுச்சு.. இடுச்சிட்டான்.. பயந்து போயி ரோட்டுல விட்டுட்டு abscond ஆயிட்டான்..

பத்ரி

எங்க கார விட்டான் சார்..

SI

Pilot Theater பின்னால..

யுகி
யாரு சார் கார் ஓனர்..

SI
Habibullah ரோட்ல ஒரு Mechanic கிட்ட காரு சேல்சுக்கு வந்திருக்கு.. வெளிய நிப்பாட்டிட்டு போயிருக்கான்.. நைட்டு இவன் உருவிட்டான்..

எழுகிறான்..

திருட்டு போன பொருளு திரும்ப வந்துடுச்சு.. கேசு close..

SI நடந்து போகிறான்..

சித்தார்த் அமைதியாக உட்கார்ந்திருக்க..

CUT TO

45. INT - SIDDHARTH HOUSE - DAY

POV நகர.. வேகமாக நகர..

இங்கும் அங்கும் நகர..

CUT TO

46. INT - MECHANIC SHOP - DAY

Mechanic ஒரு பையனை அறைந்து..

MECHANIC
எங்கிட்டயே பித்தல மாத்துறயா? Coil எங்கடா..

பையன்
சத்தியமா எனக்கு தெரியாதுன்னே..

மீண்டும் அறைகிறான்..

MECHANIC
எந்த காயிலான்கடைல போட்ட.. சொல்லு..

பையன்
எங்கம்மாறிய நான் திருடலண்ணா..

ஒரு ஆட்டோ வந்து நிற்க..

சித்தார்த், யுகி, பத்ரி இறங்க..

Mechanic அவர்களைப் பார்த்து..

MECHANIC
போ வெளிய.. காயிலோட உள்ள வா.. இல்ல.. சுண்ணாம்பு தடவிருவேன்..

ஒரு Spanner-ஐ எடுத்து அடிக்கபோக..

பையன் ஓடி ஒரு ஓரமாய் நிற்க..

சித்தார்த் அந்தப் பையனை பார்த்துக் கொண்டே வர..

Mechanic நடந்து வந்து..

MECHANIC
என்ன சார்..

யுகி
Second Hand Car இருக்குமானு..

MECHANIC
என்ன சார்.. எல்லாம் புது கார் வாங்குறான்.. நீ என்னடான்னா.. Second Hand கேக்குற..

பத்ரி
பட்ஜெட் இல்லப்பா..

MECHANIC
என்ன காரு பாக்குற..

சித்தார்த்
அம்பாசிடர்..

MECHANIC
(யோசித்து)
வா..

Mechanic அந்த பையனை பார்த்து.. ஒரு கல்லை எடுத்து எறிய.. பையன் வெளியே ஓடுகிறான்..

சித்தார்த் அவனைப் பார்க்கின்றான்..

CUT TO

46A. INT - SHED - DAY

Mechanic வந்து ஒரு வெள்ளை அம்பாசிடரை காட்டி..

MECHANIC
95 மாடலு சார்.. Single Owner..

பத்ரி
என்ன ரேட்டு..

MECHANIC
மூன்றுவா..

பத்ரி
ரொம்ப ஜாஸ்தியா இருக்கேய்யா..

MECHANIC
உன் பட்ஜெட் என்ன..

யுகி
ரெண்டு ரூபாக்குள்ள..

MECHANIC
கஷ்டம்பா.. அதோ மாருதி இருக்கு
பாக்கிறயா..

சித்தார்த் மூலையில் கவர் போட்டிருக்கும் காரை பார்க்கிறான்..

Mechanic நடந்து மாருதி காரை காட்ட..

யுகி
எவ்வளோ..

MECHANIC
(இரண்டு விரலைக்காட்டி)
நீ சொன்ன ரேட்டு தான்..

சித்தார்த் நடக்கின்றான்..

யுகி
Second Hand மாருதி இரண்டு ரூபாயா?

MECHANIC
நீ ஒரு ரேட் சொல்லு..

சித்தார்த் கவரை விலக்கி பார்க்க..

அது பச்சை அம்பாசிடர்..

சித்தார்த்
இது எவ்வளோ..?

Mechanic சித்தார்த்தை பார்த்து..

MECHANIC
அது Sale-க்கு இல்ல..

வேகமாக நடந்து வந்து கவரை சித்தார்த்திடம் பிடிங்கி மூடுகிறான்..

சித்தார்த் யுகியைப் பார்க்க..

யுகி
அது என்ன ரேட் சொல்லுண்ணா..

MECHANIC
அது Sale-க்கு இல்லப்பா..

பத்ரி
அப்ப ஏன் இங்க நிக்கிது..

MECHANIC
ஆங்.. அதுக்கு உடம்பு சரியில்ல..

மூவரும் பார்த்துக்கொள்ள..

Mechanic நடந்து..

நீங்க கௌம்புங்க.. நீங்க காரு வாங்கிற
மாதிரி தெரியல.. வம்பு வாங்க வந்த மாதிரி
தெரியுது..

யுகி
ஹலோ..

MECHANIC
டேய் போடா..

பத்ரி
இப்ப என்ன நடந்திச்சு..

MECHANIC
Dance நடந்திச்சு வெளிய போ..

சித்தார்த் நடந்து வெளியே போகிறான்..

யுகியும், பத்ரியும் வெளியே வர..

அந்தப்பையன் கேட்டின் ஓரத்தில் நிற்க..

MECHANIC
இன்னொரு தடவ பாத்தேன்..

பையன் ஓடி ஒரு மரத்தின் ஓரம் ஒளிந்து கொள்ள..

சித்தார்த் அவனிடம் வந்து நிற்கிறான்..

பையன் அவனை பார்க்க..

CUT TO

47. INT - BIRIYANI SHOP - DAY

பையன் பிரியாணி சாப்பிட.. பக்கத்தில் பத்ரி எதிரே.. சித்தார்த், யுகி..

சித்தார்த்
அந்தப் பச்ச அம்பாசிடர் விலைக்கு
வேணும்பா..

பையன்
அத எங்க ஓனரு கொடுக்க மாட்டாரு சார்..

சித்தார்த்
ஏன்..

பையன்
அது பிரச்சன காரு சார்..

சித்தார்த்
யாரையாவது இடிச்சு கொன்னுட்டாங்களா?

பையன்
இல்லை.. அது வேற மேட்டரு..

சித்தார்த்
என்ன மேட்டர்..

பையன்
எங்க ஓனரு சொந்தக்காரர் ஒருத்தர் காரை
எடுத்துகிட்டு போனாரு.. சாயங்காலம் போலீஸ்
வந்திருச்சு.. அதுல இருந்து எல்லார்
மேலையும் வள்ளு வள்ளுனு விழுறாரு..

யுகியும், பத்ரியும் பார்த்துக்கொள்ள..

சித்தார்த்
அந்த சொந்தக்காரர் பேர் என்ன..

பையன்
(சாப்பிட்டுக்கொண்டே)
சம்பத்து..

சித்தார்த்
அவரு வீடு எங்க..

பையன் யோசித்து..

பையன்
ஒரு தடவ அவங்க வீட்டுல கூழு
ஊத்துனாங்க..

யோசனை வந்து..

தெலுங்கு படமெல்லாம் போடுவாங்களே அது
என்ன தியேட்டர்..

யுகி
Pilot..

பையன்
ஆங்.. அது பின்னால இருக்குற ஹவுசிங்
போர்டுல இருக்குறாரு..

சித்தார்த் அவனையே பார்க்கின்றான்..

CUT TO

48. INT - SIDDHARTH HOUSE - DAY

POV அமைதியாக ஒரே இடத்தில் இருக்க..

CUT TO

49. EXT - SALOON - DAY

சித்தார்த் ஒரு சலூன் உள்ளே போகிறான்..

CUT TO

49A. INT - SALOON - DAY

சித்தார்த் வந்து உட்கார..

சலூன்காரர் ஒருவனை சவரம் செய்தபடி இருக்க..

செய்யப்படுபவன் கண்கள் மூடி இருக்க..

சலூன்காரர்
Cutting-ஆ.. Saving-ஆ

சித்தார்த்
ரெண்டும்..

சலூன்காரர்
சீக்கிரம் முடிஞ்சிரும்..

யுகி வந்து..

யுகி
அண்ணே.. இங்க பக்கத்தில எதாவுது டாக்டர்
இருக்காரா..

சலூன்காரர் நடந்து வந்து..

சலூன்காரர்
அடுத்த தெருல இருக்காரு..

பத்ரி கீழே உட்காருகிறான்..

யுகி பத்ரியை தூக்க..

யுகி
ஒரு கை கொடுங்கண்ணே..

சலூன்காரர்
என்னாச்சுப்பா..

சவரக்கத்தியை Shelf-ல் வைத்து நடந்து வெளியே போக..

சித்தார்த் எழுந்து கதவின் கீழே வைக்கப்பட்டிருந்த கட்டையை தள்ள..

கதவு சாத்தி கொள்ள..

சித்தார்த் சவரக்கத்தியை எடுத்து.. சாய்ந்து தூங்குபவரின் பின்னால் வந்து
கழுத்தின் அருகே கத்தியை கொண்டு போய்..

சித்தார்த் சவரக்கத்தியால் அவன் கழுத்தில் அழுத்தி..

12-ஆம் தேதி காலைல நீதானே அந்த
பொண்ண இடிச்சு.. கொன்ன..

சம்பத்
(மிரண்டு)
சார்.. யாரு சார் நீ.. கத்திய எடு..

சித்தார்த் கத்தியை அழுத்தி..

சித்தார்த்
சொல்லுடா ராஸ்கல்.. அந்தப் பொண்ண
நீதானடா கொன்ன..

சம்பத்
ஐயோ.. நான் யாரையும் கொல்லல சார்..

கத்தியை அழுத்துகிறான்..

சம்பத்
என் குழந்தை சத்தியமா நான் யாரையும்
கொல்லல சார்..

சித்தார்த்
டேய்.. நீதான அந்த கார திருடீட்டு வந்த..

கத்தியை அழுத்த..

சம்பத் ஒரு கணம் ஸ்தம்பித்து இருக்க..

சொல்லுடா.. உண்மைய சொல்லு..

சம்பத்
சார்.. நான் திருடுனத யாருகிட்டயும்
சொல்லிடாதீங்க சார் என் பொண்டாட்டிக்கு
தெரிஞ்சா அவ நாண்டுக்கிட்டு செத்துருவா
சார்..

சித்தார்த்
(புரியாமல்)
டேய்.. அன்னிக்கு நீ பச்சை காருல தானே
வந்த..

சம்பத்
ஆமா சார்..

சித்தார்த்
நீ அந்த தேனாம்பேட்டை 2nd avenue-ல
தானடா வேகமா வந்த..

சம்பத்
ஆமா சார்..

சித்தார்த்
நீ அந்த பொண்ண இடிக்கல..

சம்பத்
சத்தியமா நான் யாரையும் இடிக்கல..

சித்தார்த் ஒரு வினாடி புரியாமல் பார்த்து..

சித்தார்த்
(கத்தியை அழுத்தி)
டேய்.. நீ பொய் சொன்ன.. உன் கழுத்த..

சம்பத்
அறுசார்.. கழுத்த அறு.. நான் சொல்லுறத
முழுசா கேட்டுட்டு அறு சார்.. என்
பொண்டாட்டிக்கு பதிமூணு வருசத்துக்கப்பறம்
குழந்த பொறந்துச்சு.. வந்த உடனே
செத்துப்போச்சு.. தலைல ஒன்னும் ஓடல..
Egmore Hospital-ல போய் ரெட்ட குழந்த
பிறந்த வார்டுல போய் ஒரு குழந்தைய
தூக்கிட்டு வந்திட்டேன்.. காரை Pilot
theater பக்கத்தில விட்டுட்டு வந்துட்டேன்

சார்.. பாவம் என்னால எங்க Mechanic
மாமா போலீஸ்ல அவதிபடுராரு.. நான்
சொல்லுறது எல்லாம் உண்மை சார்.. நான்
யாரையும் கொல்லல சார்..

சித்தார்த் கத்தியை எடுத்து பின்னால் இருந்த நாற்காலியில் உட்கார..

சம்பத் சேரைவிட்டு இறங்கி நடந்து வந்து..

சித்தார்த்தின் கையை பிடித்து..

சம்பத்

சார்.. என் குழந்தைய பிரிச்சுடாதீங்க சார்..
என் பொண்டாட்டி செத்து போவா சார்..
உன் காலுல விழுறேன் சார்..

சம்பத் காலில் விழ..

சித்தார்த் அவனை புரியாமல் பார்க்க..

நான் சொல்லுறத நம்புங்க சார்..

சம்பத் எழுந்து சித்தார்த்தின் கையை பிடித்து..

வா சார்.. என் கூட வா..

சம்பத் கதவை திறக்க..

காற்று அடிக்க..

இருவரும் கீழே சாய..

சலூனில் உள்ள கண்ணாடிகள் உடைய..

சம்பத் கீழே உட்கார்ந்து முகத்தை மூடிக்கொள்ள..

கண்ணாடிகள் உடைந்து கீழே கிடக்க..

சித்தார்த் சிலை போல் எழுந்து நிற்க..

அத்தனை கண்ணாடிகளிலும் சித்தார்த்தின் முகங்கள்..

சித்தார்த் தன் முகங்களை பார்க்கின்றான்..

அந்த முகங்கள் மேல்.. கரும்புகை பரவ..

சித்தார்த் சம்பத்தை தூக்கி வெளியே போகிறான்..

CUT TO

50. INT - HOUSING BOARD HOUSE - DAY

தாயும், சேயும் அமைதியாக தூங்க..

சித்தார்த் அவர்களைப் பார்த்து.. வெளியே வர..

சம்பத் நிற்கின்றான்..

சம்பத்
இப்பவாவது நம்புறீங்களா சார்..

சித்தார்த் அவனைப் பார்க்க..

நான் சின்ன வயசில இருந்து திருட்டு பய
தான் சார்.. என் குழந்தை சத்தியமா இனிமே
திருட மாட்டேன் சார்.. என்னய போலீஸ்ல
புடிச்சு குடுத்திடாதீங்க சார்..

சித்தார்த் சுவரையே பார்த்துக் கொண்டிருக்க..

ஒரு 16 வயது பெண் குடத்துடன் தண்ணீர் எடுத்து வர..

சம்பத் அவளைப் பார்த்து..

யடியே சரசு.. அன்னிக்கு நம்ம குழந்தை
கூட்டி வந்தோம்ல..

சரசு
(சித்தார்த்தை பார்த்து)
நான் எங்க வந்தேன்.. எனக்கு தெரியாது..

அவள் வேகமாக படியேற..

சம்பத்
யேய்.. இவர் நம்ம Friend-டி..

சித்தார்த்திடம் திரும்பி..

என் சித்தி பொண்ணு சார்..

சித்தார்த் அவளைப் பார்க்க..

பெண்
நான் போறண்ணா..

நடந்து போகிறாள்..

சம்பத்
ஒரு நமிசம் நில்லுடி..

திரும்பியபடி நிற்க..

ஏன்டி அண்ணிக்கி நாம தேனாம்பேட்டை உள்ள
திரும்பும் போது நீ எதாவது Accident-ஐ
பார்த்த..

அவள் சைடில் திரும்பி..

பெண்
ஒரு பெண்ணா..?

சித்தார்த் அதிர்ந்து அவளைப் பார்க்க..

சம்பத்
ஆமாடி.. பாத்தியா..

அவள் திரும்பி

பெண்
Scooter-ல வந்து கீழ விழுந்துச்சே
அதுவா..

சித்தார்த் ஓடி அவள் கையை பிடித்து..

சித்தார்த்
ஆமமா.. ஆக்ஸிடென்ட பாத்தீங்களா..

பெண்
(சம்பத்திடம்)
நான் குழந்தைய வச்சிகிட்டு பின்னால
உக்காந்திருந்தேன்ல.. யாராவுது
தொறத்திக்கிட்டு வர்ராங்கலானு பாத்துக்கிட்டே
வந்தேன்.. அப்ப நாம தேனாம்பேட்டைல பூறும்
போது.. ஒரு பொண்ணு Scooter-ல..
நம்மள கிராஸ் பண்ணிபோய்..

சித்தார்த்
போயி

அந்தப் பெண் ஏதோ சொல்ல..

பெண்
நமக்கு பின்னால வந்த காருல மோதிருச்சு..

CUT TO

51. EXT - ROAD - DAY

காரின் அருகே யுகியும், பத்ரியும் நிற்க..

சித்தார்த் வருகிறான்..

யுகி ஓடிச்சென்று..

யுகி
எதாவுது Information கிடச்சிதாடா..

சித்தார்த்
கெடச்சிது..

காரில் ஏறி Start செய்ய..

யுகியும், பத்ரியும் காரில் ஏறிக் கொள்ள..

கார் கிளம்ப..

பத்ரி
என்ன clue டா கெடச்சிது..

சித்தார்த் அமைதியாக முன்னே பார்க்க..

இரண்டு பைக்காரர்கள் ரோட்டில் விழ..

எதுவோ சித்தார்த் காரை நோக்கி வர..

யுகியும், பத்ரியும் மிரண்டு பார்க்க..

முன்கண்ணாடி உடைந்து.. நொறுங்க..

சித்தார்த் கீழே குனிந்து கொள்ள..

யுகியும், பத்ரியும் எழுந்து பார்க்க..

நடுவில்..

பிசாசு..

யுகியும், பத்ரியும் அலற..

பிசாசு இருவரின் தலைமயிரையும் பிடித்து சுழற்றி அடிக்க..

அலறுகிறது..

சித்தார்த் காரை நிறுத்த..

பிசாசு யுகியையும், பத்ரியையும் அடிக்க..

இருவரும் கதவை திறந்து ஓட..

சித்தார்த் மீண்டும் ஓட்ட..

கதவுகள் சாத்திக்கொள்ள..

பிசாசு உறும..

சித்தார்த் காரை ஓட்ட..

பிசாசு அலற..

சித்தார்த் அமைதியாக காரை ஓட்டுகிறான்..

பிசாசு பின்கண்ணாடியை உடைத்து வெளியே குதிக்கிறது..

CUT TO

51A. EXT - ROAD - DAY

ஆட்டோ ஸ்டாண்டில் இருந்த இரண்டு பேர் எழுந்து பார்த்து..

ஒருவன்
ராஜி.. அங்கபார்..

அடையாளம் சொன்ன ஆட்டோக்காரர் அடைக்கலம் ஆட்டோவிலிருந்து வெளியே வந்து பார்க்க..

சித்தார்த் ஓடி வருகிறான்..

ஆட்டோக்காரரிடம் வந்து ஒரு புத்தகத்தை விரித்து ஒரு பச்சை படத்தை காட்டி..

சித்தார்த்
இது என்ன கலரு சார்..

காற்று பலமாக அடிக்க..

ஆட்டோவின் கண்ணாடிகள் உடைய..

ஆட்டோக்காரர் மிரண்டு பார்க்க..

சித்தார்த் புத்தகத்தை காட்டி..

சித்தார்த்
இது என்ன கலரு சார்..

ஆட்டோ மல்லாந்து விழுகிறது..

ஆட்டோக்காரர் மிரள..

மற்ற ஆட்டோக்கள் இழுக்கப்பட..

ஆட்டோக்காரர் ஆட்டோவை தூக்கப் போக..

சித்தார்த் ஓடிவந்து புத்தகத்தை அவரின் முன்னே நீட்ட..

சித்தார்த் அடிக்கப்படுகிறான்..

கீழே விழுகிறான்..

புத்தகம் கிழிக்கப்பட..

சித்தார்த் புத்தகத்தை சட்டைக்குள் மறைத்துக் கொள்ள..

சித்தார்த் அடிக்கபட்டு.. ரோட்டில் இழுக்கப்பட..

ஆட்டோக்காரர் ஓடிவந்து சித்தார்த்தை தூக்க..

காற்று அடிக்க..

சித்தார்த் புத்தகத்தை காட்டி..

சித்தார்த்
இத பாத்து சொல்லுங்க.. இது என்ன கலரு..

ஆட்டோக்காரர்
(அடைக்கலம்)
பச்சை..

சித்தார்த் இன்னொரு பக்கத்தை பிரித்து காட்டி..

சித்தார்த்
இது..

ஆட்டோக்காரர் கண்களை விரித்து.. உற்றுப்பார்க்க..

சித்தார்த் இழுக்கப்பட்டு ஆட்டோவின் மேல் மோத..

ஆட்டோக்காரர்கள் புரியாமல் பார்க்க..

ஆட்டோக்காரர் ஓடிவந்து ஆட்டோவை தூக்கி.. நிறுத்தி உள்ளே உட்கார..

சித்தார்த் புத்தகத்தை பிரித்து வேறொரு பக்கத்தை ஆட்டோவின் முன்னே காட்டி..

சித்தார்த்
இது என்ன கலரு சார்..

ஆட்டோக்காரர்
(அடைக்கலம்)
இதுவும்.. ம்.. பச்சை கலரு தான்..

சித்தார்த் புத்தகத்தை கீழே போடுகிறான்.. காற்று நிற்கிறது..

தள்ளாடி நடந்து வர..

ஆட்டோக்காரர் அந்த புத்தகத்தை எடுத்துப்பார்க்க..

CUT TO

சிவப்பு வானம்.. இரவாக..

நிலவு மிதக்க..

CUT TO

52. EXT - ICE FACTORY - NIGHT

தந்தை நிற்க..

சூறாவளி அடிக்க..

தந்தை வானத்தை பார்த்து திரும்ப..

சிகப்பு கார் வருகிறது..

காம்பவுன்டுக்குள் வந்து நிற்க.. ஒருவன் இறங்க..

அவன் சித்தார்த்..

தந்தை கண்களை சுருக்கி பார்க்க..

சித்தார்த் வேகமாக நடக்க..

சூறாவளி அவனை நோக்கி நகர்ந்து தள்ள..

சித்தார்த் நடக்க முடியாமல் நடக்க..

அவன் முன்னே பிசாசு தோன்ற..

சித்தார்த் நடக்க..

பிசாசு அலறி அவனை பயமுறுத்த..

சித்தார்த் நடக்க..

பிசாசு அவன் கைகளை பிடித்து இழுக்க..

சித்தார்த் திமிறி நடக்க..

பிசாசு அவன் தோளின் மேல் ஏறி அழுத்த..

சித்தார்த் கீழே விழுகிறான்..

புரள்கிறான்..

தந்தை சித்தார்த் புரள்வதை பார்த்து ஓடி வர..

சித்தார்த் எழ..

பிசாசு அலறி..

சித்தார்த்தின் கால்களை பிடித்து இழுக்க..

சித்தார்த் நடக்க முடியாமல் நடக்க..

தந்தை சித்தார்த்திடம் ஓடி வந்து..

தந்தை
தம்பி..

காற்று அடிக்க..

சித்தார்த்
உங்க பொண்ண கொன்னவன
கண்டுபிடிச்சிட்டேன் சார்..

தந்தை
யாருப்பா.. யாரவன்..

சித்தார்த் கண்களில் கண்ணீர் வர..

தன் இரண்டு கைகளையும் தன் நெஞ்சில் வைத்து..

சித்தார்த்
நான் தான் சார் அந்தப் பாவி..

தந்தை நம்ப முடியாமல் பின்னால் நகர்ந்து..

தந்தை
என்னது..

காற்று அடிக்க..

சித்தார்த்
நான் தான் உங்க புள்ளய கொன்னேன்.. நான்
தான் சார் நீங்க தேடுற கொலகாரன்..
என்னய கொல்லுங்க சார்..

மண்டியிட்டு..

என்னய கொன்னுடுங்க சார்..

தந்தை
ஐயோ.. தம்பி.. நீ கொன்னுருக்க
மாட்டப்பா.. நீ தங்கம்டா.. நீ தங்கம்..

சித்தார்த் அழுகிறான்..

காற்று நிற்க..

சித்தார்த்
இல்ல சார்.. நான் தான் கொன்னேன்..
அன்னிக்கி காலைல நான்..

பிசாசு கீழே உட்கார்ந்து அழ..

CUT TO

53. EXT - ROAD - DAY

அந்தப் பெண் Scooty-ல் வர..

CUT TO

53A. EXT - ROAD - DAY

ஆட்டோவில் அடைக்கலம் புத்தகம் படிக்க..

FOCUS SHIFT TO

பின்னால் ஒரு பச்சை கார் வருகிறது..

CUT TO

53B. INT - GREEN CAR - DAY

சம்பத் ஓட்ட..

பின்னால் குழந்தையுடன் சரசு

CUT TO

53C. EXT - ROAD - DAY

ஒரு சந்திலிருந்து ஒரு சிகப்பு கார் வர..

CUT TO

53D. INT - RED CAR - DAY

சித்தார்த் ஓட்டுகிறான்..

CUT TO

53E. EXT - ROAD - DAY

Scooty பச்சை காரை cross செய்ய..

CUT TO

53F. INT - RED CAR - DAY

சித்தார்த் பக்கத்து சீட்டில் இருந்த cell அடிக்க..

சித்தார்த் குனிந்து இடது கையால் எடுக்க.. Steering-ஐ வலது கை திரும்ப..

CUT TO

53G. EXT - ROAD - DAY

சிவப்பு கார் திரும்ப..

53H. EXT - ROAD - DAY

Scooty-ல் வந்த பெண் மிரள..

53I. INT - RED CAR - DAY

சித்தார்த் எழுந்து steering-ஐ Balance செய்து செல்லை காதில் வைக்க..

அந்தப் பெண் சித்தார்த்தின் வலது பக்க முகத்தை பார்க்க..

53J. EXT - ROAD - DAY

சிவப்பு கார் திரும்ப..

Scooty சிவப்பு காரின் பின்னால்.. விளிம்பில்.. மயிர் இழையில் உரச..

சத்தம் வராமல்..

Scooty சுற்ற..

அந்தப் பெண் காற்றில் எழும்ப..

53K. INT - GREEN CAR - DAY

சரசு திரும்பி பார்க்க.. அந்த பெண் உருள..

CUT TO

53L. EXT - ROAD CORNER - DAY

அடைக்கலம் ஆட்டோவில் உட்காந்தவாறு உற்றுப் பார்க்க..

அந்த பெண் கீழே உருண்டு விழுகிறாள்..

அடைக்கலம் வெளியே வந்து பார்க்க..

சிவப்பு கார் சிவப்பும் பச்சையுமாய் கலந்து போக..

CUT TO

53M. EXT - STREET - DAY

சிவப்பு கார் திரும்பி வந்து ஒரு இடத்தில் நிற்க..

ஒரு கணவன் மனைவி நடந்து போக..

53N. INT - RED CAR - DAY

சித்தார்த்
(Cell-ல்)
அம்மா நான் கார் ஓட்டிட்டு இருக்கேன்மா..

மறுமுனை
..

சித்தார்த் எரிச்சலாக Ignition-ஐ OFF செய்து காரைவிட்டு இறங்க..

53O. EXT - STREET - DAY

கணவன் மனைவி ரோட்டின் முனைக்கு வந்து பார்த்து..

மனைவி கத்த..

சித்தார்த் திரும்பி பார்க்க..

கணவன் ஓட..

சித்தார்த் ஓட..

CUT TO

53P. EXT - ROAD - DAY

ஆட்டோக்காரர் ஓடி வர..

CUT TO

53Q. EXT - ROAD - DAY

கணவன் ஓடி வர..

பின்னால் சித்தார்த் ஓடி வருகிறான்..

CUT TO

53R. EXT - PLATFORM - DAY

அந்தப் பெண் கீழே கிடக்க..

தலையிலிருந்து ரத்தம்..

CUT TO

53S. EXT - ROAD - DAY

சித்தார்த்
என்ன ஆச்சு..

CUT TO

53T. INT - AUTO - DAY

சித்தார்த் இறங்கப் பார்க்க..

அந்தப் பெண் கையை இழுக்க..

CUT TO

53U. EXT - ROAD - DAY

சிவப்பு Signal..

CUT TO

53V. EXT - ROAD - DAY

பைக்காரன்
டேய் Red Signal கண்ணு தெரியலயாடா?

ஆட்டோக்காரர் கண்களை மூடிப் பார்க்க..

CUT TO

53W. INT - HOSPITAL - DAY

சித்தார்த் stretcher-ஐ தள்ளிக் கொண்டு போக..

அந்தப் பெண் சித்தார்த்தின் கையை பிடித்து கொண்டிருக்க..

CUT TO

53X. INT - OPERATION THEATER - DAY

நர்ஸ் அந்தப் பெண்ணின் கையை பிரிக்க..

அந்தப் பெண் எழுந்து..

பெண்
ப்பா..

கீழே விழுகிறாள்..

CUT TO

54. EXT - ICE FACTORY - NIGHT

சித்தார்த்
உங்க புள்ளய.. உங்க உயிர நான் தான்
சாகடிச்சுட்டேன்.. என்ன கொல்லுங்க சார்..
என்னய கதற கதற.. கொல்லுங்க சார்..

தந்தை
ஐயோ.. உன்ன எப்படிடா கொல்லுவேன்..
உன்னால செத்துப்போன என் பொண்ணே
உன்ன இவ்வளவு நேசிக்கும் போது நான்
யாருடா உன்ன கொல்லுறதுக்கு.. ஐயோ
கடவுளே இந்த குழந்தைகள சேர்த்துப்
பாத்திருக்க கூடாதாய்யா.. என் குழந்தைங்கள
பிரிச்சிட்டயேடா.. பாவி..

சித்தார்த் அழ..

சித்தார்த்
சின்ன தப்பு செஞ்சாவே தாங்காத இந்த
உலகத்தில கொல செஞ்ச என்ன உங்க
பொண்ணு.. ஏன் சார் என்ன மன்னிக்கனும்..

அழுகிறான்..

ஐயா எனக்கு மனசு ஆறாதுய்யா.. என்ன
துண்டம் துண்டமா வெட்டி உங்க
பொண்ணோட என்ன புதச்சிடுங்க சார் என்ன
அந்த கோயில்ல புதச்சிடுங்க சார்..

சித்தார்த் எழுந்து கல்லறை நோக்கி வேகமாக நடக்க..

தந்தை
ஐயோ.. பவானி.. என் செல்லமே.. உன்ன
எரிச்சிருக்கலாமேடி..

சித்தார்த் நடக்க..

தந்தை எழுந்து ஓடுகிறார்..

தந்தை
டேய் தம்பி.. டேய் என் பவானி அங்க
இல்லடா.. என் குலதெய்வம் அந்த மண்ல
இல்லடா..

சித்தார்த்தை பிடித்து நிறுத்தி..

என் பொண்ண இங்க பொதைக்கலடா..

சித்தார்த் புரியாமல் பார்க்க..

தந்தை
ஊரை ஏமாத்திரதுக்காக நான் ஆடுன
கூத்துடா.. கொன்னவன பழிவாங்குற
வரைக்கும் என் பொண்ணை புதைக்க எனக்கு
மனசு வல்லடா..

சித்தார்த்
சார்..

தந்தை
வாப்பா.. என் தெய்வத்த வந்து பாரு.. உன்
பவானிய வந்து பாரு..

அவனை இழுத்து கொண்டு அவர் ஓட..

சிகப்பு காரின் கீழே உட்கார்ந்து தலை குனிந்தவாரு பிசாசு உட்கார்ந்திருக்க..

CUT TO

54A. INT - ICE FACTORY - NIGHT

Shutter பூட்டி இருக்க..

தந்தை ஒரு சாவியால் பூட்டை திறந்து..

Shutter-ஐ லேசாக தூக்கி.. படுத்தவாறு உள்ளே நுழைய..

சித்தார்த் படுத்தவாறு நுழைய..

CUT TO

54B. INT - ICE ROOM- NIGHT

தந்தை எழுந்து ஓடிப்போய் ஒரு லீவரை இழுத்துவிட..

சித்தார்த் அவரை பார்க்க..

நடுவில் இருந்து ஏதோ சத்தம் கேட்க..

சித்தார்த் பார்க்க..

தண்ணீர் விலக..

ஒரு பெரிய செவ்வக பனிப்பாறை மேலெழும்பி வர..

சித்தார்த் பார்க்க..

தந்தை
பாருடா.. தம்பி.. நம்ம பவானிய பாருடா..

அந்த பனிப்பாறையின் நடுவே உறைந்து நிற்கிறாள் அந்த பெண்..

சித்தார்த் தடுமாறி கீழே விழுகிறான்..

கண்கள் விரிய.. அவளை பார்க்கின்றான்..

பனிப்பாறைவந்து நிற்க..

சித்தார்த் எழுகிறான்.. கண்களை துடைக்கின்றான்..

தந்தை அவனிடம் வர..

சித்தார்த் அவரை தள்ளி நடக்க..

தந்தை
டேய்..

சித்தார்த் லீவரை நோக்கி நடக்க..

தந்தை அவனை ஓடி இழுக்க..

சித்தார்த் அவரை தள்ளி விட்டு.. லீவரை தட்ட..

தந்தை ஓடி நிறுத்த..

சித்தார்த் ஓடி வந்து மீண்டும் லீவரை இழுக்கப் பார்க்க..

சித்தார்த் அவரை தள்ளி விடுகிறான்..

அவர் கீழே விழ..

சித்தார்த் லீவரை ஓங்கி அடிக்க..

லீவர் உடைந்து..

பனிப்பாறை கீழே நோக்கி நகர..

சித்தார்த் ஓடி வந்து பனிப்பாறையை அணைத்து அந்த பெண்ணோடு கீழிறங்க..

தந்தை
(பதறி)

அட பாவி..

எழுந்து ஓடி அவனை இழுக்க..

CUT TO

54C. EXT - ICE FACTORY - NIGHT

காரில் சாய்ந்திருந்த பிசாசு வேகமாக நகர..

காரில் ஒரு குழி தெரிய..

CUT TO

54D. INT - ICE ROOM - NIGHT

சித்தார்த் பிடியை விடாமல் பனிப்பாறையை பிடித்திருக்க..

தந்தை ஓடி Switch-களை தட்ட..

பாறை இறங்க..

ஜன்னல் உடைக்கப்பட்டு பிசாசு உள்ளே பறந்து வர..

தந்தை மிரண்டு பார்க்க..

பிசாசு அந்த அறையை சுற்றி வந்து..

இறங்கும் பனிப்பாறையை சுற்றி வந்து பனிப்பாறைக்குள் புக..

பனிப்பாறை உடைய..

சித்தார்த் கீழே விழ..

அந்த பெண்ணின் பிணம் கீழே விழ..

சித்தார்த் அந்த பெண்ணின் கையை பிடிக்க போக..

பிசாசு அவர்கள் நடுவே பறந்து வந்து..

சித்தார்த் கையை தட்டிவிட்டு..

அந்த பெண்ணின் தலை முடியை பிடித்து இழுத்துப் போக..

சித்தார்த் உருண்டு விழ..

தந்தை அவனை பிடித்துக் கொள்ள..

CUT TO

54E. EXT - ICE ROOM - NIGHT

ஒரு பெரிய கதவு உடைய..

பிசாசு அந்தப் பெண்ணின் பிணத்தை தரதரவென்று தரையில் இழுத்து வர..

சித்தார்த் வெளியே ஓடி வர..

தந்தையும் ஓடி வர..

காற்று பலமாக அடித்து அவர்களை கீழே வீழ்த்த..

பிணம் தரையில் இழுத்து செல்லப்பட..

பிசாசு தலைதூக்கி காற்றில் நடக்க..

சித்தார்த்தும் தந்தையும் போராடி காற்றில் நடக்க..

பிசாசு பிணத்தை இழுத்துக்கொண்டு அந்த சிகப்பு காரை சுற்றி வந்து.. கை நீட்ட.. குழி.. ஓட்டையாக..

காரில் ஓட்டை விழுந்து பெட்ரோல் கொட்ட..

பிசாசு அந்தப் பெண்ணை தூக்கி காற்றில் எழ..

காரின் பின் கதவு திறக்க..

பிசாசு அந்த பெண்ணின் பிணத்தோடு உள்ளே போக..

கதவு சாத்திக் கொள்ள..

CUT TO

54F. INT - CAR - NIGHT

பிசாசு திரும்பி தன் கையை வெளியே நீட்ட..

ஓட்டையில் நெருப்பு பிடிக்க..

கார் எரிகிறது..

CUT TO

54G. EXT - ICE FACTORY - NIGHT

சித்தார்த்தும் தந்தையும் கதறி ஓடி வர..

கார் வேகமாக எரிய..

சித்தார்த் கீழே விழுகிறான்..

தந்தை ஓடி வந்து சித்தார்த்தை தூக்க..

கார் எறிகிறது..

சித்தார்த்தும் தந்தையும் முட்டிப்போட்டு பார்க்க.. கண்களில் கண்ணீர்..

CUT TO

54H. INT - CAR - NIGHT

பெண்ணின் உடல் பிசாசின் மடியில் படுத்திருக்க..

பிசாசு கண்களில் கண்ணீர்..

பிசாசு திரும்பி தன் தந்தையையும் காதலனையும் கடைசியாக பார்க்க..

அந்த பிசாசின் முகம் அழகான அந்த பெண்ணின் முகமாக மாற..

கார் பெரிதாக எறிகிறது..

சித்தார்த் எழுந்து வர..

தந்தை தடுமாறி நடந்து வர..

காரின் நெருப்பு கொழுந்துவிட்டு எறிய..

அந்த காரிலிருந்து ஒரு பெரிய ஒளி வர..

சித்தார்த்தும் தந்தையும் அதை பார்க்க..

அந்த ஒளி பெரிதாக மாறி..

ஒரு தேவதையின் உருவமாக மாறி நிற்க..

சித்தார்த் மண்டியிட..

தந்தை கை கூப்பி வணங்க..

அந்த ஒளி தேவதை உருமாறி வானத்தில் ஏறி.. காற்றோடு கலக்கிறாள்..

DISSOLVE

55. INT - SUBWAY - DAY

அந்தக் குழந்தை பிச்சையெடுக்க..

Violin இசை..

சித்தார்த் நடுவில் நின்றபடி Violin வாசிக்க..

இசை காற்றோடு கலக்க..

-------------- END CREDITS ----------------